



உத்தர கோவை, பிரதிஷ்டா கிரியா கலாபமணி

சிவஸ்ரீ

# வை.மு.பரமசாமிக்குருக்கள்

அவர்களின்

University of Jaffna
230.92
PAR
187281(AR; MAIN)

# வள விழா மலர்

28 - 2 - 1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

உத்தர கோவை

பிரதிஷ்டா கிரியா கலாபமணி

# சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள்

அவர்களின்

# பவள விழா மலர்





வெளியீடு:

**பவள விழாச் சபை, கோப்பாய்.**

UNIVERSITY OF JAFFNA LIBRARY
UNIVERSITY OF JAFFNA SRI LANKA
ARCHIVES
230·92 PAR
187281
University of Jaffna
187281
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் பவள விழா குழுவினர் விபரம்

போசகர்: சிவஸ்ரீ கார்த்திகேச குருக்கள், சிவஸ்ரீ ப. சண்முகராசா குருக்கள்
சிவஸ்ரீ சந்திரசேகரசர்மா

தலைவர் : திரு ந. சிவகடாட்சம்
(அதிபர், யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

இணைச் செயலாளர் : 1 திரு. வை. குணசேகரம்
(அதிபர், யா / கோப்பாய் நாவலர் வித்தியாசாலை)

2. சிவஸ்ரீ மு. ப. பாலசுப்பிரமணியக் குருக்கள்
(கோப்பாய் வடக்கு)

பொருளாளர் : திரு. அ. இராசரத்தினம்
(அதிபர், யா / இருபாலை சீ. சி. த. க. பாடசாலை)

**குழு உறுப்பினர்கள்**

1. திரு S. K. தங்கவடிவேல்
(விலை மதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்)

2. திரு. த. தர்மராசா
(தலைவர், சிறி சித்திரவேலாயுதர் சுவாமி கோவில் தரும பரிபாலன சபை)

3. திரு. ச. விக்னேஸ்வரன்
(பொருளாளர், சபாபதி சனசமூக நிலையம்)

4. திரு. கெ. காண்டீபன்
(தலைவர், வணிகர் கழகம், இருபாலை)

5. திரு. மு. முரளீதரன்
(தலைவர், வெள்ளெருளைப் பிள்ளையார் கோவிலடி சனசமூக நிலையம்)

6. திரு. மு. விக்னேஸ்வரன்
(ஆசிரியர், யா / சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலை)

7. திரு. க. விநாயகலிங்கம்
(அதிபர், யா / கோப்பாய் வடக்கு றோ. க. த. க. பாடசாலை)

8. திரு. செ. கந்தசாமி
(நிர்வாக சபை உறுப்பினர், பலானை கண்ணகை அம்மன் கோவில் பரிபாலனசபை)

9. திரு. அ. அரசபிள்ளை
(செயலாளர், விவசாயிகள் சம்மேளனம், கோப்பாய் வடக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்.

LIBRARY OF JAFFNA SRI LANKA
ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழா வெளியீடு



நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான விசேஷகுரு
'பிரதிஷ்டா கிரியா கலாபமணி' 'வேதாகம கிரியா விநோதன்'
சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள், இராஜேஸ்வரி அம்மா
தம்பதிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரகோவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

" வேத சிவாகம பிரதிஷ்டா ஸரஸ்வதி "

## சிவஸ்ரீ மு. பரமசாமிக் குரு

# பஞ்சரத்னம்

1. நாதஓங் கார மந்த்ரம் நளினமுக் வசீ கரணம்
போத சிவ யோக தந்த்ரம் பூஜாஸ்ரீ சக்ர யந்த்ரம்!
வேத மந்த்ர அதி ஸுகந்தம் வியாகரண மஹா வித்வம்
பூதல கோவை வாஸம் பரமசாமி குர்வே நம:!!

2. ஞானசிவ வேதா கம பிரதிஷ்டா ஸரஸ் வதீ!
பானுப்ர காச தேஜஸ் ப்ராஹ்மண க்ருபா நிதி!
தேனுப்ர தாப வித்யா தேவ பாஷா தத்வ நிதி
கானப்ரிய குருச் ரேஷ்ட பரமசாமி குர்வே நம:!!

3. நாகபூ ஷணீ பாதம் நளினஹிர் தயசஞ் சாரம்
யாகாதி விதிக் ரம பூதசுத்தி அலங் காரம்!
யோக நிஷ்டா சிவபூஜா க்ரியாபாக மனோ பாவம்
பாகபூர்வப் ப்ர யோகம் பரமசாமி குர்வே நம:!!

4. அநேககும் பாபி ஷேகம் ஆச்சார்ய குரு ச்ரேஷ்டம்
மனோ மந் ரோப தேசம் மஹானுபாவ குருப வித்ரம்!
விநோதினீ பக்த ஸாக்தம் வீணாவித்வ புரநி வாஸம்
பிநாகபாணீ ப்ரியாச் சார்யம் பரமசா மி குர்வே நம!!

5. அம்பிகா தேவிஸ் தோத்ரம் அநேக - புஸ் தகாச் சார்யம்
கும்பாபி ஷேக க்ஷேத்திரம் குருத்வம் அதிஉந் நதம்!
சம்புவிஸ் வாசப் ரியம் சக்திக்ரு பாக டாக்ஷம்
மங்கள சுபஸம்ஸ் காரம் பரமசாமி குர்வே நம:!!

இயற்றியவர்:

'' கவிதாச்சார்யா '' வீணாவித்வபுர

மஹா வித்வான் பிரம்மஸ்ரீ. மா. த. ந. வீரமணிஸர்மன்

வழங்கியவர்

27 - 01 - 1999 சுபா சச்சிதானந்த குருக்கள் (மங்களம் ஐயர்)

கிரியாபாக வினோதன் துன்னையம்பதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ வை. மு. பரமசாமி குருக்கள் அவர்களின் பவளவிழாக் குழுவின்

# அறிக்கை

சித்தாந்த பானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்களுக்கு யாழ் இந்து சமயப் பேரவை பட்டம் வழங்கிக் கௌரவித்ததையொட்டி கோப்பாய் வடக்கு கந்தசாமி கோவிலடி சனசமூக நிலையம் நடாத்திய பாராட்டு விழாவின் போது சிவஸ்ரீ வை. மு. பரமசாமி குருக்கள் கலந்து சிறப்பித்தார். அவ் விழாவின் போது அங்கிருந்த பெரியோரிற் சிலர் குருக்கள் ஐயாவின் சிறப்புக்கள் பற்றியும் அவர் செய்த கும்பாபிஷேகங்கள் தொடர்பாகவும், அவர் வெளியிட்டுள்ள நூல்களின் சிறப்புக்கள் பற்றியும் கலந்துரையாடினர். குருக்கள் ஐயா அவர்கள் எழுபத்தைந்து வயது தாண்டிய நிலையிலும் ஓர் இளம் பிராமணரைப் போல் பெருங் கும்பாபிஷேகங்களைத் தலைமை தாங்கி நடாத்தும் முறையைக் கண்டு வியந்து, அவருக்கும் விழா ஒன்று எடுத்து அவரின் செயற்பாடுகளை வெளிக்கொணர வேண்டும் என விரும்பினர்.

இது தொடர்பான அவரின் புதல்வர் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்களிடமும், அவரின் பெறாமகன் சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்களிடமும் உரையாடிய போது அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டனர். அவர்களுடன் இது தொடர்பாக நாங்களும் குருக்களின் வீட்டிற்குச் சென்று கலந்துரையாடினோம் குருக்கள் ஐயா முதலில் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தணப் பெரியோர்களைக் கௌரவிப்பதன் மூலம் இளம் உள்ளங்களில், பெரியோரை மதிக்கும் தன்மையை உண்டாக்குதல், சமய அநுட்டானங்களைப் பின் பற்றுவதால் உண்டாகும் நன்மைகளை உணரவைத்தல், கோயிலுக்குச் சென்று முறைப்படி வழிபடும் பழக்கத்தை உண்டாக்கல், பண்ணுடன் திருமுறைகள் ஓதுதல், சமயப்பணிகளில் விருப்புடன் ஈடுபடல், உயிர்களிடத்தில் இரக்கம் காட்டுதல், நாளாந்த சமயக் கடமைகளை தவறாது செய்தல் வேத ஆகம முறைகளைத் தெரிந்துகொள்ளல், போன்றவற்றை உண்டாக்கலாம் என்றோம். அதன் பின், ஐயா ஒத்துக் கொண்டார்கள்.

அதன் பின், கோப்பாய்ப் பகுதியில் அமைந்துள்ள கோயில் பரிபாலன சபைகள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் நிர்வாகத்தினரையும், ஊரில் வாழும் பெரியோர்களையும் அழைத்து ஆலோசனைகள் பெற்று விழாவுக்கென ஒரு சபை அமைத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவை ஒரு கோயிலில் வைப்பதே சாலச் சிறந்தது என்ற விழாச்சபையின் ஏகோபித்த முடிவுக்கு அமைய நாம் பலானைக் கண்ணகை அம்மன் கோயிலில் பவளவிழாவைக் கொண்டாடுவதாகத் தீர்மானித்து அதன் பரிபாலன சபைக்குத் தெரிவித்தோம். அவர்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் ஐயா அவர்களது பவள விழாவைக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுவதெனத் தீர்மானித்தோம். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபர் அதற்கான சகல உதவிகளும் வழங்குவதாக ஒப்புக் கொண்டார்.

பவள விழா அன்று ஐயாவுக்கு பட்டம் வழங்கிக் கௌரவித்தல், மலர் வெளியிடுதல், பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல், வாழ்த்துப்பா வழங்கல் போன்றவற்றைச் செய்வதெனத் தீர்மானித்தோம்.

நிதிவிடயமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பிரதமகுருக்கள் துர்க்கையம்மன் தேவஸ்தானத் தலைவர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோரை அணுகிய போது எமது பணியைப் பாராட்டி வாழ்த்தி உற்சாகம் தந்து நிதியுதவியும் செய்தார்கள். அவர்கள் தந்த உற்சாகத்துடன் ஊரவர்கள், யாழ் வணிகப் பெருமக்கள். ஐயாவின் அன்புக்குரியவர்கள், நயினை நாகபூசணியம்மன் தேவஸ்தானத்தைச் சேர்ந்தோர், அவ்வூர் மக்கள், வணிகர்கள் போன்றோர் தாராளமாக நிதியுதவி செய்தனர்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் வேத உபநிடத ஆகம சாஸ்திர அறிவு மிக்க அந்தணர்களில் மிகவும் உயர்ந்த இடத்தில் இருப்பவர் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள். அவர், தாம் கற்றவற்றை மற்றையோருக்கும் போதித்தும், இலகுவில் மக்களுக்குப் புரியும்படியாக அடிக்கடி நூல்களை வெளியிட்டும் வருகிறார். இந்த வகையில் இன்று எடுக்கப்படும் விழா பொருத்தமானது மட்டுமல்ல, பெறுமதி வாய்ந்தது மாகும். இப்படியான விழாவில் கலந்து சிறப்பிக்கும் அனைவரும் பேறு பெற்றவர்களே! வாழ்க அவர் நாமம். வளர்க அவர் தொண்டு.

**K. V. குணசேகரம்**
அதிபர்
யா / கோப்பாய் நாவலர் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகோவை சித்தாந்த பானு சோ. சுப்பிரமணியக் குருக்கள்

வழங்கிய

# ஆசியுரை

முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன் எனச் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் தொகையிலே சிறப்பித்துப்பாடப் பெற்ற பெருமை வாய்ந்தது ஆதி சைவ சிவாச்சாரியார்களினது பாரம்பரிய மாகும். ஆதி காலத்திலே சிவனுடைய ஐந்து முகத்திலும் தீட்சை பெற்ற,

கௌசிக காசியபச்சைவ
பாரத்வாஜச்ச கௌதம :—
அகஸ்த்யச்சைவ பஞ்சைதே
பஞ்சவக்த்ரேசு தீக்ஷிதா :—

இந்த ஐந்து பெயருடைய இருஷிகள் பரம்பரையாக தீக்ஷையும் அபிஷேகமும் பெற்றவர். கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி உற்சவாந்தம் உற்சவாதி பிசரய சித்தாந்தமான சைவாலய கிரியை களையும் சைவாகம் கிரியையும் நடாத்தி வைப்பதற்கு அதிகாரம் பெற்றவர்கள். இந்த வழியில் தீக்ஷ அபிஷேகம் அதிகாரம் பெற்ற சிவாச்சாரியார்களேயாம் ஆதிசைவ பிராமண வம்சத்தவர்களாவர்.

ஓதுதல், ஓதுவித்தல், யாகம் செய்தல், செய்வித்தல் தானம் வழங் குதல், தானம் ஏற்றல் இவை எல்லாவகை அந்தணர்களுக்குரிய காரி யங்களாகும். சாஸ்திர நெறிகளை நன்கு தெரிந்து கொண்டு தாம் நன்னெறிக்கு ஒழுகி ஏனையோரையும் நல்வழியில் நிலை நிறுத்த வல் லவரே சிவாச்சாரியார் எனப் பெயர் பெறுவார்.

இந்தச் சிவாச்சாரியார் பரம்பரை சிவபெருமானிடத்தே தோற்று விக்கப்பட்டு மத்திய இந்தியாவில் உள்ள கோதாவரி நதி தீரத்திலே இருந்த மந்திர காளிஸ்வரம் எனும் சிவதலத்திறகு நான்குபுறமும் அமைந்து இருந்த ‘ ஆமர்த்தகம் ’ ‘ புஸ்பகிரி ’ ‘ கோவர்த்தனம் ’ ‘ இரணபத்திரம் ’ என்னும் நான்கு மடங்களின் வழியாக விருத்திய டைந்து வந்தது. இந்த நான்கு மடங்களிலும் சிவாச்சாரியார் பரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையினர் சிவாகமங்களைப் படித்துத் தீட்சை முதலான சமயக் கிரி யைகளை அனுட்டித்தும் சமய பரிபாலனம் செய்து கொண்டு இருந் தனர் தென்னாட்டில் இருந்து யாத்திரா மார்க்கமாகச் சென்ற அர சன் ஒருவன் இவர்களைக் கண்டு இவர்களைத் தென்னாட்டிற்கு. அழைத்து வந்து சைவ ஆலயங்கள் தோறும் குருமாராக நியமித்தான் இந்த சிவாச்சாரியார் பரம்பரை எல்லா தேவஸ்தானத்திலும் பரம் பரை பரம்பரையாக வளர்ந்து வருகிறது. இந்த சிவாச்சாரியர் பரம் பரையில் சிலர் இந்தியாவுக்கு வெளியே உள்ள இலங்கை மலேசியா போன்ற ஆசிய நாடுகளில் குடியேறி அங்குள்ள தேவஸ்தானங்களில் குருமாராக விளங்கி வருகின்றனர். இலங்கையில் உள்ள ஒவ்வொரு தேவாலயங்களிலும் பரம்பரை பரம்பரையாகச் சிவாச்சாரியராக இருந்து சமயக்கிரியைகளைச் செய்து வருகின்றனர். இவ்வாறான சிவாச் சாரியார் பரம்பரை கோப்பாய்க் கிராமத்திலும் இருந்து வருகிறது. இவற்றுள் ஒன்று வடகோவையில் உள்ள சைவநாதக் குருக்கள் பரம்பரையாகும். இவர்களினது பரம்பரையினர் நல்லூர் கந்தசாமி கோவில், நயினாதீவு நகபூசணி அம்மன் ஆலயம் போன்ற பிரசித்தி பெற்ற பல ஆலயங்களில் கும்பாபிஷேகம், மகோற்சவம் நடாத்து கின்ற பெருமைக்குரிய சிவாச்சாரியார்களாக விளங்கி வருகின்றனர். தற்போது நல்லைக் கந்தசுவாமி கோவில் தவிர்ந்த ஏனைய தேவஸ் தானங்களில் விஷேட கால சிவாச்சாரியராக ஆலயக் கிரியைகளை நடாத்தி வருகின்றனர். இந்தக் குரு பரம்பரையில் வைரவநாதக் குருக்கள் அவர்களும் அவரது புதல்வர் முத்துக் குருக்களும் புகழ் பெற்ற குருவராகத் திகழ்ந்தனர். இந்த முத்துக் குருக்களினது மூன்றா வது மகனாக விளங்கி வருபவர்தான் இப் பவள விழா நாயகன் சிவ ஸ்ரீ பரமசாமிக் குருக்கள் அவர்கள். இவர் சிறுவயதிலிருந்து முறைப் படி கல்வி பயின்று சைவாலயக் கிரியைகளை பிரதிஷ்டை, உற்சவங் கள் முதலியவற்றைச் சாஸ்திர விதிப்படி 'மந்ர தந்ரகிரியா முத்ரே பாவனா பாவகர்ப்பிதம்.' என்ற வகையில் சிறப்பாகவும் சிவாகம விதி வழுவாமலும் செய்யக் கூடிய திறமை வாய்ந்தவர். இலங்கையில் பல இடங்களில் பிரதிஷ்டை, மகோற்சவங்கள் முதலிய பல சைவா லய கிரியைகளை நடாத்தி வைத்த பெருமைக்குரியவர். இவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேஷ்ட குமாரன் முத்துக்குமாரசாமிக் குருக்கள் நயினை நாகபூசணி அம்மன் தேவஸ்தானத்தில் சிறந்த குருவாகப் பணியாற்றி வருகின்றார்.

மேலும் இத்தகைய பெருமைக்குரிய சிவாச்சாரியார் எமது சைவ உலகத்திற்கு பல நூல்களை எழுதி வெளியிட்டும் இன்னும் பல நூல்களாக வெளியிடவுள்ள பெருமைக்குரியவர். தமது எழுபதாவது (அகவை) ஆண்டு பவளவிழாவாகக் கொண்டாடுகிறார். இவ்விழா சிறப்பாக நடைபெற்று இவர்களுடைய மனைவி மக்கள் அனைவரும் பிள்ளைகளோடு பல்லாண்டுகாலம் வாழ்ந்திருந்து சமயப்பணி புரிய வேண்டும் 'என நயினை நாகபூசணி அம்பிகையின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

'செப்பலும் தவமுடைய செம்மையாளர்
சிறுகாலை மலர்வாவி திகழமுழ்கி
ஒப்பில் திருநீறணிந்து நியதியாற்றி
ஓவாதே ஐந்தெழுத்து உரைத்து மேன்மை
தப்பில் சிவாகம விதியால் அன்பால் இன்பாம்
தன்மையால் நன்மையாம் தகையோர் என்னும்
முப்பொழுதும் திருமேனி தீண்ட வல்ல
முறைமையார் பிறவி தெனும் திறமையோரே

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
ஆதீன கர்த்தா — பிரதமதரு

மஹாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் அவர்களின்

# வாழ்த்துரை

உயர்ந்தோர் வாழ முற்படும் உலகின் மேன்மைக்கு தர்மங்கள்தான் மூலவேரென சுக்கிரநீதி, திருக்குறள் மற்றும் அனைத்து சைவநீதி சாஸ்திரங்கள் அறிவுறுத்துகின்றன. உபநிஷதங்கள் கூட 'தர்மம்சர' தர்மங்களைச் செய் என ஆணையிடுகிறது. தர்மங்களைச் செய்வதற்கு ஆசாரம் முதன்மை பெறவேண்டுவதவசியம். ஆசாரம் சிறப்படைய ஒழுக்க சீலமே உறுதுணைதரும். இதனைத்தான் '' ஆகார ப்ரபவோ தர்மஹ '' என வேதசாரங்கள் அறுதியிடுகிறதென சாணாக்கியத்தி லிருந்து அர்த்த சாஸ்திரமும் அறியத்தருகிறது. ஆச்சிரமதர்மங்கள் வர்ணாச்சிரம தர்ம வரம்பிற்குள் அடக்கப்படும் போது அவை சீர் மிகுந்த உயரிய சிந்தனைகளினூடாசு அருமையான வாழ்வியலை நடாத்தி பேரின்ப நிலைக்கு மனித சமூகத்தை உயர்த்தி விடுகிறது. எனவே தர்மங்களை அனுஷ்டிப்பதற்கும் பிறவிப்பயனும் பிறப்பொழுக்கமும் பரம்பரை பரம்பரையாக ஊற்றெடுத்துப் பெருகுதல் வேண்டும்.

வேதங்களில் தெளிவு செய்யப்பட்டதும், ஸ்மிருதியில் விளக்கப் பட்டதும், ஸ்மார்த்தம் என்பனவற்றில் தந்த தரவுகளோடு இணைந்த கர்மாச்களை இயற்றுவது பற்றிய அறிவுரைகளில் யக்ஞோபவீத தாரணம் அவசியம் என உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. இதனையே பூசுரர்கள் அணியும் நூல் '' பூணூல் '' எனப்படுகிறது. இப்பூணூல் அணிவதற்கான சங்கல்ப்பத்திலும் கூட '' ச்ரௌத ஸ்மார்த்த விஹித நித்ய கர்மானுஷ்டான யோக்யதா ஸித்யார்த்தம் யக்ஞோபவீதம் தாரணம் அஹம் அத்ய கரிஷ்யே, என சங்கல்பிக்கப்படுகிறது. ஓர் சமூகம் இந்த வகையில் வாழவேண்டு மென்பதற்காக இறைவனே தீக்ஷிதர்களான தில்லை மூவாயிரவரையும், முருகப்பெருமான் திரிசுதந்தீர பிராமணர்களையும் சிருஷ்டித்து தக்க வைத்தருளினர் வேதங்கள் வகுத்த வியாசரதும், ஸ்மிருதிகளை அருளிய முனிவர்களது வழிகாட்டல்களில் தெளிவான நல் வழிகள்தான் மனிதசமூகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் மேம் பாட்டிற்கு உறுதுணைதரும். எவன் வர்ணாச்சிரம தர்ம வாழ்விற்குள் புகுந்து வாழ்வினை மேம்படுத்துகிறானோ, அவனே புருஷ தர்மம் செய்தவனுமாவான். அவன்தான் மஹானுபாவன். புருஷ சூக்தம் புருஷ வடிவின் அம்சங்களைக் கூறுகையில் சரீரத்தின் உட்பகுதியில் இருதய ஸ்தானத்தின் கீழ் ஓர் வஸ்து தொங்கிநிற்கிறது. அதுதான் மகேஸ்வரனுமாவான். எனவே சரீரமெடுத்த ஆன்மா மகேஸ்வரனேதான். பெற்றுடுத்த தந்தையை மகவு எவ்வாறு வழி பட்டு, அணைந்து பூசிக்கிறதோ, அதே போன்று சரீரமெடுத்த ஆன் மாவும் இறைவனை தினமும் நினைந்து, வேண்டிய கர்மாக்களை ஆற்றி பூசித்து ஈடேறுவதே பிறவிப் பயனென நூல்களும் அறுதியிட்டுக் கூறும். ஆறுமுக நாவலர் கூட "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தி பெறுவதற்கே" என எமக்கு அறியத் தருகின்றார். இந்தச் சரீரம் "ஆத்யம்கலு தர்ம ஸாதனம்" என்றபடி தர்மங்களி னது தர்ம சாதனம் என இருஷிகளும் விரிவுபடுத்தியுள்ளனர்.

வர்ணாச்சிரம தர்ம வாழ்க்கையை நடாத்த வழிகாட்டல்களும் வேண்டுமே. அதற்குத்தான் சிவனும், முருகனும், பிரமதேவரும் அந் தணர்களை சிருஷ்டித்தனர். ஒரு கோத்திர பரம்பரை வழி முறையில் இன்றும் அந்தணர்கள் பெருகி வாழ்கிறார்கள். சமயநெறி வாழ்க் கையோடு இறைவனை நினைந்து கொள்ள ஆன்மா இறைவனோடு வியப்படுவதற்குத்தான் ஆலயங்கள் தோன்றின. அவ்வாலயங்களிலே சிவார்ச்சனைகள் புரியும் அந்தண சிரேஷ்டர்கள் ஆற்றும் அகப் புறம் பூசைகள், கர்மாக்கள், ஆசீர்வாதங்கள் அனைத்தும் உலகம் அறநெறியில் ஈர்ந்து சிவமயமாகி உலகினரை இன்பமடையச் செய்ய நன்றாகவே உதவுகிறது. இதற்கும் அந்தணர்கள் வர்ணாச்சிரமிகளாக இறைவன் வகுத்துக் கொடுத்த கடமைகளைச் செய்வதில் முக்கிய கவனஞ் செலுத்துதல் அவசியம். தசரதனது புத்ரகாமேஷ்டியாகத்தை நடாத்த வசிட்டர் யாகாதிபதியாக ரிஷ்ய சிருங்கரை நியமித்தபோது விஸ்வாமித்திரர் வசிட்டரைப் பார்த்து: மஹான்களும் யோகிகளும் ஏராளமான தபசிகளும் அபரிமிதமாக இருக்கும் போது, இளமை யோடும் பிரம்மச்சர்ய விரதத்தோடும் அனுபவம் முற்றாத சிறுவனான ரிஷ்ய சிருங்கரை யாகாதிபதியாக்கியதன் நோக்கமென்னா" என்று வினாவ, வசிட்டர் பதில் தருகிறார்: "யாகஞ் செய்வதற்கும் வர் ணாச்சிரம வாழ்வின் சீருக்கு உடந்தையாக இருப்பவனே தகுதியான வன். புருஷ தர்மங்களின் நிலைப்பாட்டிற்கு எவன் வலுப்படுத்தும் காரணியாக விளங்குகிறானோ, அவனே யாககர்மங்களுக்கும் உரியவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனாவான். இவை இளமைக்கும் அனுபவத்திற்கும் தொடர்பற்றவை. எனது ஞானக் கண்ணில் ரிஷ்ய சிருங்கன்தான் யாகாதிபதியாக இருக்க உரியவன் எனத் தெரிகிறது'' என்றதும், சமாதானங் கொண்ட விஸ்வாமித்ரர் அப்போதுதான் வர்ணாச்சிரமத்தின் புனிதத்தன்மையையும் உணர்ந்தார். சரீரமெடுத்த ஆன்மா உடல் வளர்வது போன்று வளர்வதில்லை. அந்த ஆன்மா சிவனேதான். சிவம் சிவத்தையடைய சிவமயமான உலகில் சிவ சம்பந்தமாக வாழ மனசு முயல வேண்டும். இதற்கு வழிகாட்டிகளாக வர்ணாச்சிரம வாழ்வினை மேற்கொண்டு வாழும் அந்தணர்களே தகுதியானவர்கள். இந்த வகையில் கோப்பாய் சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் அவர்கள் இன்று முதன்மை நிலையிலிருந்து செயலாற்றுவதை நாடு நன்கறியும். அகஸ்தியரைப் போன்றதோர் உருவமைப்பு. ரிஸ்யசிருங்கரைப் போன்று இளமயில் பூரிப்பவர். வர்ணாச் சிரமங்களை நன்கு பேணிக் காப்பவர். ஒழுக்க சீலர். கல்வியை கசடறக் கற்று ஞானக்கண் மூலம் இறைவனைத் தரிசிப்பவர். இந்த உலகம் சிவமயமாக வேண்டுமென்ற விருப்பால் மக்களை நல்வழியிலிட்டுச் செல்ல வழிகாட்டி நூல்கள் பலதையெழுதி வெளியீடும் செய்துள்ளார். கிரியைகள் பலதுமாற்றி இறைவனை எங்கெல்லாம் சான்னித்யப் படுத்தலாமோ அங்கெல்லாம் சான்னித்யமாக்கி மக்களுக்கு அருள் புரியுமாறு இரந்துநிற்பவர். அருமையான அந்தண சிரேஷ்டர். ''நீவிர் நீடூழி வாழ்க வாழ்க'' என அன்பர்களது வாழ்த்துக்களைத் தினமும் பெற்றுக் கொண்டேயிருக்கும் பரமசாமிக் குருக்களது பவளவிழாவினை நடாத்த முன் வந்தோரின் புண்ணியச்செயலை நாடே வரவேற்று மகிழ்கிறது. அந்த மகிழ்ச்சிச் சாகரத்தினுள் யானும் இணைந்து மகிழ்ந்து பரவசப் படுகிறேன். '' நீவிர் நீடூழி வாழ்க வாழ்க '' என வாழ்த்தி எல்லாம் வல்ல மாவைக் கந்தசுவாமியாரது திருவருள் உங்கட்கு அபரிமிதமாகச் சொரியவேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

சுபமஸ்து

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளவிழாச் சபையின் சார்பில்

தலைவர் ந. சிவகடாட்சம் அவர்களின்

# வாழ்த்துரை

கோவையம்பதி பல அறிஞர்களை எமக்களித்த புண்ணிய பூமி. பண்டிதர் சபாபதி நாவலர் தொடக்கம் இன்று எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் 'சித்தாந்த பானு' சிவஸ்ரீ. சோ. சுப்பிரமணிய குருக்கள், இன்றைய பவள விழா நாயகர் சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக் குருக்கள் வரை அறிஞர்களின் பட்டியல் நீண்டு கொண்டு செல்லுகின்றது. இவர்கள் எமது சமயத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிவரும் பணிகள் அளப்பரியன.

எழுபத்தொன்பதாம் வயதினிலும் திடகாத்திரமான உடலுடனும். உறுதியுடனும். இளைஞர் போல் துடிப்புடனும் செயற்படும் எமது பவளவிழா நாயகர் நயினை நாகபூசணி அம்மன் தேவஸ்தான விசேட குருக்களாக பணியாற்றுகின்றார். யாழ் மாவட்டத்தில் பிரபலமான. கோயில் கும்பாபிஷேகங்களில் எல்லாம் பிரதம குருவாக இருந்து பணியாற்றியவர். பல சமய நூல்களை எழுதி வெளியிட்டவர். தற்பொழுது பல நூல்களை எழுதிக் கொண்டிருப்பவர் அவற்றின் சில பகுதிகள் இம் மலரை அலங்கரிக்கின்றன.

இவ் அறிஞரின் பவள விழாவினை 94ம் 95ம் ஆண்டு காலத்தில் கொண்டாடியிருக்க வேண்டிய போதிலும், அன்றைய சூழ்நிலை இடம் பெயர்வு, மற்றும் மீளக் குடியேறல் ஆகியன இந் நிகழ்வைப் பின் போடக் காரணிகளாக இருந்தன. இவ் வருடம் இந் நிகழ்வு நடை பெற திருவருள் சித்தமாகியுள்ளது.

வாழும் பொழுதே பெரியோர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்பதற்கேற்ப இந்நிகழ்வு இந்துக் குருமார்களுடன் இணைந்து கோவையூர் மக்களால் நடாத்தப்படுகின்றது. குருக்கள் ஐயா தமது சமயப்பணியுடன் மேலும் பல அறிவு சார்ந்த நூல்களை எழுதி இவ்வுலகிற்கு வழங்க வேண்டுமென இறையருளை வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**பேராசிரியர் கலாநிதி ப. கோபால கிருஷ்ணஐயர்.**

தலைவர், — இந்து நாகரிகத்துறை, யாழ், பல்கலைக்கழகம்.
— சேர், பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம்,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம், யாழ், பல்கலைக் கழகம்.
— " நியந்த்ரீ " சிவன்கோவில், நல்லூர்.

வடகோவை 'பிரதிஷ்டா கிரியா கலாபமணி,' 'சிவாகம' கலாநிதி சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்கள்' அவர்களுக்கு நடைபெறும் பவள விழா, அவர் சார்ந்துள்ள சிவாச்சாரிய மரபுக்குக் கிடைக்கும் அதி உயர் கௌரவமாகும் எனில் மிகையில்லை. இன்று யாழ்ப்பாணத்தில் தமது புலமையாலும் அனுபவத்தினாலும் புகழ் பரப்பி நிற்கும்சிவாச்சாரியர்களுள் சிவாச்சாரிய சிம்மமாகத் திகழ்பவர் எங்கள்அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராகிய சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள். இவர் சிறந்த சிவாச்சாரிய மரபினைச் சார்ந்தவர். யாவராலும் போற்றுதற்குரிய ஆசாரிய லட்சணம் பொருந்தியவர். வரலாற்றுப் புகழ் மிக்க தலமாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தின் நைமித்திகக் குருவாக விளங்குபவர் நாட்டில் நிலவிய இன்னல் மிக்க காலங்களிலும் கடமையுணர்ச்சியுடன் அம்பிகையின் நைமித்திகக் கைங்காரியங்களைக் குறைவின்றி நிறைவேற்றிய அந்தணப் பெருந்தகை. இச்சிறந்த பண்பின் காரணமாக சைவப் பெருமக்களின் அபிமானத்திற்கு உரியவராகத் திகழ்பவர் 'திறமையுடன் செயல் புரிதலே யோகம்' என்ற கீதையின் வார்த்தைக் கேற்ப தனது கிரியைத் துறையில் புலமைமிக்கவர். எண்ணிய கருமத்தை குறைவின்றி நிறைவேற்றி வைக்கும் மனோபக்குவமுள்ளவர். தமக்கேயுரிய ஆற்றல் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் பயனாய் பல நூல்களை எழுதி சமய அறிவுப் பரம்பலுக்கு அருந்தொண்டாற்றி வருபவர். அம்பிகை வழிபாட்டில் பாரம்பரியமாக ஈடுபட்ட காரணத்தால் 'அம்பிகை வழிபாடு' என்ற அரிய பெரிய நூலை எழுதி வெளியிட்ட அனுபவம் மிக்கவர்.

சிறந்த குடும்பத் தலைவனாக விளங்கி தனது மைந்தர்களையும் பக்திபூர்வமான சிவாச்சாரிய பணியில் அமர்த்தியுள்ள பெருமை இவருக்குண்டு. அமைதி, பொறுமை, எளிமை, பக்தி, மன உறுதி ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்புகளுக்குரியவர். அடியார்கள் அனைவரையும் தம் இன் சொற்களால் அரவணைத்துச் செல்லும் அன்புள்ளம் கொண்டவர். மந்திரம், கிரியை, பாவனை ஆகிய முத்திறத்தாலும் துவஜாரோகணம், கும்பாபிஷேகம் ஆகிய கிரியைகளை நிகழ்த்தும் பாங்கு அனைவரது உள்ளங்களிலும் பக்தியுணர்வைப் பரிணமிக்கச் செய்வதாகும். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி இறைபணியாற்றும் ஆகமசீலர்.

பல வருடங்களுக்கு முன்னர் பாணாவிடை சிவாலயத்தில் இப் பெரியாருக்கு 'சிவாகம கலாநிதி' என்ற பட்டத்தினை ஆலய அறங்காவலர்கள் வழங்கிய வைபவத்தில் யான் பங்கு கொண்டமையும், அவரது அம்பிகை வழிபாடு என்னும் நூல் 1997 ஆம் ஆண்டு எமது தலைமையில் வெளியிடப் பட்ட நிகழ்வும் இன்றும் எம் மனதில் பசுமையான நினைவலைகளாக உள்ளன. இவரது 'சிவார்ச்சனா சந்திரிகா தீபிகை' என்ற நூல் வெளியீட்டிலும் பங்கு கொண்டதையும் நினைவு கூர்வதில் மகிழ்கிறேன். தமக்கேயுரிய சிவாச்சாரிய பணிகளினூடே கிரியை நூல்களைக் கற்பதிலும் அவற்றைத் தொகுத்துவைப்பதிலும் இவர் கொண்டுள்ள ஈடுபாடு இத்துறை சார்ந்த ஏனையோருக்கும் சிறந்த முன்மாதிரியாக அமைவதாகும்.

பல்வேறுதுறைகளில் சிறந்து விளங்கும் இப்பெரியாருக்குரிய பவள விழாவினை அவர் வாழும் கிராமமாகிய வடகோவை வாழ் மக்களின் சார்பாக சமய நிறுவனங்கள் நடத்த முன் வந்துள்ளமை அனைவரது பாராட்டுக்குமுரிய முயற்சியாகும். இப்பெரியாரைக் கௌரவிக்கும் இவ்விழாவினால் சிவாச்சாரிய உலகம் பெருமையும் மகிழ்ச்சியுமடைகிறது. விழா சிறக்க எமது நல்வாழ்த்துக்கள். உரித்தாகுக!

பவள விழா காணும் சிவாச்சாரிய பெருந்தகை இன்னும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து சைவ உலகுக்கு நல்வழிகாட்டி, சிவாச்சாரிய பணிகளைச் சிறப்புற மேற்கொண்டு சிறப்புடன் திகழ எல்லாம் வல்ல ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் பிரதேச செயலாளர்

திரு. க. கேதீஸ்வரன் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

சைவமும், தமிழும் சிறந்து விளங்கும் கோப்பாய் பகுதியில் பல அறிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களுள் சிவஸ்ரீ முத்துக் குருக்கள் பரமசாமிக்குருக்களும் ஒருவர். இன்று அன்னாருக்கு இவ்வூர் சைவப் பெருமக்கள் விழாவெடுத்து சிறப்பிப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்குருக்கள் 1994 ம் ஆண்டு இந்து சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சு நடாத்திய பக்திப் பெருவிழாவில் " வேதாகம மாமணி " என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இதுமட்டுமன்றி நயினாதீவு நாகபூசஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற விழாக்களில் " சிவாகம வாசஸ்பதி " " வேதசிவாகம பிரதிஷ்டா ஸரஸ்வதி " என்னும் பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இக்குருவானவர் " விநாயக தத்துவம் " சிௌஸர்னா சத்திரிகா தீபிகை- அம்பிகை வழிபாடு " என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். இந்த சிறந்த அறிஞரினால், இவ்வூரும், மக்களும் பெருமை பெறுகின்றனர்.

ஓர் மனிதன் வாழ்கின்ற காலத்திலேயே அவனது சேவைகள் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்படுவது வரவேற்கப்படவேண்டியதாகும். இத்தகைய செயல் ஏனையோருக்கும் ஓர் உந்து சக்தியாக அமையும்.

இவ்வகையில் இன்று பாரட்டுப்பெறும் சிவஸ்ரீ முத்துக்குருக்கள் பரமசாமிக்குருக்கள் இன்னும் நீடுகாலம் வாழ்ந்து இவ்வூர் மக்களுக்கும், சைவத்திற்கும் சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு அருள்பாலிப்பராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர்
திரு. செ. செல்வச் சந்திரன் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

" நன்றும் தீதும் பிறர்தர வாரா " என்பது புறநானூற்று மொழி. எங்கள் வேதாகம மாமணியான சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் புகழோடு தோன்றி வாழ்வாங்கு வாழ்ந்து பவள விழாக் கொண்டாடத் திருவருள் கூடியுள்ளது.

மறை மொழி உணர்ந்தவரும் மறுவிலாது வாழ்பவருமான சிவஸ்ரீ. வை.மு. பரமசாமிக் குருக்களின் நிறை மொழி ஆணையினால் இத் தமிழ் நிலம் உய்தி பெறும்.

பவள விழாக் கொண்டாடும் எம் நாயகர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, நூற்றாண்டு விழாக்காண வேண்டுமென்று இறைவனை வேண்டி ஈழத்திலும் தமிழகத்திலும் வேதாகம நெறி துலங்க வாழ்ந்து வரும் இப்பெருமகனை வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நீர்வேலி அருள் மிகு கந்தசாமி தேவஸ்தானம்
சிவஸ்ரீ சுவாமிநாத ராஜேந்திரக் குருக்கள் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

வடகோவை சிவஸ்ரீ மு.பரமசாமிக் குருக்கள் அவர்கள் பவள விழாக் காணுகிறார்கள். இந்த நிகழ்வு சைவத் தமிழ் உலகம் முழுவதற்கும் ஒரு சிறப்பான நிகழ்வாகும். ஊரெல்லாம் கூடி விழா எடுக்கும் தகுதி மிக்கவர் அவர்.

வைதிக பாரம்பரியம்; வளமான கல்விச் சூழல்; வரன்முறையான குருகுலக் கல்வி; இந்த நெறிமுறையில் வளர்ந்த குருக்கள் வேத, ஆகமப் பயிற்சியுடையவராகக் கிரியை நெறியில் சிறுவயது முதல் ஈடு பட்ட காரணத்தால் வைதிகக் கிரியை, ஆகமக் கிரியை இரண்டிலும் மேம்பாடுற்று விளங்குகிறார்.

ஐயா அவர்கள் பல்வேறு ஆன்மீக நூல்களை யாத்து வழங்கி யுள்ளார். இன்னும் இன்னும் வெளிவர வேண்டிய அவரது நூல்கள் பல உள்ளன. அவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்திருந்து பல கும்பாபிஷேகம் முதலிய கிரியைகளையும் நிகழ்த்தி, நூல்கள் பலவற்றை வெளியிட்டு, நமது சைவத் தமிழ் மக்களுக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டு மெனவும், அவரது பவளவிழாவும் மலர் வெளியீடும் மாண் புற வேண்டு மென்றும் நீர்வைக் கந்தனின் பாதங்களை வழுத்தி, வாழ்த்துரைத்து அமைகின்றேன்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காயத்திரிபீடம், தர்மகர்த்தா குருகுலம் அதிபர் சிவகாம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் வழங்கிய

# வாழ்த்துரை

வடகோவை சிவஸ்ரீமுத்துக் குருக்கள் பரமசாமிக் குருக்கள் ஒரு சிறந்த சிவாச்சார்ய பாரம்பரியத்தில் உதித்தவர். அவருடைய மூத்த சகோதரர்கள் புகழ் பெற்ற சிவாச்சார்யர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். இவருடைய அனுசரணையுடன் இவரது தமையனார் சித்தங்கேணி சிவஸ்ரீ. சிவசாமிக் குருக்கள் முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் தனது ஆலயத்தில் **33**குண்டத்தோடு மகா கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்திருக்கிறார்கள். நயினை நாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் பாரம்பரிய விசேஷ குருவாக மகாகும்பாபிஷேகம் மகோற்சவ சிவாச்சாரியராக விளங்கி வரும் இவர், சமயக்கிரியைகள் நடாத்துவதில் விஸ்தார பட்சத்தைக் கண்டிப்புடன் கடைப் பிடிப்பவர். ஆகம பிரமாணங்களுக்கு அமைய கிரியைகளை நடாத்துவாரே ஒழிய அதைக் கடைசி வரையும் மீறமாட்டார்கள். இவரிடம் உள்ள இன்னொரு சிறப்பு என்ன வென்றால் எப்போதும் பக்தியோடு கிரியைகளை நடாத்துவார்கள். பூஜா காலங்களில் தான் வேறு தெய்வம் வேறு என்ற நிலைப்பாடு இல்லாமல் தெய்வத்தோடு ஒன்றி அத் வைதமாக இருந்து பூஜைகள் நடாத்துவது இவரின் தனிச் சிறப்பம்சமாகும். சிறந்த சிவாசார்யராக விளங்குவரும் இவர் குருத்துவத்தில் மட்டும் நின்றுவிடாது, விசேஷ குருவாக மஹா கும்பாபிஷேகம், மஹோற்சவங்களை நாடத்தி வருவதுடன், சிறந்த நூலாசிரியராகவும் திகழ்ந்திருக்கிறார். கணபதி தத்துவம், சிவார்ச்சனா சந்திரிகா தீபிகை - அம்பிகை வழிபாடு முதலிய கருத்து மிக்கநூல்கள் இவரின் ஆக்கங்களாகும். தனது குமாரர்களையும் இவர் சிறப்பாக பயிற்றுவித்து சிறந்த சிவாசார்யர்களாக திகழ வைத்திருக்கிறார். இத் துணை பெருமை. வாய்ந்த இவருக்கு விழா எடுப்பது சாலச் சிறந்ததாகும். இவர் இன்னும் வெகுகாலம் ஜீவித்திருந்து சமயத் தொண்டாற்ற அன்னை நயினை நாகபூஷணி அம்மை. அனுக்கிரகிப்பாராக

ஓ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# இலங்கை
# இந்துமத குருமார் ஒன்றியம் வழங்கிய
# வாழ்த்துரை

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான விசேட குருவாகிய சிவஸ்ரீ வை. மு. பரமசாமி குருக்கள் அவர்கள் வேதசிவாகமங்களை நன்கு கற்றவர். கிரியைகளை பக்திபூர்வமாகவும் வெகுசிறப்பாகவும் செய்யும் ஆற்றல் மிக்கவர். சபாபதி நாவலர் காலம் தொட்டு சைவதமிழ்ப் பணிகளுக்கு புகழ் பெற்ற கோவையம்பதியில் பிறந்த பெருமைக்குரியவர். ஈழத்தில் பற்பல கோயில்களில் கும்பாபிஷேகம் செய்த பெருமைக்குரியவர் ஆகிய குருக்கள் அவர்கள், பிரதிஷ்டா கிரியாகலாபமணி, சிவாகமகலாநிதி, 'வேதாகமகிரியா விநோதன்' என்னும் கௌரவ பட்டங்களைப் பெற்றுகொண்டவர். இலங்கை இந்துமத குருமார் ஒன்றியத்தின் வித்துவசபையில் ஒருவராக இருந்து தன்னை அர்ப்பணித்து இந்து ஆலயங்களில் ஏழும் ஆகமசம்பந்தமான ஐயப்பாடுகளை நீக்கியும் ஆலயங்களில் நடைபெறும் கிரியை முறைகளில் ஏற்படும் சந்தேகங்களை தீர்த்து வைத்தும் இந்துமத குருமார் ஒன்றியத்திற்கு பெரும் பங்காற்றி உள்ளார். இத்தகைய பெரும் சிவாச்சாரியாருக்கு கோப்பாய் வாழ் மக்கள் ஒன்று சேர்ந்து விழாஎடுத்து அவரை கௌரவிப்பது மிகவும் பொருத்தமான ஒன்றேயாகும். குருக்கள் அவர்கள் நீடுழி காலம் வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி இன்னும் அரியசேவைகள் செய்து சீருடனும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகிறோம்.

O

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்**

**இரண்டாவது குரு மஹா சந்நிதானம்**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின்**

# அருளாசிச் செய்தி

சிவனேய செல்வர்களே,

சிவஸ்ரீ பரமசாமி குருக்கள் பவள விழா காண்பதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். அந்தண வர்ணத்திற்கு ஏற்ற வகையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிவாச்சரியார், தான் வாழ்வதோடு மட்டும் நின்று விடாது மற்றவர்கயையும் வாழ வைக்க வேண்டும் என்ற பண்புடையவர். எடுத்த காரியத்தை செவ்வனே, நடாத்தும் ஆற்றலுடையவர். பல கும்பாபிசேக விழாக்களையும் ஆலய திருவிழாக்களையும் வேத சிவாகம முறைப்படி நடாத்தி இறையருளைப் பெற்று தருபவர். சைவ சமய வழிபாட்டுக்குரிய பல நூல்களை எழுதி மக்கள் மத்தியில் இருக்கும் பல சந்தேகங்களை தெளிவு படுத்தியவர். வரலாற்றுப் புகழ் மிக்க நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் விசேஷ குருவாக இருந்து அம்பிகையினுடைய அருளை நிறைவாகப் பெற்றுத் தருபவர். நல்ல மனைவி பிள்ளைகளுள பெற்ற சிவஸ்ரீ பரமாசாரிய குருக்களுடைய வாழ்க்கை ஏனையோருக்கும் ஓர் எடுத்துக் காட்டு .

எளிமையும் அடக்கமும் தன்னகத்தே கொண்ட சிவ பூஜா துரந்தரராகிய குருக்களவர்கள் இன்று போல் என்றும் வாழ மீனாட்சியுடனாகிய சோமசுந்தரேஸ்வர பெருமானை பிரார்த்திக்கின்றோம். O

என்றும் வேண்டும் இன்ப அன்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

தீவுப்பகுதி தெற்கு முன்னாள் பிரதேச செயலரும்
உதவி அரசாங்க அதிபரும், ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
அறங்காவலர் சபைத் தலைவருமாகிய
திரு. கா. ஆ. தியாகராஜா அவர்களின்

# வாழ்த்துரை

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலின் பிரதம குருவாகிய வட கோவை பிரதிஷ்டா குருமணி, சிவாகம வித்தியா சாகர ஞான பானு சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்களுக்கு அகவு எண்பது ஆகும், இந்த நன்னாளில் அவரைக் கௌரவித்து பேரன்பர்பலர் கூடி பவளவிழா எடுக்கின்றார்கள் என்ற செய்தி கேட்டு பெரிதும் உளம் மகிழ்ந்தேன். பட்டங்களால் பாராட்டப் படுபவர்கள் பலர், பாராட்டப்பட்டவர்களால் பட்டங்கள் சிறப்புறுவதுதான் தகுதி. அந்த வகையில் எங்கள் குருமணிக்குக் கிடைக்கப்பெற்ற பட்டங்கள் உரிய தகுதியைப் பெற்றுள்ளன என்றால் மிகையாகாது.

எகள் குருமணி வேத வித்தகர், ஆகமச் செம்மல், ஈழத்தில் ஒப் பாரும். மிக்காரும் இல்லாத ஒரு ஞானசாகரம். ஐயப்பாடுகள் எல் லாவற்றிக்கும் நிதர்சனத்துடன் பதில் தரவல்ல வித்தியா சாகரஞான பானு. எங்கள் ஆலயத்தின் தனிச் சிறப்புக்களில் ஒன்று எங்கள் குருமணி எமக்குக் கிடைத்தது. இவர்தம் முன்னோர் பல்லாண்டு களாக எம் ஆலய வரலாற்றுடன் தொடர்புடையவர்கள். எனது முன்னோர்கள் எப்படி இவ்வாலயத்தின் பரம்பரைப் பரிபாலகர்களாக இருந்து வந்தார்களோ, அன்று முதல் இவர்தம் முன்னோரும் குரு மணிகளாக இருந்து வந்துள்ளார்கள். அம்பாளின் ஆலயத்தில்தான் வேதமுறை தவறாத பூசையைக் காணலாம். என்ற கருத்தை அடி யார்கள் ஒளிவு மறைவின்றி நேராக எம்மிடம் கூறும்போது, உண் மையில் நாம் பெருமையடைவதுண்டு. தொழுத கையுடன் அழுத கண்ணீருடன் தாயை எம் குருமணி பூசிக்கும் காட்சியைக் கண்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் குறையெல்லாம் தீர்ந்ததாக பக்திப் பரவசத்தில் திளைத்து நிற்கும் குருமணியின் அடியார் நிலைக்கு நிகர் ஏது?

01 - 04 - 98ல் நடை பெற்ற மகா கும்பாபிஷேக விழாவைக் காண வந்திருந்த அடியார்கள் உண்மையின் நிலைகண்டு, எப்படி, எப்படி யெல்லாம் கற்பனை செய்திருப்பார்கள் என்பதனைச் சொல்லாமலே தெரியும். உண்மையில் அவர் தன்னை மறந்து அன்னையுடன் தன்னை சங்கமமாக்கி நின்று ஆராதனை செய்யும் அந்தணப் பெரியார். இவ ருக்கு நிகர் இவரேதான். இதனை நான் கூறவில்லை. குருமணியைப் பாராட்டி 01 - 04 - 98ல் பேசிய பல்துறை சார்ந்த பெரியார்களின் ஒருமித்த கருத்து இதுவாகவே இருந்தது.

எங்கள் குருமணிக்கு, அன்னை அறிவும். ஆற்றலும் கொண்ட மைந்தர்களைக் கொடுத்து அவர்தம் கிரியைகள் மேன்மேலும் வளர்ச் சியடைய உதவி உள்ளாள். மூர்த்தி, தலம், தீர்த்தம், முறையாக இருந்தாலும் கீர்த்தியும், சிறப்பும் கிடைப்பதற்கு நித்திய நைமித் திய காரியங்களைச் செய்யும் குருவும் ஒரு காரணமாகின்றார். அந் தப் பாக்கியம் நிலைப்பெற்றது எம் ஆலயம். செய்வார், செய்விப் போர், நுகர்வோர் என்ற வகையில் கிரியைகளைச் செய்யும் குருவும், குருவின் கருத்திற்கு அமைய பூசா திரவியங்களை வழங்கும் அறங் காவலர் சபையும், செயற்படும் பூஷா பலனை அனுபவித்து உயர்ந்து ஏறும் அடியார் கூட்டமும், ஒருங்கே அமைந்த ஆலயங்களில், தலை யாய ஆலயம் நயினையம்பதி என்று, குருமணியை கௌரவித்து பட் டமளித்து கருத்துரை வழங்கிய மாவைக் கந்தன் ஆலய ஆதீன கர்த்தா சிவாகம வித்தியா பூஷணம் மகாராஜ ஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் 01 - 04 - 98 அன்று கூறிய கருத்தைக் கேட்டு நாம் பெரு மிதம் கொண்டோம்.

குருக்கள் ஐயா அவர்கள் சமஸ்கிருத வித்தகர் மட்டுமல்ல, தமிழ்த் துறை சாகரமும் ஆவர். இவர்களால் எழுதப்பட்டு வெளிவந்த நூல் கள் கணேசதத்துவம், சிவார்ச்சனா சந்திரிகா தீபிகை அம்பிகை வழி பாடு என்பனவாகும். மேலும் வெளிவர உள்ளவை கும்பாபிடே கப் பெருமை.- இது மூன்று பாகங்களாக வெளிவரவுள்ளது. மற்றயது அபரக்கிரியா விளக்கம் என அறிகின்றேன். ஓய்வின்றி என்றும் பதி னாறு வயது கொண்டவர்போல் சுறு சுறுப்பாக தம் காரியங்களைத் திறம்படச் செய்வதற்கு இவருக்கு உறு துணையாக அமைந்தவர் எங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் குருமணியின் பாரியார் இராசேஸ்வரி அம்மா. அவரது சீலம் நிறைந்த செயற்பாடுகள்தான் குருக்களுக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுத்து வருகின்றது என்றால் மிகையாகாது. கும்பாபிஷேகம் முடிந்து மூலஸ்த்தானத்தில் இருந்து வந்து கொண்டிருந்த குருமணி, முன் மண்டபத்தில் தரிசனத்திற்காக அமர்ந்திருந்த தனது பாரியாரின்தலையில் தமது கையில் இருந்த தொடு புல்லால் தட்டி " நீ கொடுத்து வைத்தவள் " என்றார். உண்மையில் நாம்தான் கொடுத்து வைத்தவர்கள் என்றேன் நான். குழுமி நின்ற அனைவர் கண்களும் குளமாகியது, இது மறக்க முடியாத ஒரு நிகழ்வு.

விருந்தோம்பும் பண்பில் குருக்கள் ஐயா குடும்பம் தமக்கென ஒரு தனியான நிலைப்பாடு கொண்ட குடும்பம். குருக்களைக் காண்பதற்கு அவர் இல்லம் செல்பவர்கள் உணவு அருந்தாமல் வெளிவர முடியாது. எந்த சாட்டும் சொல்லியும் தப்பித்துக் கொள்ளவும் முடியாது. அன்பினால் பிணைத்து விடுவார்கள். இது இவர்களுக்கு உள்ள இயற்கையான ஒரு பண்பு. செல்வச் சிறப்பும் தெய்வ அனுகூலமும் இயற்கையாகவே கை கூடப் பெற்ற எங்கள் குருமணியும், துணைவியாரும், பல்லாண்டு, பல்லாண்டு காலம் பார் போற்ற வாழ்ந்து ஆன்மீகத் துறைக்கு அரும்பணியாற்ற அருள்க என எம் குல தெய்வமான ஜெகன்மாதா ஸ்ரீ நாகபூஷணியைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன். உரிய காலத்தில் தகுதியான ஒரு செம்மலுக்குப் பவள விழா எடுத்த கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அதிபரையும் குழுவினர்களையும் கொரவித்துப் போற்றுகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர்
கலாநிதி, செல்வி, தங்கம்மா- அப்பாக் குட்டி சமாதான நிதிபதி
அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

''பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால்'' என்ற பாடல் அடி என்றும் எனது உள்ளத்தில் நிலைத்து நிற்கும் கம்பராமாயணக் கவிதை வரியாகும்.

எமது வணக்கத்துக்கும் வாழ்த்துக்கும் உரியபெருமை படைத்தவராக விளங்குபவர் கோப்பாய் பரமசாமிக் குருக்களாவர் தன்னேரில்லாத் தகமையும் சிவாகமப் புலமையும் சிவநெறி மறவாச் செந்தண்மையும் கொண்டவர் இவர். நயினை நாகபூஷணி அம்பாளின் அருட்கடாட்சத்தினால் ஆத்மீக பலங்கொண்டவராக இவர் விளங்குவது எமது சைவமக்கள் செய்த தவப்பயனாகும்.

மகோற்சவங்கள், குடமுழுக்கு விழாக்கள் ஆகியவற்றை ஆங்காங்கு பக்திபூர்வமாக நடத்தி ஆர்வலரின் பாராட்டைப் பெற்ற சிறப்பு இவருக்குண்டு.

இத்தகைய பெமைகளைத் தனதாக்கிக்கெண்டஐயா அவர்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு காலஞ் சுகவாழ்வு வாழ்ந்து எமது சைவநீதி, உலகமெல்லாம் விளங்க ஆவன செய்ய வேண்டும் என்று எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்தித்து அமைகின்றேன்

O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி
தேவஸ்தானம் வழங்கிய

# வாழ்த்துரை

ஒன்றினும் வேண்டுதல் வேண்டாமையின்றி எல்லா உயிர்களிடத்தும் பேரருள் உடையவனாய், வேண்டும் நலன்களை வழங்கியருளும் இறைவன் திருவடிகளைப் போற்றி அவன் திருவருளாணையின் வண்ணம் அடங்கி ஒழுகுதலே எல்லா அறங்களுக்கும் மூலமாகிய நல்லறமாகும் என்னும் மெய்மையினை உணர்த்தி வழி வழி வந்த சான்றோர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கிரியை முறைகளைக் கடைப்பிடித்து மந்திரம், பாவனை, கிரியை என்பவற்றின் மூலம் பக்தியோடு இறைவனைப் பூசை செய்து மக்களைப் பக்தி நெறியில் வழி நடத்திச் செல்லுகின்ற சிறந்த பாரம்பரியத்தின் ஒரு தலைமுறையின் சின்னமாக விளங்குகின்ற நயினை நாகபூஷனணி அம்மன் ஆலய விஷேடகுருவாகிய கோப்பாய் சிவ ஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள் அவர்களுக்கு பவள விழா வைப்பதையிட்டு மனமகிழ்யடைகிறோம்.

குருக்கள் அவர்களும், அவர்தம் மைந்தர் சாகித்திய சிரோமணிமுத்துக்குமார சாமிக்குருக்கள் அவர்களும் எமது ஆலயத்தில் ஒரு தசாப்தகாலமாக நைமித்திக கிரியைகளைச் செய்து வருகிறார்கள். அவர்கள்மேலான ஞானத்துடனும் பக்தியுடனும் ஆடம்பரமின்றிக் கிரியைகளை நடாத்தும் சிறப்புப் பெற்றவர்கள். சாக்த வழிபாட்டு மரபிலுள்ள சண்டியாகம், ஸ்ரீ சக்ர பூஜை, அபிஷேகம் முதலான கிரியைகளை மிக நீண்ட நேரம் பொறுமையுடன் சிரந்தையாகச் செய்து வருபவர்கள். மக்களை இறைவன்பால் ஈர்த்து பக்தி நெறியுடன் எமது சைவசமய பண்பாட்டுப் பாரம்பரியத்தை தொடர்ந்து நிலைநிறுத்திவருகின்றவர்கள்.

இன்றும் அறிவுத் தேடலில் ஈடுபட்டு பலநூல்களை எழுதி வெளியிட்டும் மக்களுக்கு சமய அறிவூட்டி விருந்தோம்பும் பண்புடன் அமைதி, ஒழுக்கம், இயமநியம அனுஷ்டானங்களைக் கடைப் பிடித்து ஆசாரரியராக தினமும் சிவபூசை வழிபாடு செய்து வருகின்ற குருக்கள் அவர்கள். அந்தண குலத்திற்கு ஓர் உதாரண புருஷராக விளங்குகின்றார். குருக்கள் அவர்களும் அம்மையாரும் எல்லா நலன்களுடனும் நீடுழி காலம் வாழ்ந்து வைவ உலகத்திற்கு வழிகாட்ட வேண்டும் என ஸ்ரீ கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாயநாத சுவாமியை பிரார்த்திக்கின்றோம்.

O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பவள விழா சபையினரால் வழங்கப் பட்ட

# வாழ்த்துப் பா மடல்

சீராரும் வடகோவை யூரின் கண்ணே
செம்மையுடன் வேதசிவா கமங்கள் ஓர்ந்தே
பாரோரும் புகழ்ந்தேத்த வாழும் நல்ல
பண்பு மிகும் அந்தணர்கள் மரபில் வந்த
பேரான பரம சா மிக்குருக்கள்
பெருமையுடன் பவள விழாக் காணும் வேளை
ஆராத உவகையுடன் வாழ்த்துகிறோம்
அகில ம நில் புகழோடு நீடு வாழ்க

வித்தக முத் துக் குருக்கள் சித்தம் பொங்க
வி , தையுடன் எத்திசையும் நத்தி நிற்க
உத்தமநற் பத்தினியாள் ராஜேஸ்வரி
முத்தி னொடும் சித்த மகிழ் இல்லறத்தை
பக்தி யொடும் பற்றியதன் அத்தமாகப்
பத்தரைமாற் றுத்தங்கப் பாலர் நால்வர்
இத்தரையில் பெற்றெடுத்தார் எங்கள் முத்தாம்
இப்பரம சாமிக்குரு ஒருவ ராவார்.

அச்சுநகர் குமாரசா மிக்குருக்கள்
அருங்குருவாம் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும்
இச்சையுடன் எங்குருவின் குருவாய் நின்று
ஏற்றமிகு நற் புலமை இசைவித்தார்கள்
இச்சகத்தில் இல்லறத்தை நடத்த வேண்டி
இனிமையுடன் ஊரெழு வாழ் குருவாம் செம்மல்
விச்சை மிகு பால சுந்த ரக் குருக்கள்
விரும்பு மொரு புத்திரியை மணந்து கொண்டார்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருசாமிக் குருக்கள் எனும் செல்லப் பேரைக்
குவலயத்தில் பெற்றிருக்கும் எங்கள் ஐயா
குருவாயிந் நாடெங்கும் சேவையாற்றிக்
குறையாது கும்பா பிஷேகமோடு
அருமறைகள் ஆகம கள் கூறும் நல்ல
அருட்கிரியை பலவாற்றி அளவில்லாத
விருதுகளும் பெருமைகளும் நிறையப் பெற்றார்
வியனுலகத் தேவர்களும் போற்ற வாழ்க

முத்தான ராஜகுலப் பாலர் போல
முகம் மகிழும் குருநாதர் ஐவர் தம்மோ( டு )
அத்தன் மனம் மகிழ்வுறவே இருவர் பெண்கள்
அம்பிகைய ராய் அடைந் தன்பினோடு
இத்தரையில் அவர் வாழ்வும் சிறக்க வைத்து
இல்லறமும் கூட்டிவைத் தினிமை யோடு
சுற்ற மகிழ்ந் தினிதுறவே வாழும் நாளில்
சுகம்பெறவே வாழ்க வென வாழ்த்துகிறோம்.

கவியாக்கம் :- ‘‘கோப்பாய் சிவம்’’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் கோவிலடி சனசமூக நிலையமும்
ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் இணைந்து வழங்கிய

230 PAR

# வாழ்த்துரை

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது சான்றோர் முதுமொழி, நாம் எம் புறக்கண்களால் காணும் கடவுளர்கள் இவர்கள். வீட்டில் அன்னையும், பிதாவும் வழிநடத்த, அதன்பின் வரும் பள்ளிப் பருவத்தில் குருவாகிய ஆசிரியர் வழிநடத்த, பின்பு சமூக நுழைவில் ஆலய குரு ஆன்மீக வழிநடத்த மானிட வாழ்வு ஒரு சிறந்த வழிகாட்டலில் வழி நடத்தப் பெற்று நிறைவெய்துகின்றது.

அந்த வகையில் அறிவுத் தேடலை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்து கொண்ட எங்களுக்கு, ஆன்மீக வழிகாட்டியாக அமைந்த குரு -எங்கள் குருக்கள் ஐயா அவர்கள், கண்ணகை அம்மன் என்று கனிவோடு அழைக்கும் ஆலயத்தின் பிரதம குருவாக இவர் இருந்த காலத்தில் நாம் சிறுவர்கள். குருக்கள் ஐயாவைப் பார்த்ததும் எம் மனதில் இனம் புரியாத பக்தி ஏற்படும். அந்த ஈர்ப்பு எம்மை அம்மன் மேல் பக்தியை ஏற்படுத்தச் செய்து, ஆன்மீகத் தேடலையும் தூண்டியதில் வியப்பில்லை. துள்ளித் திரிந்த சிறுவர் நம் துடுக்கை அடக்கி ஈர்த்த, அருட்பார்வை ஊரில் ஏனைய மக்களின் உள்ளத்தையும் தொடாமல் இல்லை. எமது ஊரவர் மட்டுமல்ல, அயலூர்களிலிருந்துங் கூட எம் ஆலயத்துக்கு வந்து பொங்கல் பூஜை செய்து தம் குறை தீர்த்த பக்தர்கள் பலர்.

குடும்பங்கள் யாவையும் குலத்தோடு அறிந்து அவரவர் குறை தீர தக்க வழி கூறும் எங்கள் குலகுருவுக்கு பாராட்டு விழா எடுப்பதில் பெரு மகிழ் வடைகின்றோம். ''துறைபோக மறை கற்று, ஆகமஞ்சார் பூஜை செய்து தூயோர்க்குள் தூயோராய் விளங்கும்'' எம் குருக்கள் ஐயா அவர்களின் முகத்திலே அம்மனின் அருட்கடாட்சம் ஒளிர்ந்து, அவர் அருட்பார்வையால் எங்கள் ஊரின் பிணி, பாவங்கள், குறைகள் யாவும் நீங்கும் தன்மையைக் கண்டு வருகின்றோம். இப்படியான - புனிதமே உருவான எங்கள் குலகுருவை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மென்மேலும் எம்மை வழிநடத்திச் செல்ல நீண்ட ஆயுளை கொடுக்க வேண்டும் என்று அம்மனின் திருப்பாதங்களை வேண்டி நிற்கிறோம்.

'' காய்விலா அன்பு கற்றவர் நண்பு
கலைகளைப் போற்றும் பண்பு
ஓய்விலாத் தூய வொழுக்கமு முள்ளோர்
உலகினுக் கோர் மணியன்றோ ''



187281
UNIVERSITY OF JAFFNA LIBRARY ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்த்துரைகளிலிருந்து

தனது குடும்பத்தையும் இணைத்
குருத்துவப் பணியில் தன்னையும் பரமசாமிக் குருக்கள் அவர்
துக் கொண்ட பெருந்தகை சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் அவர்
களுக்கு நடைபெற இருக்கும் பாராட்டு விழாவை முன்னிட்டு வாழ்த்
துரைகளை வழங்கிய அனைவரது உயர் கருத்துக்களும் ஒரேமுக
மாக சுருக்கமாக எடுத்துக் காட்டப்படுகின்றன. இக் கருத்துக்கள்
ஒரு சமுதாயத்தில் சிவஸ்ரீ குருக்களவர்களின் பங்கு எனும் எல்லைக்
கோட்டைக் காட்டிநிற்கும் என்பதில் ஐயமில்லை.

★

O பெரும் சிறப்பினைக் கொண்ட ஆச்சாரிய பரம்பரையில் வழி கொண்ட முத்துக்குருக்ள், வயிரவநாதக் குருக்கள் பரமசாமிக் குருக்கள் சிவசாமிக் குருக்கள், குருமூர்த்திக் குருக்கள் போன்ற சிவாகம கிரியாவல்லுனர்களாக போற்றப்பட்டு கோப்பாயில் சிறப்புடன் வாழ்ந்துவந்த பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். அக்காலத்தில் யாழ்நகரில் நல்லூர் கந்தசுவாமி ஆலயம், பருத்தித்துறைப் பகுதியில் உள்ள ஆலயங்கள், நயினைதீவு, அனலைதீவு, பொன்கொடுதீவு, வேலணை ஆகிய இடங்களில் இவர்கள் பாரம்பரிய குருமாராகவும் சிவநெறித் தன்மை கொண்ட ஆனுபூதிமான்களாகவும் விளங்கி சமயவளர்ச்சிக்குரிய உற்சவம், பிரதிஷ்டை ஆகிய ஆலயக் கிரியைகளை முறையே நடத்தி பாரம்பரிய குருமார்களாக விளங்குகின்றனர்.

---

குருபரம்பரையை வளர்க்க அவரின் மூத்த குமாரர் சாகித்யசிரோமணி முத்துக்குமாரசாமிக் குருக்கள்; அவர் சகோதரர்கள் சிறப்பு அம்சங்களுடன் விளங்குவதை நாம் மறுக்கமுடியாது.

— *சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்*

★

O வட மாகாணத்தில் திகழும் அறிவு செறிந்த குருமார்களின் வரிசையில் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்து வேத, ஆகம, வைதீக கிரியைகளை நடாத்தி வருபவர்........

— *இந்து மத தநமார் ஒன்றியம் — படமராட்சிக் கிளை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கிரியையென மருவு மருவு மலையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' என நூல்கள் உரைக்கும் என்றமையால் ஆதி சைவ அந்தண மரபிற்கு ஏற்ப கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராய்ச் சித்தாந்தம் என உள்ள கிரியைகளை முற்றுற அறிந்து ஞான பாகத்தோடு ஒப்பிட்டு ஆராயந்து மந்திரமற்ற கிரியை, பாவனை; செய்யும் முறை அவற்றின் பயன் இவைகளைத் தெரிந்தவர். ——————

சிவஸ்ரீ. வே. நடராஜக் குருக்கள் சுவாமிகள்

★

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரம்பரையாக குருப்பணி செய்துவரும் குடும்பங்களில் கோவை சிவஸ்ரீ வைரவநாதக் குருக்கள் என்று சைவ மக்களால் போற்றப்பட்டுவரும் குடும்பத்தின் வாரிசாக வந்தவரே பெருமைக்குரிய சிவஸ்ரீ பமரசாமிக் குருக்களாவர். ...—— ——

மந்திரம், கிரியை, பாவனை மூன்றும் இவர் செய்யும் கிரியைகளில் அமைந்திருக்கும். ————————

— சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக்குருக்கள், நீர்வேலி.

★

மேன்மை தங்கிய குருக்கள் அவர்கள் வேதாகமங்களில் நல்ல தேர்ச்சியும், இதிகாச புராணங்களில் பயிற்சியும் கொண்டவர். சிறந்த ஆராய்ச்சியாளர். வேதாகமத்தில் ஆழ்ந்த பற்றுதலால் சிறந்த அறிவும், சைவத்தின் பற்றுதலால் அதனைப் பாதுகாப்பதிலும் அதன் ஆழ்ந்த உண்மைக் கருத்துக்களை சைவ நன்மக்கள் அறிய வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறையுமுடையவர். குருக்கள் அவர்கள் மிகுந்த சிரமப்பட்டு, காவியங்கள், புராண இதிகாசங்கள், பல்வேறுபட்ட பல அரிய சமஸ்கிருத, தமிழ் நூல்களை ஆராய்ந்து, அவற்றில் கூறப்பட்ட பலமணியான கருத்துக்களையெல்லாம் தொகுத்து 'யாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பரந்த பெருநோக் குடன் பிரசுரித்து வெளியிட்ட 'சிவார்ச்சனா சந்திரிகா தீபிகை' 'அம்பிகை வழிபாடு' எனும் நூல்களே அவருடைய புலமைக்குச் சான்றாகும். ———

— சிவஸ்ரீ வி. சோமஸ்கந்தக் குருக்கள்

★

பிரம்மஸ்ரீ முத்துக்குருக்கள் பரமசாமிக்குருக்கள் அவர்கள் வடகோவையில் வந்து பிறந்தார். அவரை எனக்கு பல காலமாகத் தெரியும். அவர்கள் பரம்பரையாக கல்வியிலும், ஒழுக்கத்திலும் குருத்துவம் செய்வதிலும் சிறந்து விளங்குகிறார். இவர் பல கோயில்களில் கும்பாபிஷேக கிரியைகள் செய்தும், நயினாதீவு நாகபூஷணி அம்மன் உற்சவ குருவாக இருந்தும் விளங்குகிறார். பல நூல்கள் எழுதி சமூகத்திற்கு அறிவு வழங்கி வருகிறார். ———

— பிரம்மஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள், நீர்வேலி.

★

பலகாலம் பழகியுள்ளேன். பலநூல்களையும் கற்றுத்தேர்ந்த சிறந்த அறிவாளி. தமது வாழ்வில் பல சிறப்புக்களுடன் ஆலய மஹா கும்பாபிஷேகக் கிரியைகள், மஹோற்சவக் கிரிய்யகள் முதலியவற்றை தாம் முதன்மையாக இருந்து நெறிப்படுத்திய உத்தம சிவாச்சார்யமணி. பக்திபூர்வமாகவும், ஆகமமரபு தவறாமலும் தமது குருத்துவப் பணியைப் பேணி சமய மத அனுஷ்டானம், குலாசாரம் வழுவாது வாழ்க்கையைத் தெய்வீகப் பணியாக திறம்பட நடாத்திய பெருந்தகை. .... பலபட்டங்களைப் பெற்று தமக்கு நிகர் தாமே என்றவகையில் விளங்கும் தலை சிறந்த சிவாச்சாரியார்.

— சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள், மட்டுவில்.

★

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவன் விரும்பும் அர்ச்சனையை அருளோடு ஆற்றுவதற்கு வேதம், ஆகமம், உபநிடதம், திருமுறைகள், புராணங்கள் எல்லாம் நன்கு தேர்ந்து உணரவேண்டும். தேர்ந்து உணர்ந்தவற்றை எல்லாம் திறம்பட நிகழ்த்துவதற்கான அறிவு, ஆற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றல், திறமை, நன்மதிப்பு, திருவருள் யாவும் ஒருசேரப் பொருந்தப் பெற்றவர்..... – — —

— சிவஸ்ரீ · ச வரதராஜசேகரக் குருக்கள். மயிலணி.

*

மூர்த்தி வழிபாட்டில் முக்கியமானதான சரியை, கிரியைகளை, விதிப்படி செய்விக்கின்றவரும், யோகஞானங்களை உபதேசிக்கின்றவருமான குருமார்களுக்கு உயர்ந்த மதிப்பளிக்கவேண்டும் என்ற எண்ணம் இந் நாட்டுச்சைவ மக்களிடத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருப்பது எதிர்கால நல்வாழ்வுக்கு அறிகுறியாகிறது. ஆச்சாரிய லக்ஷணங்கள் எல்லாம் அமையப் பெற்ற குரு ஒருவர் எம்மத்தியில் அமர்ந்து இருப்பது நாம் செய்த தவப்பயனேயாம். — — — —

— பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா.

*

பரம்பரையாகவே நயினை நகர் அம்மையின் அருட்பேறு பெற்றவர்கள். இந்நிலையில் வேதமோடாகமஞ்சார் கல்வியிலும் ஆகம மரபு வழிக் கிரியைகளிலும் கவித்துவம் பெற்று விளங்கும் பெருமகனார்.

— பிரமஸ்ரீ கி. சதாசிவசர்மா, மட்டுவில்.

*

உருவத்தில் அகத்தியர் போன்றவர், வண்ணத்தில் இறைவனைப் போலொத்த குருசிரேஷ்டர். இவர்களைப் போன்ற சிவச்செம்மல்கள் எண்ணிச் சொல்லக்கூடிய அளவு குறைவாகவே இருக்கிறார்கள்.

— சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள், மட்டுவில்.

தனக்கென்று ஓர் இடத்தை பிடித்து குருத்துவப் பணியை ஐயம் திரிபறக் கற்று அதன்படி கடைப்பிடித்து எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்குகின்றார்........ – ....

— சிவஸ்ரீ ச. சோமஸ்கந்தக் குருக்கள். வேரற்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல குருமாரிடம் பாடங்கேட்டு நல்லவகையில் பயிற்சி பெற்று, இளமையிலிருந்தே மரபுவழிப்பட்ட கிரியைகளில் ஈடுபட்டு ஊறித் திளைத்தவர். ஆர்த்தஞானம் உணர்ந்து கிரியையை விளங்கிச் செய்யும் மாண்புமிக்கவர். இவரது கிரியைகளில் பக்தி என்பது இழையோடி நிற்கும், பாவனை பன்மடங்கு பெருகிநிற்கும், பார்ப்பவரும் மெய் மறந்து கிரியைகளில் ஒன்றிவிடுவர். ——

— ***கோப்பாய் - சிவம், புத்தூர்.***

★

வேதசிவாகமங்களை ஐயம் திரிபறக்கற்று தமிழிலும் பாண்டித்தியம் பெற்று அந்தணர்க்குரிய அறுதொழில்களையும் செய்துகொண்டிருப்பது சிறப்பானதாகும். அவர் செய்து வைத்த கோவில் கும்பாபிஷேடகங்கள், கொடியேற்று விழாக்கள், திருமண வைபவங்கள் எண்ணற்றவை. அதுமாத்திரமல்ல, பூர்வ அபரக் கிரியைகளையும் அவசியம் ஏற்படும்போது செய்து வைக்கப் பின்வாங்கமாட்டார். ....

— ***சிவஸ்ரீ அ. பிரேமச்சந்திரக் குருக்கள் துன்னாலை.***

★

குருக்கள் ஐயா அவர்களுடன் மிக நீண்டகாலத் தொடர்பு எம்மிருவருக்கும் உண்டு. மிகச் சிறு பிராயத்திலிருந்தே நாம் இருவரும் ஐயா அவர்களின் மகோற்சவம், கும்பாபிஷேகம் முதலிய பல ஆலய வைபவங்களில் நாதஸ்வர இசை வழங்கும் சந்தர்ப்பம் பெற்று மகிழ்ச்சியடைந்தவர்கள். எங்களின் இசைவளர்ச்சியைப் பாராட்டி எங்களை ஊக்கப் படுத்தியவர்களுள் குருக்கள் அவர்கள் முதன்மையானவர் —....

— **V. K. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி**

★

பல நூற்றாண்டு வரலாறுடைய குருக்கள் வம்சத்தினைத் துலங்க வைத்துக் கொண்டிருப்பவர். இவர் அரச வம்சத்து ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த காலம் முதல் புகழ்பூத்த சிவாச்சாரிய வம்சம் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்துள்ளது, அச்சிவாச்சாரிய வம்சத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை பெற்ற அந்தணக் குடும்பம் கோப்பாயில் வசித்துள்ளது. அக் குடும்பத்தைச் சாந்தவர்களே வரலாற்றுக் கோயில்கள் எனக் கருதப்படும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் போன்ற பழம்பெருந் தலங்களுக்குப் பிரதம சிவாச்சாரியார் பணியைச் செய்து வந்துள்ளனர். அவ்வம்சத்தின் வழியில் வந்த உயர் தலைமகன் சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் என்றால் மிகையாகாது. வேத ஞான அறிவிற் பழுத்தவராய் விளங்குவது மட்டுமன்றி ஆசாரபக்குவத்தைப் பெரிதும் பேணுபவர் இவர். கடவுளின் நிலையில் வைத்து கண்டவர்கள் எல்லோரும் கும்பிடும் வகையில் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர். கிரியைகளின் போது அவரது திருப் பொலிவு புராணகாப்பியங்களில் நாம் படித்த வசிட்ட மகரிஷியை, விசுவாமித்திர முனிவரை நிஜமாய்த் தரிசிப்பது போன்றமைந்து விடும். ----

*செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் பீ. ஏ., மருதனார்மடம்*

★

75 வயதைத் தாண்டிய வேளையிலும் அவரது எழில் உருவம் கிரியைகளின் போது அவர் பேணும் சிரத்தையும் அற்புதமாகவே உள்ளது. சிறுபாலகனாக இருந்த காலம்முதல் ஐயாவின் குடும்பத்தோடு பழகும் வாய்ப்புப் பெற்றவன்யான். ஐயாவின் பெருந்தன்மைகளை நன்கு அறிவேன். எக் காரியத்தையும் நேர்த்தியாகச் செய்ய வேண்டும் என்பதில் ஆர்வம் உடையவர். ----

*— டாக்டர் எஸ். தகதாஸன*

★

சிவாகமப்பணியில் நீண்டகாலம் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர். அதன் மூலம் ஆத்ம வல்லமையை இறைவனின் திருவருளாக வாய்க்கப் பெற்றவர். ----

*— திருமதி பூ. சிவலோகநாதன்*
*கோப்பாய் அரசினர் வைத்தியசாலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் கிரியாபாகங்களைக் கண்ணுறும் வாய்ப்புப் பெற்றவர்கள் சிறந்த அந்தண சிவாச்சாரியர்களாக மிளிரக்கூடிய வாய்ப்புப் பெறுகிறார்கள். தமது சமயத் தொண்டு தொடரத் தமது பிள்ளைகளையும் சிறந்த சிவாச்சாரியார்களாக உருவாக்கி அரும் தொண்டுகள் புரிந்து வருவதோடு சிறந்த சமயப் புத்தகங்கள், ஏடுகள் என்பனவற்றை ஆராய்ந்து அச்சேற்றி அரும் தொண்டுகளும் புரிந்து வருகிறார். ........

— சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள், கல்வயல்

★

சைவசித்தாந்தம், சம்ஸ்கிருத வியாகரணம், நியாயம், மீமாம்சை, தமிழ் ஆகியவற்றில் ஐயா அவர்களுக்கு இருக்கும் புலமை ஈடிணையற்றது. ஆகம விதிமுறைப்படி எங்கள் நாட்டுத் திருத்தலங்கள் தோறும் நடக்கும் மகோற்சவங்களுக்கு ஐயா அவர்களின் ஆலோசனைகளும், செயன்முறைகளும் சைவப்பெருமக்களால் என்றென்றும் பாராட்டி கௌரவிக்கப் பெற்றுக்கொண்டே வந்துள்ளது. அபூர்வமான சில தெய்வச் சிலைகளை நாம் உருவாக்கும்போது ஐயா அவர்கள் ஆதாரபூர்வமாக வேத உபநிஷதங்களினை ஆராய்ந்து தந்த ஆலோசனைகளுக்கு நான் ஐயா அவர்களுக்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். ........

— விஸ்வபிரம்மஸ்ரீ சு. பாஸ்கரன ஆச்சாரி
யாழ்ப்பாணம்

★

ஐயாவின் திருநாமம் இந்த 75 ஆண்டுகாலத்தில் மட்டுமல்ல காலாதி காலத்திலும் நிலைத்திருக்கவும் அவருடைய சேவைகளை தொடர்ந்தும் மக்கள் மதித்துப் போற்றவேண்டும். ———

— தலைவர்
வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையம்,
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் அவர்களும் மிகவும் பக்தி சிரத்தையுடன் கிரியை முறைகளை விளக்கங்களுடன் செய்து கிரியா காலங்களில் பசி நோக்காது, கண்துஞ்சாது கருமமே கண்ணாய் இருப்பவர். ஓய்வு நேரங்களை நல்ல வழியால் பயன்படுத்தி பலநூல்களையும், பத்ததிகளையும் தொடுத்து எழுதும் ஆற்றலும், அறிவும் பெற்றவர். இலங்கையில் புகழ்பெற்ற ஆலயங்கள் பலவற்றிலும் உற்சவம், பிரதிஷ்டை, விசேட விழாக்கள் போன்ற கிரியைகளை நன்கு செய்து நிறைந்த அனுபவமும், ஆற்றலும் பெற்று சிரேஷ்ட சிவாச்சாரியராக இருக்கின்றார். ..........

— சிவஸ்ரீ ஜ. டிகேஸ்வரக் குருக்கள், சுதுமலை.

★

இப் பூவுலகின் கண் வாழுகின்ற அண்ட சராசரங்களையும் நிலை பேறடயச் செய்வதற்கு இறைவன் மனித வடிவில் வந்து காட்சியளிப்பதாகச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. அந்த வழியில் வந்தவர்களே எங்கள் குருநாதர். சைவசித்தாந்தத்தில் கூறப்படும் வேதாகமக் கருத்துக்களைத் துருவி ஆராய்ந்து கிரியாஞானமும் பெற்றதுடன் தமது செபந்த அனுபவ ஞானமும் பெற்றுப் பூரண சிவாச்சாரியாராக விளங்குகின்றார். ..........

— நிர்வாகிகள், கோப்பாய் வடசனசமூக நிலையம்.

★

" க்ரியாதி ஞானபர்யந்த சாஸ்த்ரேஷு க்ருத நிச்சய:"

ஆசார்ய லக்ஷணத்தைப் பற்றி சுப்ரபேதாகமம் கூறும் வாக்கியம் இது. கோயில் கிரியைகளைச் செய்வதற்குரிய முறைகளை சாத்திரங்களில் கூறும் விதிகளை நன்கு ஆராய்ந்த பின்பே கிரியாபாகங்களை நிச்சயம் செய்யவேண்டும். குருக்கள் அவர்களும் அங்ஙனமே ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து நிச்சயிப்பது வழக்கம். கிரியைகளின் நுணுக்கங்கள் பற்றி அவ ரோடு உரையாடும்போது சாஸ்திரங்களை மேற்கோள்காட்டி விளக் கும் திறமையும் அவரிடம் காணக்கூடியதாக உளது.

— சிவஸ்ரீ சு. து. சுந்தரமூர்த்திக் குருக்கள், பி.ஏ. (லண்டன்)
மாவையம்பதி.

★

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கோவையூரிலே இறைபணிக் காக தம்முடைய வாழ்நாளை அர்ப்பணித்து பணிபுரிந்து வருபவர்.

— கி. துரைரத்தினம்
தலைவர், வள்ளியம்மன் சனசமூக நிலையம்,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

★

இலங்கையில் தற்போது சிவாகமவிதிகளைத் தெளிந்தவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே உள்ளார்கள். அவர்களில் எமது கிராமத் தைச் சேர்ந்த குருக்கள் ஐயா தனியே ஆகமவிதிகளை மட்டும் தெரிந் தவர் அல்லர், பல்துறை வல்லுனர். சோதிடம், சிற்பக்லை, கட்டடக் கலை எனப் பல விடயங்களின் சாஸ்திர நுட்பங்களை அறிந்தவர்....

— ஸ்ரீ சபாபதி நாவலர் சனசமூகநிலையத்தினர்,
வடகோவை.

★

எங்கள் வடகோவை பாலானை கண்ணகை அம்மாள் ஆலய முன்னாட் பிரதம குருவாக விளங்கியவர். — — — —

— பரிபாலனசபை, ஸ்ரீ பரமேஸ்வரி அம்பாள் ஆலயம்,
அத்தித்தோட்டம் கோப்பாய், தெற்கு, கோப்பாய்.

சிவப்பணியை உயிர்ப்பணியாக மதித்து ஆகம விதிகள் தவறாது அப்பணியை ஆற்றிவருபவர். கோப்பாயில் மட்டுமல்ல, அயற் கிராமங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பலவற்றிலும், தீவகத்திலும், சிறப்பாக நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பரம்பரைக் குருக்களாக அமர்ந்து பெரும் இறை பணி ஆற்றிவருகின்றார். ——......——

— திரு. த. தர்மராஜா
தலைவர், ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோவில்,
வடகோவை, கோப்பாய்.

★

கோவையூரின் பெருமைமிக்க மைந்தனும் அந்தணர்குல திலக மாகவும் போற்றி நிற்கும் இப் பெரியார் எமது நாடே போற்றும் முது பெரும் சைவத் தமிழறிஞர் என்பதையிட்டு எமது ஊரே இன்று பெருமை கொள்கின்றது. —......—

— திரு. சு. தயானந்தேஸ்வரன், தர்மபரிபாலனசபை,
ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், கோப்பாய்மத்தி.

★

அந்தணர்குல திலகமாக, பன்மொழிப் புலமையுடையவராக - உயிர்களிடத்துச் செந்தண்மையுடையவராக நம் கண் முன்னே திகழு கின்றார்கள். அவ்வாறான பெருமைக்குரியவர்கள் வாழ்ந்து வரும் சம யத்தில் நாமும் வாழ்ந்து கொண்டு இருப்பது நாம் செய்த பாக்கியமே யாகும்.

''மேழி பிடிக்கும் கையே வேல்வேந்தன் ஆக்குங்கை'' என்பது முதுமொழி. இதில் நம்பிக்கை கொண்டவர் எங்கள் குருக்கள் அவர் கள். —... . ...

— கோப்பாய் வடக்கு விவசாயச் சம்மேளனம்,
கோப்பாய்.

— வள்ளுவர் நெறியில் வையகம் வாழப் பணிபுரியும் பெருந்தகை
— கெ. காண்டீபன், வர்த்தக சங்கம், இருபாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய பிரதமகுருவாக நின்று நாற்றிசை போற்ற நற்பணி புரிவோன். சிவநெறிவளர இறைபணி புரிகின்ற சிறப்புடையோன்.

— ப்ரமஸ்ரீ சு. சச்சிதானந்தக் குருக்கள், கரவெட்டி

★

பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன், பரப்பிரம்மம் இவைகளாக விளங்குபவரே குரு, திருவருளைப் பெறவேண்டுமானால் குருவருள் வேண்டும். ஞானானுபவம் மிக்கவர்களாய் பிறருக்கு ஞானத்தை அளிக்கவல்ல அருளாளர்கள் 'குரு' என்றும், 'ஆச்சாரியார்' என்றும் 'ஆசிரியர்' என்றும் பெயர்பெற்று விளங்குபர். ஒரு குழந்தைக்கு தாய் தான் தந்தையைக் காட்டுகிறாள், அந்தக் குழந்தைக்கு தந்தை குருவைக் காட்டி குருவிடம் குழந்தையை ஒப்படைக்கிறார். குரு இறை அருளை காட்டுகிறார், குழந்தை குருவருளைப் பெற்றபின் இறைவனை அடைகிறது. — —

—ஸ்ரீ ஐயப்பதாசன் சாம்பசிவ சிவாச்சார்யா,
சர்வதேச இந்துமத குருபீடம்
(தலைமைச் செயலகம்) கொழும்பு.

★

'தான் வாழ்வான் வேண்டி' தன் ஆத்ம பலத்தை - பக்தியை, பிரேமையை, மஹாபாவத்தை இறையருள் மீது ''உருக்கி'' நாம் வாழ பரார்த்தபூசை செய்யும் பண்பாளர். –

— வைத்திய கலாநிதி ஆ. பேரின்பநாதன்
தலைவர், பாணாவிடை சிவன் தேவஸ்தான பரிபாலனசபை,
புங்குடுதீவு — 7

★

', உத்தமமா மியாழ்ப்பாண தேசமீதே
உறுகோப் பாயெனு பதியில் வாழ்வோன்
சுத்தமறை யோர்குலமே லுதித்த செம்மல்
சொன்மறையா கமமுதல் பலநூ லாய்ந்தோன்
வித்தகனாம் பரமசாமிக் குருவெனும் நாமம் பூண்டோன்
பவளவிழாக் காணும் நாளில் நீடு வாழி!

— திருமதி. வைத்தியநாதக் குருக்கள்
B. A. (Hons) (Dip. in. Ed.) பொலிகண்டி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மாவே!

★ S. K. தங்கவடிவேல் ★
( விலைமதிப்புப் பரிசோதகர் )

நாடுநலம்பெற நாமும் வாழ்ந்திட நல்லருள்புரிவாயே
நாலுபக்கமும் கடல்அதன்நடுவே நாயகி நீ இருப்பாய்
நாகபூஷணி நாமம்சொல்லிட நற்பலன்அளிப்பாயே
நாகபாம்பாய் புவிதனில்வந்து நன்மைகள்செய்திடுவாய்.

எமக்குள்இருக்கும் தாயே! உன்னை என்றும்பணிந்திடுவோம்
எல்லைஇல்லா இன்பம், அதனை நாமும்அடைந்திடுவோம்
தொல்லைகொடுக்கும் மக்கள்மனதை, அருளால்மாற்றிடுவாய்
கல்லைப்போன்ற இதயங்களை நீகனியச்செய்திடுவாய்.

பிள்ளைஇல்லோர்க்கு பிள்ளைகள்கொடுத்திடும் மணிபல்லவநாயகியே
'சுதந்தரி' என்ற பெயருடையவளே சுதந்திரம்கொடுக்காயோ
ஆரணி, தாரணி, நாரணி, பூரணி உன்பெயர்வளருதம்மா
சுதந்திரமாக நாமும்வாழ, எம் துன்பம்துடைப்பாயே.

வாடிவதங்கிடும் ஏழைகள்நெஞ்சில் மகிழ்ச்சிகொடுத்திடுவாய்
நாடிஉன்முன் கூடிடும்பக்தர் துன்பம்தீர்த்திடுவாய்
அதர்மம்ஒழியவும் அன்புவளரவும் ஆட்சிபுரிந்திடுவாய்
தர்மம்வளர்த்து பூமியைக்காக்க புறப்படுவாயம்மா.

'நான்' என்ற மமதை என்னுள்இருக்கையில்
என்னைநான் வெல்வதெப்போ
மனதில்விடுதலை பெற்றுநானும்
உன்னை அடைவதெப்போ
மனதில்விடுதலை வேண்டுமம்மா உன்னைஅடைந்திடவே
பொருளியல்சமத்துவம் வேண்டுமம்மா மக்கள் ஒன்றாய்வாழ்ந்திடவே.

பெரியவர், சிறியவர் பேதங்கள் மறந்து ஒன்றாய் வாழ்வோமம்மா
கூன், குருடு, செவிடை அணைத்துஅன்பாய் வாழ்ந்திடுவோம்
இருளைநீக்கி அருளைஅளிக்கும் அன்புத்தாயம்மா
உலகில்ஓங்கி நிற்கும்சக்தித் தாயே நீயம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY



# மகோற்சவ விளக்கம்

ஸாகித்திய சிரோமணி, வித்தியாகல்ப நிதி

**சிவஸ்ரீ ப. முத்துக்குமாரசாமிக் குருக்கள்**
( நயினை தேவஸ்தான விசேஷ குருக்கள்)
உத்தர கோவை யாதீனம்

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினா லவர்நல் விழாப்பொலிவுகண் டார்தல்
உண்மையா மெனின் உலகர்முன் வருகென உரைத்தார்
— சேக்கிழார்

உலகத்து உயிர்கள் எல்லாம் உய்திபெறுவான் வேண்டி அருட்டிரு மேனி தாங்கி ஆண்டவன் எழுந்தருளிய திருவடிவங்கள், பலப்பல வாகும். அத்திருமேனிகளின் பொலிவு தோன்றிய நாட்களெல்லாம் உயிர்கள் அனைத்திற்கும் நல் விழா நாட்களெனவே அமையும். இதனை,

உற்சவ விளக்கந்தன்னை யுரைத்திடில் உயிரதற்கு
முற்செனனங்கள் விட்ட முகிழ்த்ததோர் கருணையாலே
தற்பரன் தருமமாய தனிக்கொடி கட்டியுண்மை
சிற்பரத் துயிர்கள் முத்தி சேர்த்திடச் செய்வார் மன்னோ
— பண்டார சாத்திரம்

பண்டார சாத்திரங்கள் பேசாநிற்கும் உற்சவம் என்ற வட மொழிச் சொல்லுக்கு உத் - சப்தபாஹிதம் ஸவம் - சிருஷ்டி. அதாவது சிருஷ்டி மார்க்கத்தைக் குறித்தது என்பது ஆன்றோர் கண்ட முடிவாகும்.

உலகத் தோற்றத்திற்குக் காரணமாகப் போதமில் உயிர்கள் தம் மைக் கதியினிற் போக்க வேண்டியே தகுங்கருணையாலே உமையவ ளோடுங் கூடித் தத்துவங்களை நோக்குதலுமாகிய முத்தொழிலின் துவக்கமே உற்சவ என்ற சொல்லின் பொருளாகுமென்பர் மேலோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் வினைத்திட்டத்தால் நல்வினைத் தீவினை வயப்பட்டுக் கறங்கும் சகடமும் போல உழலு கின்ற நிலையில் எல்லா வினைகளையும் திருநோக்காலகற்றி ஆணவ மானபடலங்கிழித்துத் தன்மயமாக்கும் தனிப்பெருங்கருணைப் பொழிவே உற்சவமெனக் கண்டு வந்தனர். இந்தப் பெருவிழாக்களைப்பற்றிச் சைவ, வைணவ ஆகமங்களில் மிக மிக விரிவாகப் பேசப்படுவதைக் காண்கிறோம், இந்த விழாக்களையே இறைவன் செய்யு ; ஐந்தொழில் களாகவும் சிவாகமங்களில் பேசப்படுகிறது. இந்தப் பெரு விழாக்கள் நித்திய விழா, சிறப்பு விழா, வேண்டுதல் விழா என மூவகைப்படும். நாள் தோறும் பூஜையில் இருக்கையில் இருத்தி, நீராட்டி, மலர் தூவி முறையே வழிபாடாற்ற முடியாத நுண் வடிவங் கொண்ட சில தேவர் கள் வழிபாடாகப் பலி சிந்தி வணங்குதல் நித்திய விழாவாகும்.

ஆண்டு தோறும் ஒவ்வொரு திங்கள் முழுமதி உருவில் வரும் நாளினை முடிவாகக் கொண்டு செய்வது சிறப்பு விழாவாகும்.

நைமித்திக உற்சவம்.

நித்தியத் திருநாள் பக்க விழா நிகழ் திங்கட் கிழமை
புத்தலரிள வேனிற்கட் பொருவரு வசந்தங் கோடை
மெத்திய முது வேனிற்கண் மீதவை நீராட்டு மாரி
மெய்த்த கார்ப் பருவந் தன்னிற் பவித்திர முது விழாவும்
அன்புறு கூதிர்க்காலை யைப் பசிப் பூரச் சாறும்
முன் பனிப் பருவந் தன்னில் வைகறை எழுச்சிப் பூசை
பின் பனிப் பருவந் தன்னிற் பிறங்கு பொன்னூசலாட்டும்
என்பன சிறப்புமாக வியற்றுவோர் வீடு சேர்வார்.

உற்சவ விளக்கம்.

இவைகள் பயன் கருதாது செய்யப் பெறும் விழாக்களாகும். இன்ன பயன் வேண்டுமென இறைவனை வேண்டிப் பணிந்து தன்னுடைய பிறந்த நாட்களிலோ, அல்லது அரசன் பிறந்த நாள், வெற்றி பெற்ற நாட்களிலோ விழாவெடுப்பது ( காம்ய உற்சவம் ) வேண்டுதல் விழா வாகும். இம் மூவகை விழாக்களையும், ஆகமங்கள், சாகல்யம், பாவ னம், சாந்திகம், மாங்கல்யம் என நால் வகையாய்ப் பேசுகின்றன. முதற் கண் கூறிய சாகல்யம் அல்லது நலம் பெறுதல், என்ற விழா கொடி கட்டுதல் தொடங்கி நீராட்டுதல் இறுதியாகச் செய்யப்படும் விழாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது பாவனம் அல்லது தூய்மை பெறுதல் என்ற விழா கொடி கட்டுதல் மட்டுமின்றி மற்றெல்லா வழிபாடுகளுடனும் செய்யப்படும் விழாவாகும்.

மூன்றாவதான சாந்திகம் அல்லது கழுவாய் என்னும் விழா, காலையில் ஓமமும், பலியிடுதலும், மாலையில் திருவீதியுலாவும் செய்வதாகும்.

நான்காவதான மாங்கல்யம் அல்லது மங்கலப் பேறு எனும் விழா எசமானனும், குருவும் சேர்ந்து ஒரு நாளை முடிவு செய்து அந்நாளில் மேற்கூறிய கொடி கட்டுதல், நீராட்டுதல் முதலியன இன்றி விழா எடுத்தல் மட்டும் செய்வதாகும்.

இந்த விழாக்கள் ஒரு நாள் முதல் இருபத்தேழு நாட்கள் முடியக் கொண்டாடும் முறைகளும் காணக் கிடக்கின்றன.

ஒரு நாள் விழாவிற்குச் சைவம் என்று பெயராகும். இவ் விழாவும் கோஷணம் கேவலம் என இருவகைப்படும். பேரிகைகள் முழக்கிக் காப்புக் கட்டி விழாவெடுத்தல் கோஷணமாகும். இவ் விரண்டு மின்றி உலாப் போந்து அருளுதல் மட்டும் கேவலம் என்ற விழா.

மூன்று நாட்கள் செய்யும் விழா கௌணம்,
ஐந்து நாட்கள் செய்யும் விழா பௌதிகம்,
ஏழு நாட்கள் செய்யும் விழா பௌவனம்
இவ்வைந்து விழாவிற்கும் கொடி கட்டுதல் வேண்டாவாம்.

ஒன்பது நாட்கள் விழா தைவிகம்
பதினொரு நாட்கள் விழா பைத்ருகம்
பதிமூன்று நாட்கள் விழா கௌமாரம்
பதினைந்து நாட்கள் விழா சாவித்ரம்
பதினேழு நாட்கள் விழா சாந்திரம்
இருபத்தேழு நாட்கள் விழா சௌரம்

ஆகமங்களில் இவ்வாறு விழாக்கள், பிரமோற்சவம் என்ற பெயரில் பேசப்படுகின்றன.

இவ் விழாக்களில் 27 - 17 - 15, நாட்கள் நடைபெறும் விழாக்களில் எட்டுக்கொடிகளும், பிரதான கொடியும், ஐந்து கொடிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றம் பெறுதல் வேண்டும், இவ்விழா நமது திருவானைக் கோவி லிலும் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இவ்விழாக்கள் இறைவனின் ஐந்தொழிலையும் நினைவூட்டுகின்றன என மறைகள் பேசும். அவை யாவன:

அனுமதி பெறுதல், மண் எடுத்தல் முளையிடுதல், பேரி ஒலித்தல் முதலான வெல்லாம் சிருஷ்டி என்னும் - தோற்றம், திருவீதிஉலா, ஓமம், பலியிடுதல் முதலியன, திதி - காத்தல் பரிவேட்டை, தேரூர்தல் சாந்தம் அணிதல், சம்மாரம் என்னும் ஒடுக்கம் பொடியிடித்தல், நீராட்டு முளைவிடுதல், கொடி இறக்கல் முதலியன திரோபவம் என் னும் — மறைப்பு. திருஊடல் பக்தர் விழா — குருவணக்கம் அனுக்கி ரகம் அருளுதல் என ஐந்தொழிலும் பேசப்படுகின்றன.

இந்தப் பெருவிழா நாட்கள் கொண்டாடுதலின் பயன், உலகத்து உயிர்கள் அனைத்தும் சாம்பவீ தீக்கை என்ற முறைப்படி இறைவன் திருநோக்கால் உய்தி பெறுதல், உண்மை. தனையே '' தம் முதற் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த'' என்று சிவஞான போதம் பேசா நிற்கும். தீக்கை என்னும் சடங்குகளில். இறைவன் மண்டலம் கும்பம், அக்கினி, குரு. சீடன் என்னும் ஐந்து இடங்களையும் கலந்து நின்று அருள் பாலிப்பான் என்பது சிவாகமங்களின் முடிந்த முடி பாகும். அவ்வாறே இவ் விழாக் காலங்களில் ஐந்து இடங்களில் நின்று அருள் முறைமையும் பேசப்படுகிறது.

மண்டலம் - பலி நாயகர். கும்ப மூர்த்தி – அத்திர தேவர்
அக்கினி மூர்த்தி – சோமாஸ்கந்தர், ஆசாரிய மூர்த்தி - காப்புக் கட்டு நம்பியார்
சீடர்கள் – தீக்கை பெற்றோரும் பெறாதோருமாகிய அனைத்துயிர்களு மாகும்!

தீக்கை என்னும் சடங்கில் அக்கினி முதன்மை யானதாகும். அவ் வக்கினியும் வாகீசர் வாகீசுவரி ஆகிய உலகத்து மாதா பிதாக்களின் கருப்பத்தில் தோன்றியதாக அமைதல் வேண்டும். ஈண்டு வாகீசர் - சம்பு, வாகீசுவரி - போக சக்தி, குழந்தை அக்னி, கந்தப் பெருமான். இவ்வடிவத்தையே. சத்து, சித்து, அனந்தம் எனவும் கூறுவர் மே லோர். சிவபெரு விழாக்களில் மேலே குறிப்பிட்ட ஐந்து இடங்களி லும் நிறைந்து நின்று பிறப்பாலும், சாதியாலும், அறிவாலும் ஆற் றலாலும், செல்வத்தாலும், யோகம் முதலிய சித்திகளாலும் எல்லா வகையாலும் மேம்பட்டவர் எனவும் எத்துணை நலனுமில்லா மூர்க் கர். மூடர் கல்வி அறிவில்லாதவர், ஒழுக்கம் இல்லாதவர் முதலிய தாழ்ந்தோர் அனைவரையும் கருணைத் திரு நோக்கால் வினை களைந்து முத்தராந் தகுதி தந்து அருள் புரிதலே திரு வீதியுலாவின் தத்துவம் எனவும், மறைகள் பேசுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பெருவிழாக்கள் பதினெட்டு ( 18 ) விதமான முறைகளை உடையனவாம் அவையாவன – இடப வேள்வி, கொடிகட்டுதல், பாடி மகிழ்வித்தல். முளையிடுதல், வேள்வி, முத்திரை பெறுதல், பலி தூவல், திரு உலா, ஒப்பனை செய்தல், கண்படாது காத்தல், காப் பணிதல், புண்ணிய நீர் கொணர்தல், மஞ்சள் இடித்தல், நீராட்டுதல் கொடி இறக்கம், குட முழுக்கு திருமணம் அடியார் வழிபாடு எனப் பதினெட்டாகும்.

இப்பெரு விழாக்கள் எடுத்தலின் பயன்களாவன:

ஒரு நாள் விழா - அரசு உயர்தல்
மூன்று நாட்கள் விழா - இறை மகிழ்ச்சி
ஐந்து நாட்கள் விழா - வாழ்வாங்கு வாழ்தல்
ஏழு நாட்கள் விழா - இறையருள் பெறல்
ஒன்பது நாட்கள் விழா - மன நிறைவு
பதினொரு நாட்கள் விழா - நிறைவு
பதின்மூன்று நாட்கள் விழா - எல்லாம் கைகூடும்
பதினைந்து நாட்கள் விழா - மக்கட்பேறு
பதினேழு நாட்கள் விழா - புண்ணிய மிகுதி
பத்தொன்பது நாட்கள் விழா - கழுவாய்
இருபத்தொன்று நாட்கள் விழா - வெற்றிகாணல்!

இவ்வாறு ஒவ்வொரு உருவில் விழாச் செய்தலின் பயன்களைக் காண வேண்டியது இன்றியமையாதது.

இவ்விழா காண்பதன் பெருமையைப் பற்றி ஆளுடைய பிள்ளையார் கபாலீச்சரத்தின் பதிகத்தில் பங்குனி உத்திரநாள் ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய் என்று அருளியமை காண்க

கொடிகொள் செல்வ விழாக் குணலையனாகக்
கடிகொள் பூம்பொழிற் கச்சி மூலகம்பனார்

— திருநாவுக்கரசு சுவாமிகள்

பரமிகு நாட்சான்ற நிலத்தோர் பொருமணித்தேர்
சங்கத் தலைவரு ருட்டினார்

— திருவானைக்காப் புராணம்

கல்வரைப் பிராட்டி செவ் வேளைங்கரன் கணங்கள் சூழ
பல்வகை யூர்தி யும்பர் படரொளி யரச வீதி
யெல்லை யிலுயிர்கட் கெல்லா மென்னருங் கருணைபூத்துப்
புல்கொளித் திருவேகம்பன் திருவுலாப் போதச் செய்வார்
என ஐம்பெருங் கடவுளார் உலாவை - காஞ்சிப்புராணமும்
திரிமலத்தே குளிக்கும் உயிர் அருள்
கூடும்படி கொடி கட்டினனே—

என உமாபதி சிவாசாரியார் கொடிக் கவியிலும் இவ் விழாக்களைப் பற்றியும், இப் பெரு விழாக் காண்டலால் விளையும் நற்பயன்களைப் பற்றியும் கூறப் பெற்றிருத்தல் காண்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௳

# வழிபாடும் அதன் தத்துவங்களும்

உத்தர கோவை, பிரதிஷ்டா கிரியா கலாபமணி

சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள்

"வார மாய்வழி பாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே!" - திருஞானசம்பந்தர்

## முன்னுரை – வழிபாடு

வழிபாடு என்பது மனித வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையாத ஒன்று. உடல் நலத்திற்கு உணவு தேவை. அது போல உயிர் நலத்திற்கு வழிபாடு மிகவும் தேவை. தண்ணீர் நமது தாகத்தைத் தணித்து நம் உடலுக்கு நன்மைகள் புரிகின்றது. அது போல வழிபாடு நமது ஆன்ம தாகத்தைத் தணித்து, நமது உயிர்க்கு நன்மைகள் பல விளைவிக்கின்றது. வாழ்விற்குக் காற்று மிக மிக வேண்டப்படுகின்றது மூச்சுக் காற்று இல்லாமற் போனால் நாம் ஒரு சில கணங்களும் வாழ்தல் கடினம். அங்ஙனமே நமது ஆன்மிக வாழ்விற்குக் காற்று, வழிபாடு என்பது பெரிதும் வேண்டுவதொன்றாக உள்ளது. மூச்சுவிடுதல் இயல்பாக நிகழ முடியாமற் போகுமாயின், நாம் பெரிதும் திக்குமுக்காடித் திணறிப் போவோம். அவ்வாறே வழிபாடு என்பதனை நாம் நம் வாழ்க்கையிற் கடைப்பிடிக்காதொழிந்தால் நமக்கு வாழ்க்கையில் இடையறாத பல அல்லல்களும், தொல்லைகளும், கவலைகளும் நேர்ந்து கொண்டேயிருக்கும். இவ்வுலகில் தொல்லைகளும் கவலைகளும் இன்றி நாம் இன்புற்று வாழ்வதற்கு உரிய நேரிய ஒரேவழி தனக்குவமை இல்லாதான் தாள் சேர்தல் ஆகிய வழிபாடு புரிதலேயாகும்

நமது உடலிற் படியும் அழுக்குகளை, நீராடிக் குளித்துப் போக்கிக் கொள்கின்றோம். அவ்வண்ணமே நமது உள்ளத்தைப் பற்றியுள்ள பல வகை மாசுகளையும், இறைவனைத் தியானித்து வழிபாடு புரிவதன் மூலமே நாம் போக்கிக் கொண்டு மகிழ்வுடன் வாழ்தல் கூடும். உடலுக்கு நேரும் பிணிகளை மருந்துண்டு தீர்த்துக் கொள்கின்றோம். அம் முறையில் உயிரைப் பற்றியுள்ள மலப் பிணிகளை வழிபாடு புரிவதன் வாயிலாகவே நாம் தீர்த்துக் கொள்ளுதல் இயலும்

187281

## வழிபாட்டின் சிறப்பு

உணவும், நீரும், காற்றும் நீராடலும், மருந்துண்ணலும், உடல் வாழ்விற்குப் பலவகையான நலங்களை விளைவித்தலைப் போல, நமது உயிர் வாழ்விற்குப் பலவகையான நலங்களை விளைவித்தலைப் போல, நமது உயிர் வாழ்விற்கு வழிபாடு மிகப் பெரிதும் இன்றியமையாததாகப் பெரு நலங்களைப் புரிகின்றது. அது பற்றியே இற்றைக்குச் சற்றேறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே,

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே"

என்ற நூற்பாவில், ஆசிரியர் தொல்காப்பியர் வழிபாடு பற்றிக் குறிப்பிட்டருளியுள்ளார். வழிபாடு இன்றியமையாததென்பதும், அது மனிதவுயிரன்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தைக் குறித்து நிகழ்தல் வேண்டும் என்பதும், வழிபடுவோரை வழிபடப் பெறும் தெய்வம் காத்தருளும் என்பதும், வழிபாட்டின் பயனாகப் பழிதீர் செல் வங்கள் பற்பலவற்றை எய்தலாம் என்பதும், வழிபடுவோர் மட்டுமேயன்றி அவர் தம் வழிவழியாக வரும் உற்றார் உறவினரும் கூட வழிபாட்டின் பயனாக சிறப் புற்றுப். பொலிந்து, இன்புற்று வாழ்வார்கள் என்பதும். நுண்ணிதின் எண்ணி யுணரும்படி ஆசிரியர் தொல்காப்பியர் இந்நூற் பாவினால் விளக்கியிருத்தல் காண லாம். இங்ஙனமே ஆசிரியர் தொல்காப்பியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி,

''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிச் செய்திருத்தலும் நாம் சிந்தித்து உணர்தற்குரியது. தொல்காப்பியர் தெய்வம் என்றதனைக் தனக்குவமை இல்லாதான் என்றும் வழிபாடு செய்தலைத் தாள் சேர்தல என்றும் திருவள்ளுவர் விரித்துரைத்து விளக்கியிருக்கும் நுட்பம் கருதி யுணரப்பாலது.

''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கெல்லாம்
மனக் கவலை மாற்றல் எளிது''

என உடன்பாட்டு முகத்தாற் கூறி அமையாமல் அக்கருத்தினையே ''தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது'' என இரண்டு எதிர்மறை வாய்பாட்டுச் சொற்கள் இட்டுக் கூறித் திருவள்ளுவர் பெருந்தகை வற்புறுத்தி யிருக்கும் திறமும், நாம் பலகாற் பலவகையில் நயந்தினிது ஆராய்ந்து நன்குண ரற்பாலது.

## வழிபாட்டின் பயன்

அரசன் தலைவன் போன்ற மனிதர்களை வழிபடும் வழக்கம் பண்டைக் காலத்திற் பலதிற மக்களிடையே இருந்ததாதலின் அது கூடாது என்பார் தனக்கு வமை இல்லாதான் என்றும் வழிபடும் தன் சிறுமையையும் வழிபடப் பெறுவோனது பெருமையையும் உள்ளவாறு உணர்ந்து புகலடைதலே வழிபாடு என்பார். தாள் சேர்தல் என்றும் வழிபாட்டின் பயன் இஃதென்பார் மனக்கவலை மாற்றல் என்றும் வழிபாடு ஒன்றினால அன்றிவேறு எதனாலும் கவலை தீர்த்துக் கொள்ளல் இய லாது என்பார் அரிது'' என்றும் தெய்வப்புலவர் திறந்தெரிந்து இயம்பியருளினார் உறற்பால தீண்டாவிடுதல் அரிது என்றாற் போல ஈண்டு அருமை இன்மை மேல் நினறது எனப் பரிமேலழகர் தந்துள்ள விளக்கவுரையும் இங்கு ஊன்றி நோக்கி யுணர்தற்குரியது.

இம்மட்டோ! இத்திருக்குறளின் கண் வறிதே கவலை என்னாமல் மனக் கவலை என்றதனால், மனமுடையார் எவ்வாறாயினும் அவரனைவர்க்கும் கவலை யுண்டு என்பதும், அதனை அவர்கள் எவ்வாற்றாலும் தாமே தீர்த்துக் கொள்ளுதல் ஒரு போதும் இயலாது என்பதும் குறிக்கப் பெற்றன. கல்வி செல்வம் புகழ் பதவி ஆற்றல் ஆணை முதலிபன பலவும் பெற்றவரேயாயினும், அவரனைவரும் கட வுளை வழிபட்டேயாதல் வேண்டும் என்பது, இதனால் மிக மிக வலியுறுத்தப் பெற்றது. கண் காண்டற்கும், வாய் பேசுதற்கும், காது கேட்பதற்கும் பிற பிற ஏனைய செயல்களைச் செய்தற்கும் படைக்கப்பட்டவாறு போல, மனம் கடவுளை நினைந்து வழிபடுவதற்கே அமைந்தது. என்பதும், இவ்வாற்றாற் புலப்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது, மேலும், கடவுளை வழிபடாதவன் மனமுடைய மனிதனல்லன். உடல
ளவில் மனிதனாய். இயல்பினால் விலங்கு நிலையிலேயே இழிந்து தாழ்ந்து கிடப்
பன் என்பதும் இங்கு திருவள்ளுவர் பெருமானால் அறிவுறுத்தப்பட்டது

இனி வேறொன்றும் நாம் இங்கு எண்ணியுணரத் தக்கதாக இருக்கிறது. மனக் கவலை தீர்த்தல் என்று கூறாமல் மனக் கவலை மாற்றல் என்று குறிப்பிட்ட தன் சிறப்பு யாது என்று நாம் உன்னித்து உணர்தல் வேண்டும். தீர்த்தல் எனின், துன் நீக்கம் ஒன்றுமே குறிப்பிடப் பெற்றதாகும். மாற்றல் என்றதனால் துன்ப நீக்கமும் அதன் மறுதலையாகிய இன்ப ஆக்கமும் ஆகிய இரண்டும் ஒரு சேரக் குறிப் பிடப்பட்டன. இவ்வாற்றால், கடவுளை வழிபடுவோர் அனைவரும் துன்பம் நீங்குவ தோடு மட்டும் அன்றி, இன்பமும் ஓங்கப் பெறுவர் என்று வழிபாட்டின் பயனைத் தெளிவித்தருளினார் ஆசிரியர் திருவள்ளுவர்.

''துன்பம் இன்றித் துயர்இன்றி என்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்,
எனபொன் ஈசன் இறைவன்என றுள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே''

திருநாவுக்கரசர்

## வழிபடும் முறைமை

வழிபாடு என்பது நம்மை நாமே தூய்மை செய்துகொள்ள முனையும் ஒரு சிறந்த நன்முயற்சியாகும். நம்மிடம் பலவகை அழுக்குகள் உள்ளன. உடலின் புற அழுக்கை நாம் நீராடி ஒருவகையிற் போக்கிக் கொள்ளலாம். ஆனால் நம்முடைய மனம், மொழி, மெய் என்னும் மூன்றிலும் உள்ள அழுக்குகள் நீரினால் கழுவிப் போக்கிக் கொள்ளக் கூடியன அல்ல. அழுக்காறு, அவா, வெகுளி, செற்றம், முதலிய மன அழுக்குகளைத் தியானத்தினாலும் பொய், புறங்கூறல், இன்னாச்சொல் பயனில்சொல் என்னும் வாய் அழுக்கைத் துதியினாலும் தீச்செயல்கள் புரிதலாகிய மெய் அழுக்கை அருச்சனையினாலுமே நாம் போக்கிக் கொள்ள முடியும். இங் ஙனம் மனம், மெய், மொழி என்னும் முக்கரணங்களின் அழுக்கையும் தியானம் துதி, அருச்சனை என்னும் மூன்றினாலும் போக்கிக் கொள்ள முனையும் சிறந்த நல்ல முயற்சியே வழிபாடு எனப்படும். இவ்வாறு வழிபாடு புரியும் முறைமை யினைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் விளக்கியருள்கின்றார்.

''திருக்குறும் அழுக்காறு அவாவொடு வெகுளி
செற்றம் ஆகிய மன அழுக்கைத்
தியானம்எனும் புனலால் பொய் புறங்கூறல்
தீச்சொல் என்கின்ற வாய் அழுக்கை
அருட்கிளர் நினது துதிஎனும் புனலால்
அவத்தொழில் எனும் மெய் அழுக்கை
அருச்சனை எனும் புனலினாற் கழுவா
அசுத்தனேன் உய்யும் நாள் உளதோ''

-சிவப்பிரகாசர்

## மனத்தூய்மையும் வழிபாடும்

தமிழ் நாட்டில் தோன்றியருளிய மெஞ்ஞானச் சான்றோர்கள் பலர். அவர் களுள் தலைசிறந்த ஒருவர் பட்டினத்தடிகள். பட்டினத்தடிகளின் பெருமையினை வியந்து, வேதாந்த சித்தாந்த சமரச ஞானச் செல்வர் ஆகிய தாயுமானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பார் அனைத்தும் பொய் எனவே
பட்டினத்துப் பிள்ளையை போல்
ஆரும் துறக்கை அரிது! அரிது''

எனப் புகழ்ந்து பராட்டியுள்ளார். அத்தகைய சான்றோர் ஆகிய பட்டினத் தடிகள் நம்மனத்தில படிந்து படர்ந்து கிடக்கும் அழுக்குக் குப்பைகளையும், அவற் றைக் களைந்து கழித்துத் துப்புரவு செய்யும் முறைகளையும் பற்றித் தம்முடைய பாடல் ஒன்றில் அழகுறக் குறிப்பிட்டருள்கின்றார். நம்முடைய மனம் ஒரு சிறந்த அற்புதமான கருவி மிகவும் புனிதம் வாய்ந்தது. நாம் அதனைப் பயன்படுத்து வதற்கு ஏற்ப அஃது உயர்ந்ததாகவோ, இழிந்ததாகவோ அமைகின்றது. நமது மனம் ஒரு சிறந்த மாளிகையாக விளங்கத்தக்கது. அதனை நாம் ஒரு தொழுவம் அல்லது மாட்டுக் கொட்டிலாகச் செய்து விட்டிருக்கின்றோம். அங்கே காமம் வெகுளி மயக்கம் முதலிய அழுக்குக் குப்பைகள் நீண்ட காலமாக மாற்றி. அங்கே மெய் வாய், மூக்கு கண்,செவி என்னும் ஐம் பொறிகள் ஆகிய கரிய எருமைக் கடாக் களைக் கட்டி வைத்திருக்கின்றோம். அத் தொழுவம் மிகவும் இருள் படர்ந்து மங்கிக் கிடக்கின்றது. அதன் தரையே அசுத்தம் நிறைந்தது. தீ நாற்றம மிகுந்து காணப்படு கின்றது.

பட்டினத்தடிகள் மனமாகிய மாளிகை, பராமரிப்பு இன்றிப் பாழ்பட்டுப் பாழறையாய்த் தொழுவமாகப் பழுதடைந்து கிடத்தலைக் காண்கிறார் மிகவும் வருந்துகின்றார் அதனைத் தூய்மைப்படுத்த முனைகிறார். காமம் வெகுளி மயக் கம் ஆகிய குப்பைகளையெல்லாம் அரிதின் முயன்று ரோபக்குகின்றார் ஐம்பொறி களாகிய ஐந்து கடாக்களையும் அவிழ்த்து அகற்றி விடுகின்றார். அன்பு கொண்டு மெழுகி அங்கே இருந்த மேடு பள்ளங்களைப் போக்கித்துப்புரவு செய்கிறார். அரு ளுணர்வு எனும் ஒளி விளக்கை ஏற்றி வைத்து, அறியாமை என்னும் துன்ப இருளை ஓட்டுகின்றார். உண்மை என்னும் விதானம் விரித்துப் பாப்பி அப்பாழ றையை அழகுபடுத்தி பள்ளியறையாக்குகின்றார். அங்கே ஒரு நல்ல கணவனையும் மனைவியையும் குடியேற்றி வைக்க விரும்புகின்றார். அதன்கண் இருதய கமலம் என்னும் செழுமலர்ப் பூந்தவிசு ஆகிய கட்டில் ஒன்றை கொணர்ந்து இருக்கின் றார். அக்கட்டிலின்கண் இமயக்கொழுந்து ஆகிய பார்வதிதேவியையும் உடன் அழைத் துக் கொண்டு குடிவந்து எழுந்தருளியிருக்கும்படி சிவபெருமானைப் பட்டினத் தடிகள் வேண்டிக் கொள்கின்றார். இங்ஙனம் அடிகளார் கூறுவது போல நாமும் நமது பாழறையாகிய மனத்தைப் பார்வதியும் பரமேஸ்வரனும் ஒருங்கே எழுந் தருளி வணங்கத் தகுந்த சிறந்த பள்ளியறையாகும் வண்ணம் பல்லாற்றாலும் தூய்மை செய்து பொலிவுற வைத்துக் கொள்ளும் செயலே வழிபாடு எனப்படும்.

வழிபாடு இன்னது என்பதனை வேறொரு வகையாகவும் பட்டினத்தடிகளார் விளக்குகின்றார். நம்முடைய மனம் ஒரு சிறந்த புனம் போன்றது. அதனை நாம் பாழாக்கிக் கொண்டிருக்கின்றோம். அதனால் அங்கே காமம், என்னும் காடு மண்டிவளர்கின்றது. அதன்கண் ஐம்புலன்கள் ஆகிய வேடர்கள் மறைந்திருந்து கொண்டு வழிப்பறி செய்து வாழ்ந்து வருகின்றனர் இன்பம் என்னும் பேய்த்தேர் அங்கே சுற்றித் திரிந்து அலைந்து வருந்துகின்றன. அங்கு உலக ஆசை என்னும் விதை விழுந்து அகந்தை என்னும் ஒரு பெரிய நச்சுமரம் வளர்ந்துள்ளது. அது பொய் ஆகிய கிளைகள் நீட்டிக் கொண்டும பாவம் ஆகிய பல தழைகள் பரப் பிக் கொண்டும் இருக்கின்றது. கொடுமை ஆகிய அரும்பு கடுமை என மலர்ந்து துன்பம் ஆகிய பல காய்களைக் காய்த்து. மரணம ஆகிய கனிகளைப் பழுத்து எவருக்கும பயன்படாதபடி, நரகம் ஆகிய குழியில் வீழ்த்திக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மனம் ஆகிய புனத்தில் பரவிப் படர்ந்து கிடக்கும் வஞ்சம் ஆகிய அடிமரக் கட்டைகளை வேரோடு தோண்டி அகற்றிக் குழிகளைத் தூர்த்துச் செப்பனிடுதல் வேண்டும். அதன் பின் அங்கே அன்பு என்னும் பாத்தி கோலி, மெய் என்னும் எருவினை நிரம்பப் பெய்து, பக்தி என்னும் விதையை விதைத்து, ஆர்வம் ஆகிய தண்ணீர் பாய்ச்சி, ஐம்புலன்கள் ஆகிய பட்டி மாடுகள் மேயாதபடி சாந்தம் ஆகிய வேலி கோலிப் பாதுகாத்து வருதல் வேண்டும். அங்ஙனம் பாதுகாத்து வந்தால், சிவஞானம் என்னும் செழுமுளை தோன்றும். கருணை இளந்தளிர் காட்டும அச்சிவஞானம் என்னும் பயிர் தழைக்கும் பொருட்டுக் காமம் குரோதம் லோபம். மோகம், மதம், மாற்சரியம் முதலிய களைகள் வளராதபடி, அவ்வப் போது களையெடுத்து வந்தால், தண்ணீர் அரும்பும்; திருவைந் தெழுத்து' ஆகிய அருங்காய் தோன்றும். அது பவள நிறம் பெற்றுத் தவளநிறம்பூசி, அறுசுவை யதனினும் உறு சுவையுடைத்தாய் காணினும் கேட்பினும் கருதினும் சுவை மிகப் பயக்கும் மருதமாணிக்கத் தீங்கனி ஆகிய சிறந்த பழத்தினை அளிக்கும். அதனை நாம் இனிதின் அருந்திச் செம்மாந்து சிறப்புற்றுச் செழித்து மகிழ்ந்து வாழலாம் என்கின்றார். பட்டினத்தடிகள். இங்ஙனம் மனம் ஆகிய புனத்தினைத் திருத்தி வளப்படுத்திப் பயன் கொள்ளும் நற் பெருஞ் செயலே வழிபாடு எனப்படும்.

## வழிபாட்டின் வகை

வழிபாடு என்பது, புற வழிபாடு, அக வழிபாடு என இரு வகைப்படும். புற வழிபாட்டினும், அக வழிபாடே மேலானது. புற வழிபாடு புரியப் புரிய அது நம்மை அக வழிபாட்டிற் கொண்டு செலுத்தும் நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சனநீர் என்னும் நிலையில் அமையக் கொண்டு, இறைவனைத் தியானித்து முறைப்படி பூஜிக்கும் நெறியே, அக வழிபாடு ஆகும். இதன் இயல்பினை

''காயமே கோயில் ஆகக்
கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக
மனமணி இலிங்கம் ஆக
நேயமே நெய்யும் பாலாக
நீறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப்
போற்றவிக் காட்டி னோமே''

எனத் திருநாவுக்கரசர் முதலிய செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர்கள் விளக்கியிருத்தல் கொண்டு தெளியலாம்.

இத்தகைய சிறந்த அக வழிபாடு புரிந்த நமது செந்தமிழ்ச் சிவநெறிச்சான்றோர்கள், யோகஞான நுண்ணுணர்வால் தமது உடம்பையே ஒரு கோயிலாகக் கண்டுணர்ந்தனர். அங்ஙனம் கண்டுணர்ந்தபடியே புறத்தே பல கோயில்களைத் தமது உடம்பின்கண் முதல் கண்ட இயல்பிற்கேற்ப இனிதமைத்து வைத்தனர். நமது மனித உடம்பின் கண் முதன்மையான ஆறு இடங்கள் உள்ளன எனவும் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம், கொப்பூழ், மேல் வயிறு, நெஞ்சம், மிடறு, புருவநடு என்கின்ற ஆறும் ஆகும் எனவும் நுண்ணிதிற் கண்டுணர்ந்தனர் யோக நூல்கள் இவற்றை முறையே மூலா தாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம் விசுத்தி, ஆக்ஞை, என்னும் ஆறு ஆதாரங்களாகக் கூறும்.

மூலாதாரம் எருவாய் கருவாய்க்கு இடையே நிலத்தின் தன்மையும், கொப் பூழ் நீரின் தன்மையும், மேலும் வயிறு நெருப்பின் தன்மையும், நெஞ்சம் வளியின் தன்மையும், மிடறு விசும்பின் தன்மையும் உடையதாக விளங்கும். புருவநடு என்பது இடைகலை, பிங்கலை சுழுமுனை நாடிகள் கலக்கும் இடமாகத் திகழும். இவ்விடங்க ளில் இறைவனின் அருள் விளக்கத்தைக் கண்டு தொழுது வழிபட்ட நம் தமிழ்ச் சான்றோர்கள் தாம் அகத்தே கண்டறிந்த இறையருள் நிலையினை ஏனைய எளிய பொது மக்களும் உணர்ந்து பயன் பெறுதற் பொருட்டு அவ்வியல்பு பிறழாமல் புறத் தேயும் ஆறு இடங்களில், ஆறு பெருந் திருக்கோயில்களாகப் பொருத்தமுற அமைத்து வைத்தருளினர்.

நிலத்தின் தன்மையுடைய மூலாதாரத் தலமாகப் புற்றிடங் கொண்ட பெரு மான் எழுந்தருளி வீற்றிருக்கின்ற திருவாரூரையும் (மணலால் இலிங்கம் அமைத் துக் காமாக்ஷியம்மை பூசித்த தலம் ஆகிய காஞ்சீபுரத்தையும்) நீரின் தன்மையுடைய கொப்பூழ் நீர் ஊறும் தலமாகிய திருவானைக்காவையும்: உணவைச் செறிப்பிக்கும் நெருப்பின் தன்மையுடைய மேல் வயிறாக நெருப்பியற் பாறைகள் நிறைந்த திரு வண்ணாமலையும்: மூச்சுவழி இயங்கும் நெஞ்சகமாக இறைவன் திருநடம் புரியும் தில்லைச் சிற்றம் பலத்தையும் விசும்பின் தன்மை நிலை பெறும் மிடற் றின்கண் திருக்காளத்தியையும்: இடைகலை, பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகள் கூடும் புருவநடுவாக யமுனை, கங்கை, சரஸ்வதி என்னும் மூன்று ஆறு கள் கூடுகின்ற பிரயாகை அல்லது வரணை ஆசி என்னும் இரண்டு ஆறுகள் கூடு கின்ற காசியையும்: இவற்றிற்கு மேற்பட்ட பிரமேந்திரம் என்னும் தலையுச்சியாகத் திருக்கையிலையினையும்; அங்கே பெருகுகின்ற அமுத ஊற்றினை மானச சரோ வரம் என்னும் தெய்வப் பொய்கையினையும் சிறந்த முறையிற் பலவகைகளிற் பொருந்துமாறு உருவகம் செய்து நம் சான்றோர்கள் கோயில்கள் எடுப்பித்து அமைத் துள்ள அரும் பெரும் நுட்பங்கள் ஆழ்ந்து ஆராய்ந்து அகமகிழ்தற்குரியன.

## புறவழிபாடு

புறவழிபாடு: புறத்தே வழிபாடு புரியுங்கால், இறைவனுக்குப் பூச்சாத்துதல், சந்தனம் பூசுதல், நிவேதனம் படைத்தல், தூபம் இடுதல், விளக்கேற்றுதல், துதிபாடு தல் ஆகிய செயல்களைச் செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்யுங்கால், இறைவ னுக்குத் திருமால் போலப் பூச்சாத்தியும், மூர்த்தி நாயனார் போலச் சந்தனம் பூசி யும், அரிவாட்டாய நாயனார் போல நிவேதனம் படைத்தும், ஸ்ரீ குங்கிலியக் கலய நாயனார் போலத் தூபம் இட்டும், கலிய நாயனார் போலத் திருவிளக் கேற்றியும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் போலத் துதிபாடியும், நாம் மிக்க அன்புடன் வழி பாடு புரிதல் நலம் பயக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நிலங்கடந் தவன்முன் நறுமலர் சாத்த
நிகரில் அம், மூர்த்திமுன் சத்து
நினக்கணிவுற வாட்டாயர்முன் இருந்து
நிவேதனம் புரிந்திட அன்று
நலங்கிளர் கலையர் கலியர்முன் தூபம்
நல்விளக்கு அளிப்ப, நின் தன்னை
ஞானசம பந்தப் பிள்ளைமுன் பாட
நாணிலேன் பூசனை, புரிவேன் '' — சிவப்பிரகாசர்

## அக வழிபாடு

அகவழிபாடாவது, உடம்பின் அகத்தே இதயம், உந்தி, புருவநடு என்னும் மூன்றினையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானம் எனக் கருதிக் கொண்டு, புறம்பே பூசை செய்யும் முறைப்படி இதய பங்கயத்தில் திருவைந்தெழுத்தால் அமைந்த திருமேனியில் இறைவனை எழுந்தருளிவித்து, கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டமாமலர் தூவி, திருவைந்தெழுத்தால் அருச்சனை செய்து. அத்திருமந்திரத்தாலே குண்டலித்தானம் ஆகிய உந்தியில் ஞான அனலை எழுப்பி அதன்கண் விந்துத்தானத்து அமிழ்தம் ஆகிய நெய்யைச் சுழுமுனைநாடி இடைநாடி ஆகிய சுருக்குச் சுருவங்களால் ஓமம் செய்து விந்துத்தானம் ஆகிய புருவநடுவிற் சிகரயகர வகரங்கள் மூன்றும் முறையே தற்பதப் பொருளும் துவம்பதப் பொருளும் அசிபதப் பொருளுமாம் முறைமை நோக்கி அதனாற் சிலோகம்பாவனை செய்தல் அங்ஙனம் செய்யின் அச் சிலோகம் பாவனைக்கண் இறைவன் விளக்கித் தோற்றுவான் என்று சிவஞானபோதம் விளக்குகின்றது.

''தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம் வணங்கித்
தன் அன்பார் மஞ்சனநீர் தாம் ஆட்டித் தம்மை ஒரு
பூவாக்கிப் பூ அழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை அன்றே உளன்''

எனத் திருக்களிற்றுப் படியார் என்னும் சைவ சித்தாந்த சாத்திர ஞானனானுபவ நூலும் இவ்வக வழிபாட்டின் தத்துவ நுட்ப இயல்பை இனிது விளக்குகின்றது

## முடிவுரை

வழிபாடு என்பது, ஒருவன் தோற்றுவிக்கக் கூடிய மிகமிகச் சிறந்த வன்மைமிக்க ஒரு பேராற்றல் ஆகும் இவ்வாற்றல், நிலத்தின் ஈர்ப்பு ஆற்றல் எங்ஙனம் உண்மையானதோ, அங்ஙனம் உண்மையானதாகும். ஒரு மருத்துவன் என்ற முறையில், எல்லாப் பிற மருத்துவங்களும் பயனற்றுத் தோல்வியுற்று விட்ட பிறகு, வழிபாடு என்னும் அமைதியான முயற்சியின் மூலம், பிணியினின்றும் கவலையினின்றும் மீட்டுவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தப் பெற்ற மனிதர்களை யான் கண்டிருக்கின்றேன். ரேடியம் என்னும் கதிரியைப் போல, வழிபாடு என்பது, தன்னில் இருந்து ஒருவன் தோற்றுவிக்கக் கூடிய ஒளி மிகுந்த ஆற்றலின் ஒரு பிறப்பீடம் ஆகும். வழிபாட்டின் கண், மனிதர்கள் தங்களுடைய ஓர் எல்லைக்குட்பட்ட ஆற்றலினை மிகுதிப்படுத்திக் கொள்வதற்கு, எல்லா ஆற்றல்களுக்கும் தாயகமான எல்லையற்ற பரம் பொருளைத் துதித்து அதனோடு தொடர்பு கொள்ள முயல்கின்றார்கள்.

வழிபாடு செய்யும் பொழுது இவ்வுலகத்தைப் படைத்த குறை விலா நிறைவாகிய இயவுள் ஆற்றலோடு. நம்மை நாம் தொடர்வு படுத்திக் கொள்கின்றோம். அப் பேராற்றலின் ஒரு பகுதியை நம்முடைய தேவைக்கு ஏற்பப் பகிர்ந்து அளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்

வேண்டிக் கொள்வதனாற் கூட, நம்முடைய மனித வாழ்வின் குறைபாடுகள் நிறைபாடுகள் நிறைவெய்துகின்றன; நாம் புத்தாற்றலும் புத்துயிர்ப்பும் பெறுகின்றோம். உள்ளார்ந்த அன்பு மேலீட்டால். நாம் கடவுளைத் துதித்து வழிபடும் பொழுது நாம் நம்முடைய உடலையும் உயிரையும் புதிய சிறந்த நிலைக்கு மாற்றிக் கொள்கின்றோம். எந்த ஓர் ஆணோ பெண்ணோ ஏதாயினும் சில நலங்களைப் பெறாமல், ஒரு கண மேனும் வழிபாடு புரிதல் என்பது. நடவாத செயலாகும். ஒரு கண நேர மேனும் உண்மையாக வழிபடுவோர் தாம் விரும்பும், நலன்களை அடைந்தே தீருவர் என்று அலெக்ஸில் காரெல் என்னும் அமெரிக்க நாட்டு மருத்துவப் பேரறிஞர் கூறுவது வழிபாடும் அதன் தத்துவங்களும் பற்றி நாம் அறிந்து கொண்டு கடைப்பிடித்தற்கு, நமக்குப் பெரிதும் ஊக்கமூட்டித் துணை புரிவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவத்தில் துவஜஸ்தம்பம்

சிவாச்சார்ய திலகம்
**சிவஸ்ரீ ப. சண்முகராஜக் குருக்கள்**
**( கோப்பாய் கண்ணகை அம்மன் தேவஸ்தானம் )**

திருக்கோயிலைத் தூரத்தே கண்டு தொழுவதற்கு வசதியாகவமைந்துள்ளது திருக்கோபுரம் - வானுற வோங்கி நின்று நம்மை வா வா வென்று வரவழைப்பது கோபுரம். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றும் கோபுர தரிசனம் பாவ விமோசனம்" என்றும் கூறுவர். இதனை,

***சுப்பிரபேதாகமம்***

''தூரதஸ்சிகரந்த்ட்வா நமஸ்கார்யாத்து யொநர:
முச்யதே ஸர்வ பாபேப்யோ நிர்மோகாதிவ பற்நகா:
தேவாலயாத் ப்ரத்ருஸ்யந்தே விமாநா: கோபுராவிதா:
யாவத்தே சேஷு பரித: தாவத் கைலாச பூதலம்.''

(அதி தூரத்திலிருந்து விமானத்தையோ, கோபுரத்தையோ பார்த்து விட்டால், எவன் வணங்குகின்றானோ, அவன் பாம்பு சட்டையிலிருந்து விடுபடுவதுபோல சகல பாபங்களிலிருந்தும் விடுதலை பெறுகின்றான். ஓர் ஆலயத்திலிருந்து அவ்வாலயத்திலுள்ள கோபுரமும் ஸ்தூபிகளும் எவ்வளவு தூரம் தெரிகின்றதோ அவ்வளவு தூரம்வரை கைலாசமாகக் கொள்ளப்படும்) இதனை,

***பெரியபுராணம்***

''நின்று கோபுரத்தை நிலமுறப்பணிந்து
நெடுந்திரு வீதியை வணங்கி
மன்றவார் செல்வ மறுகினூடேகி
மன்னிய திருப்பதி அதனில்
தென்றிசை வாயில் கடந்து முன் போந்து
கேட்படுந் திருவெல்லை இறைஞ்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றை வார் சடையான் அருளையே நினைவார்

கொள்ளிடத் திருநதி கடந்தார்'' என்று கூறுகின்றது

கோபுரத்தை தொழுது உள்ளே போகும் போது துவாரபாலகர் இரு வர் நிற்பதைக் காண்கின்றோம். அவர்களையும் தொழுதுவிடை பெற்று. உள்ளே போனதும் ஓங்கியுயர்ந்த கொடிமரத்தைக் காண்கின்றோம் கொடிமரம் திருக்கோவிலின் மையப் புள்ளிபோல அமைந்துள்ளது அதன்முன் பலிபீடம் என்னும் பத்திரலிங்கமும் நந்தி என்னும் பக்கு வான்மாவும் இருப்பதைக் காணலாம்.

திருக்கோயிலில் நித்திய பூசைகளில் உண்டான குறை குற்றங்களைப் போக்குவன நைமித்திய பூசைகள். நைமித்திய பூசைகள்ஆண்டுக் கொரு முறை நடைபெறுவன. நைமித்திய விழா ஆரம்பிப்பதற்கு கொடியுயர்த்துதல் பிரதான கருமம். கொடியேற்றுவதற்கு ஆதாரமாயமைந்தது கொடிமரம்.

கொடிமரத்திற்கு துவஜஸ்தம்பம் என்றும் அதை வீணாதண்டம், மேருதண்டம், என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. கொடிமரம் மூலஸ்தானத்திற்கு தேவ விம்பத்திற்கு நேராக நிறுத்தப்பெற்றுள்ளது. அது திருக்கோயிலின் விமானத்தின் உயரத்துக்கு தகுந்த அளவு உயரமானது. அது கொடிமரம் என வழங்குவதால் மரத்தால் செய்யப்பட்டது என்பது கருத்து. அது தாலம், மூங்கில், வில்வம், கருங்காலி, பலாசு, தேவதாரு, ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றால் அமையும். அதன் உயரத்தில் ஐந்தில் ஒரு பாகம் நிலத்தினுள் புதைக்கப்பெறுவது வழக்கம். கொடிமரத்தினைச் சுற்றிவரப் பொன், வெள்ளி, தாமிரம் முதலிய உலோகமொன்றால் தகடு செய்தல் மூடுதல் வழக்கம்.

கொடிமரத்தின் தத்துவம் பெரிது. அதிலுள்ள முப்பத்து மூன்று கணுக்கள் நமது சரீரத்தின் முள்ளந் தண்டின் முப்பத்து மூன்று என்புக் கோவைகளைக் குறிப்பன. கொடிமரம் மூன்று பெரும் பிரிவுகளையுடையது. அவை பிரம்மபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என்பனவாம். கீழேயுள்ள பிரம்மபாகம் சதுரவடிவாகவும், நடுவிலுள்ள விஷ்ணுபாகம் எண்கோண வடிவாகவும் மேலேயுள்ள உருத்திரபாகம் நீளமாய் விருத்தமாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமரத்தில் உருத்திரர், சக்தி, திக்குப்பாலகர் அர்ச்சிக்கப் பெறுவர்.

கொடிமரமானது யோகியொருவர் தமது மூர்ச்சை நடு நாடியாகிய சுழுமுனையால் அசைவற்று நிறுத்திக்கொண்டு தியானம் செய்யும் போது மனம் முதலிய கரணங்கள் யாவும் ஒய்ந்துநிற்க உலகம் தோன்றாது, சிவதர்சனம் உண்டாகும், என்னும் உண்மையை உணர்த்துகிறது. கொடிமரத்தை இருதயத்தானம் என வழங்குவர்.

வாயுநிற்ப மனநின்று மனந்தாநிற்பப் பொறிநின்று
பாய பொறி கணிற்ப விடர்படுபுன் புலன்கணின்றனவால்
ஆய புலன் கணின்றனவால் அகிலந் தோன்றாதுள்ளத்தே
தூய பரமானந்த பரஞ்சோதி தோன்றக் கண்டிருந்தார்.

திருக்கோயில்களில் கொடிமரம் பலிபீடம் நந்தி என்னும் மூன்றும் முறையே மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம் ஆகிய ஆதாரங் களின் இருப்பிடங்களைக் குறிப்பனவாகும். கொடிமரத்திலிருந்து உள்ளே கர்ப்பக்கிரகம் வரையுள்ள இடப்பரப்பு புனிதத்துள் புனித மானதாகும். அந்த இடத்திலே நாம் கண்டபடி உலாவுதலாகாது, குறுக்கே போகலாகாது, இறைவனை வீழ்ந்து வணங்குதலாகாது.

கொடி மதிப்புக்குரியதோர் அங்கம். அது தசாங்கம் என்னும்பத்து அங்கங்களில் முதலாவதாகும். ''கொடி பாடித் தேர் பாடிக் கொய்தண் டார் மாறன் முடிபாடி முத்தாரம்பாடி'' என வரும் பாடலில் அரச ருக் குரிய - இறைவனுக்குரிய தசாங்கங்கள் குறிக்கப்படுகின்றன.

திருக்கோயிலில் கொடியேற்றம் பெருந் தத்துவத்தைக் குறிப்பது. அது ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றுபடும் தத்துவத்தைக் குறிப்பது. அது பிரம்மோற்சவம் எனப்படும் பெருந்திருவிழாவை ஆரம்பித்து வைப்பது. அது பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான படைப்புக் கிரமத்தை குறிப்பது. பிரம்மோற்சவத்தைத் தொடர்ந்து நடைபெறும் விழாக்கள் ஏனைய கிருத்தியங்களைக் குறிப்பன.

எங்கும் வியாபித்துள்ள இறைவன் தயிரின் வெண்ணெய் போல ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார். அவரை உற்சவ காலங்களில் கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்திலும், உற்சவ மூர்த்திகளிலும், கும்பத்திலும் எழுந்தருளச் செய் வதற்கு யாகங்கள், பூசைகள் செய்வர், இம் மூவிடங்களையும் ஸ்தம் பம், விம்பம், கும்பம் எனக் கூறுவர். எனவே கொடி மரப்பூசை, வசந்த மண்டபப்பூசை, யாகசாலைப்பூசை மிக முக்கியமாக அமைகின்றன.

கொடிமரம் சிவன் என ஓங்கி நிமிர்ந்து நிற்கிறது. கொடியேற்றும் போது உபயோகமாகும் சீலை ஆன்மாவைக் குறிக்கிறது. அதனை சேர்ந்துள்ள தர்ப்பக் கயிறு பாசத்தைக் குறிக்கின்றது. ஆன்மா பாசத் தினின்றும் நீங்கிச் சிவத்தைச் சார்வதைக் குறிப்பதே கொடியேற்ற மாக அமைகின்றது. மகோற்சவ காலங்களில் கொடிமரம் சிவமாக நிற்பதால் அதற்குப் பகலிலும் இரவிலும் விசேடமாகப் பூசைகள் செய்கின்றார்கள். அந்தப் பூசையைப் பார்ப்பதால் நாம் நம்மை வெகு வாகச் சுத்திகரித்துக் கொள்கிறோம், பெரும் பயனடைகிறோம்.

சிவாலயங்களில் கொடிச் சீலையில் வரையப்படும் எருது தரும தேவதையைக் குறிப்பதாகும். நமக்குரிய புருடார்த்தங்களுள் முதலில் வருவது தர்மம், அதை அறம் என்றும் வழங்குகின்றோம். எதுவும் அறவழியிலேயே நடத்தல் வேண்டும். அறத்தை நாம் காத்தால் அறம் நம்மைக் காப்பதோடு நம்மைத் தாங்கிக் கொள்ளும். தர்மம் ஓங்கு தல் வேண்டும் என்னும் கருத்தில் தர்ம தேவதையை வரைந்து உயர்த்தி நம்மையும் நாட்டையும் உயர்த்திக் கொள்ள வேண்டும் எனக் கொடி யேற்றம் குறிக்கின்றது என்றும் கூறுவர். திருக்கோயிலில் கொடியேற் றித் திருவிழாச் செய்யும் காலத்தில் தேவர்கள் முனிவர்கள் ஆகாச வாசிகள் முதலாக வுள்ள பல கணத்தவரும் திருக்கோயிலின் அண்மை யில் வந்து நமக்குப் புலப்படாமல் இருந்து இறைவனை வணங்கி எமக்கு வாழ் வளித்திருப்பர். ஆரார் வந்தார் எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தில் இறைவனைச் சேவித்துச் சூழ்ந்து நிற்கும் புவனவாசிகளை ஓரளவு அறியலாம். அவரை சூழவருமாறு குருக்கள் ஐயா கட்டியங் கூறும் போது வரவழைத்தலை நாம் அறி வோம். அவர்கள் திருக்கோயிலில் சூழ்ந்திருப்பதாலேயே உற்சவ காலத் தில் நாம் நம் வீடுகளில் திருமணம் முதலிய கிரியைகள் செய்வ தில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாக்கரம் முதலாகிய மந்திரங்களை உச்சரித்து அதனை பிறகு அந்த மந்திரத்தினுடைய அட்சர சொரூபத்தை அறிந்து சக்தி சிவான் மகமாயிருக்கிற அச்சரத்தை இருதயத்திலே வைத்தால் அந்தச் சக்தி தானே சிவனை இரண்டறக் கலப்பிப்பள் என்று பஞ்சாக்கரத்தினாலே மோட்சத்தை அடையும் படிக்குக் கொடி கட்டினேன், இவ்வாறு தில்லை வாழந்தணரும், சந்தான குரவரும், சித்தாந்த சாத்திரங்களில் எட்டு நூல்களை - அட்டகம் செய்த பெரியாருமான உமாபதி சிவாசாரிய சுவாமிகள் தமது கொடிக்கவி என்னும் சித்தாந்த சாஸ்திரத்தில் கூறுகின்றார்.

''அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெரு வெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி''. என்று பாடுகிறார்.

எனவே கொடியேற்றத் திருவிழாச் செய்வதால் நாட்டில் வறுமை பிணி, துன்பம், தீவினை, அஞ்ஞானம் முதலியன நீங்கி நல்வினை, ஞானம், கீர்த்தி, செல்வம், ஆயுள், ஆரோக்கியம் முதலாய ஐசுவரியங்கள் கிடைக்கும் என்று கூறலாம்.

சர்வே ஜநா: சுகினோ பவந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணேசாய நம:

ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தயே நம:

# ஓமெனும் மஹா மந்திரம்

## ஸ்சுருதி

உத்தர கோவை, சிவாச்சார்ய இளஞ்சுடர்

**சிவஸ்ரீ மு. ப. பரம பாலசுப்ரமணியக் குருக்கள்**

ஸர்வ விக்ந ஹரீமந்திர: ப்ரணவ: ஸர்வ தோஷஹா

**யோகதத்வோபநிஷத்**

ஓம் என்பது அகார-உகார-மகார என்ற மூன்று அக்ஷரங்கள் சேர்ந்துள்ளது. இவைகளை மாத்திரைகள் என்றும் சொல்வதுண்டு. இவைகளைத்தவிர நான்காவது மாத்திரை அல்லது அர்த்த மாத்திரை அல்லது அமாத்திரை என்று ஒரு மாத்திரையும் அதில் அந்தர் கதமாயிருக்கின்றது. இவைகளின் அர்த்தம் தெரிந்து கொள்ளாவிட்டால் பிரம்மஞானம் வராது. ஆகையால் அதை பின் குறிப்பிட்டதைப் பார்க்கவும்.

ஸ்சுருதி — ய ஓம் கார: ஸ ப்ரணவ: யவ: ப்ரணவ: ஸ ஸர்வஸ்வ்யா பீ ஸ ஓக : அதர்வசிர உபநிஷத்

ஓம் என்பது மஹாபுனிதமான அக்ஷரம். அதாவது அழியாப் பொருள் என்றால் பரப்ரஹ்மம். இதற்கு எப்படி ஓம் என்று பெயர் வந்ததென்றால்? ஸ்சுருதி - யஸ்மாதுச்சார்ய மாண ஓவ ப்ராணான் ஊர்த்வம் உத்க்ராமதி என்னும் அதர்வசிர உபநிஷத் வாக்கிய ரீதியாய் ஓம் என்று சொன்னமாத்திரத்தில் சொல்பவனை மேல் பதவிக்கு ( ப்ரஹ்மத்தினிடம் ) கொண்டு போகிறதோ அந்தக்காரணத்தினால் ஓம் என்று சொல்லப்படுகிறது.

ஓம் என்பது பரப்பிரம்மத்தின் பெயர்.

ஸ்சுருதி - ஓமித்யே காக்ஷரம் ப்ரம்ம த்யேயம் ஸர்வ முமுக்ஷுபி:

த்தியான பிந்துபநிஷத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் பிரணவத்தை முதலில் வைத்துத் தொடங்குகின்றது. இதன் வடிவமே விநாயகக் கடவுள். வேதத்தின் முதலெழுத்து விநாயகரின் சொரூபமாதலை அவரது துதிக்கை உணர்த்தும். பிரணவத்தின் வரிவடிவை அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஆமை ஐந்துறுப்புக்களையும் தன்னகத்தடக்குவது போல ப்ரணவமும் நாதம், விந்து, அகரம், உகரம், மகரமாகிய ஐந்துறுப்புக்களையும் தன்னகத்தடக்கியுள்ளது. அவற்றுள் நாதம் தண்டவடிவம், விந்து வட்டவடிவம், இவ்விரு உறுப்புக்களும் சேர்ந்த வடிவம் பிள்ளையார் சுழியென்றும் மூலமனு என்றும் ஊமை எழுத்து என்றும் மௌனாக்ஷரமென்றும் சொல்லப்படும், உ என்னுமெழுத்து நாத விந்துக்களின் வரிவடிவமாகும். இது அவருடைய துதிக்கை போலாம், துதிக்கை நாத விந்து வடிவம், ஏனைய எழுத்துக்கள் கஜானனனுடைய முகத்திலடங்கும். இக் காரணம் பற்றியே எடுத்துக்கொண்ட கருமம் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டுக் கணபதியை

'ஓமென்று மறை பயில்வார் பிரமபுரத்துறைகின்ற' என்று திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய பிரமபுரத் தேவாரப் பதிகத்தில் காணப்படுகின்றது. அவை

தாம் என்று மனந்தளராத் தகுதியராய் உலகத்துக்
காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்கும் கருணையிலான்
ஓமென்று மறைபயில்வார் பிரமபுரத்துறைகின்ற
காமன்றன் உடல் எரியக் கனல்சேர்ந்த கண்ணானே

— திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

ஓமென்று பிரணவத்தை ஓதியே சகல கிரியைகளையும் ஆரம்பிக்க வேண்டுமென்பதும், முடிவிலும் பிரணவத்தைச் சொல்லவேண்டும் என்பதும், ஓம்காரோ வாதுனஸ்தாரோ மந்த்ராத்ய: ப்ரவோத்ருவ.!

— மாத்ருகா கோசம்:

சொல்லவேண்

மந்திரங்களுக்கு முன்னும், பின்னும் ஓங்காரத்தைச் சொல்லவேண்டுமென்றும், முதலில் சொல்லாவிட்டால், அம்மந்திரமானது ஒழுகிவிடுமென்றும், கடைசியில் சொல்லாவிட்டால்? அம்மந்திரம் பொங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிந்து விடுமென்றும் காளிகா புராணம் முதலியவைகளில் சொல்லப் பட்டது.

ஸ்ரவத்ய னோங்க்ருதம் பூர்வம் பரஸ்தாத்து லீசீர்யதே!

ஸ்ரவத்ய னோங்க்ருதம் பூர்வம் பரஸ்தாத்து லீசீர்யதே! சகல கார்யங்களையும் ஆரம்பிக்கும்போது தானம், யக்ஞம் முதலான ஸகல கார்யங்களையும் ஆரம்பிக்கும்போது ப்ரணவத்தைச் சொல்ல வேண்டுமென்பதாக சாட்யாயனரால் தான யக்ஞ தப ஸ்வாத்யாய ஜபத்யான சந்த்யோ பாஸன, ப்ராணாயாம, ஹோம, தைவ, பித்ய மந்த்தோச்சாரண ப்ரம்ஹா தம்பாதீனி ப்ரணவ முச்சார்ய ப்ரவர்த்தயேத்! என்று சொல்லப்பட்டது. அதேமாதிரி காத்யாயனரால் ப்ரணவத்தைப் பற்றி சொல்லுகையில்,

ப்ரம்ஹாரம்பே விராமேச யாகஹோமாதிஷு சாந்தி புஷ்டிகர்மஸு ச. அன்யேஷ்வபி காம்ய நைமித்திகாதிஷு ஸர்வேஷு வினியோ கோஸ்ய என்று சொல்லப்பட்டது.

தால்ப்ய பரிசிஷ்டத்திலும் - ப்ரம்ஹ யக்ஞோ ஜபோ ஹோமோ தேவாஷி பித்ருசர்மச; அனோம் க்ருத்ய க்ருதம் ஸர்வம் நபவேத் ஸித்தி காரகம்.

என்று ஓம்காரத்தைச் சொல்லாமல் செய்யப்பட்ட ஸகலகார்யங் களும் ஸித்தியைக் கொடுக்கமாட்டாது, என்பதாகச் சொல்லப்பட்டது. இந்தக் காரணத்தால் ஸகல மந்திரங்களும் ஓம்காரத்தில் ஸம்புடிதமாக (அடங்கி) இருப்பதாகச் ஸ்ருதியில் ஓம்காரேண ஸர்வாக்ஸம் த்ருண்ணா என்று சொல்லப்பட்டது.

மேலே சொல்லியதிலிருந்து மந்த்ரங்களைச் சொல்லுகையில் அவற் றிற்கு முன்னும், பின்னும் ப்ரணவத்தைச் சேர்த்துச் சொல்லவேண்டு மென்று ஏற்படுகிறது.!

தூமறைக்கெலா மாதியு மந்தமுஞ் சொல்லு
மோமெனப்படு மோரெழுத் துண்மையை யுணரான்
மாமலர்ப் பெருங்கடவுளு மயங்கினானென்னா
னாமினிச் சிலவறிந்தன மென்பது நகையே.

— ஸ்கந்தபுராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஸ்கந்தபுராணம் கூறுவதாலும் அறியலாகும். நிகழ்காலத்திலும் இந்நியமம் வழங்கப்பெற்று வருகிறது. ஆயின் தேவாராதி தமிழ் மறைகள் ஆரம்பிக்கும் போதும் முடிக்கும் போதும் திருச்சிற்றம்பலம் என்று உச்சரித்து வரும் மரபுண்டு. ஆரம்பத்திலும் முடிவிலும் ஓம் என்று முடிக்க வேண்டுமென்பது கருத்து:

ஸ்ருதி — ப்ராணான் ஸர்வான் பரமாத்மனி ப்ரணாமயதி இதிப்ரணவ என்றும் அதர்வசிகோபநிஷத் வாக்கியரீதியாய் ப்ராணிகளை பரமாத்மாஸ்வரூபத்தில் லயிக்கச் செய்கிற ஸாமர்த்தியமிருப்பதால் ப்ரணவம் என்றும் சொல்லப்படுகிறது.

ஓமென்னும் பதமதனில் வேதமாதி
யுற்பவிக்கு மாலவித்தி னுதிக்கு மாபோல்
ஓமெனும் பதப்பொருளை யுணர்ந்தார் தாமே
யுணர்ந்தாரும் வேதாதி யொருமை கூர.

— சிவதருமோத்தரம்

வேதமார்க்கத்தின் முக்கியமாக விளங்கிடப்பட்ட நஞ்சிவனேயே தமில் முத்தி கொடுப்பவன். சூதசங்கிதை

சிரத்தாத்ரய விபாக யோகம். கீதை

ஓம் தத்ஸ திதி நிர்தேஸோ ப்ரம்மண ஸ்த்ரிவித ஸ்மிருத:
ப்ராம்மணா ஸ்தேந வேதா:ச யக்ஞாச விஹிதா: புரா

அத் 17 - சு - 23

ஓம் தத்ஸத்இதி ஓம் தத்சத் என்று, ப்ரஹ்மண:-பிரமத்தினுடைய, த்ரிவித - மூவித, நிர்தேச:- பெயர், ஸ்ம்ருத:- கூறப்பட்டுள்ளது தேன - அதனால், ப்ராஹ்மணா பிராமணர்களும், வேதா:ச — வேதங்களும், யக்ஞா:- யாகங்களும், புரா-பண்டைக்காலத்தில், விஹிதா:- வகுக்கப்பட்டன.

ஓம் தத்ஸத் என்று பிரம்மம் மூவிதமாய் மொழியப்பட்டுள்ளது. அதனின்று வேதியர், வேதம், வேள்வி பண்டு படைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தத் ஸத் என்று மூன்று பெயர்களால் பிரம்மம் சர்வ சாதாரணமாக அழைக்கப்படுகிறது. மூன்றும் மூன்று குறிப்புப்பெயர்களாக அதற்கு அமைந்துள்ளன. அது ஓசையாகப் பரிணமிக்கிறது ஓசையினின்று உலகெலாம் உண்டாகிறது. ஆதலால் அது நாதப்பிரம்மம் எனப்படுகிறது. ஓம் என்பது அகிலாண்டத்தின் ஓசையின் தொகை, ஓசையின் தொகை ஓம்கார சொரூபமாக ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கிறது. பிரணவம் என்றும் அதைப்பகர்வது உண்டு. ஆக பிரம்மத்தை ஓம் காரவடிவினன் என்பது ஒவ்வுப்.

கற்புடைய மாது ஒருத்தி தன் கணவனை 'அவர்' என்று குறித்துச் சொல்லுகிறாள். அங்ஙனம் ஞானிகள் 'அது' என்று சொல்லும் பொழுதெல்லாம் பிரமத்தைக் குறிக்கிறார்கள். தத் என்னும் சொல் அது என்று பொருள்படுகிறது. பெரிய பொருளைப் பெயரிட்டு அழையாது வெறும் தத் என்ற பதத்தால் வேதம் அதைப் பல்கால் குறிப்பிடுகிறது.

எது சத்தியமாயுள்ளதோ அது ஸத் எனப்படுகிறது. காலத்தால் இடத்தால் செயலால் அடிபடாதிருப்பது பிரம்மம். எனவே அது ஸத் என்னும் பெயர் பெறுகிறது. ஆக ஓம் தத் சத் என்பதன் பொருள் ஓசை வடிவமாயுள்ள அந்த பிரம்மமே மெய்ப்பொருள் என்பதாம்.

பாலினின்று மோரும் வெண்ணெயும் உண்டாகின்றன வெனினும் சிறந்த பொருளாகிய வெண்ணெயே பாலினின்று வந்ததாகச் சொல்லப்படுகிறது. பிரம்மத்தினிடத்திருந்து அனைத்தும் உண்டாயினவெனினும். அவைகளுள் சிறப்பாயுள்ள அந்தணர், வேதம், வேள்வி முதலியன உண்டாயினவென்று சொல்லப்படுகின்றது. உயிர் வகைகளுள் சிறந்தவர்கள் செந்தண்மையே வடிவெடுத்துள்ளது. அந்தணர் அறிவைப் புகட்டும் நூல்களுள் சிறந்தவைகள் வேதம், செயல்களுள் புனிதமும் நல்லுணர்ச்சியும் நிறைந்தவைகள் வேள்வி, அல்லது யக்ஞம்நாதபிரம்மமாகத் தோன்றியுள்ள பிரபஞ்சத்தில் இம் மூன்றும் முக்கியமானவைகளென்று குறிப்பிடப்படுகின்றன.

இம் மந்திரங்கள் எதற்கு உதவுகின்றனவென்று இனி இயம்பப்படுகிறது.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஸ்மாதோ மித்யுதா ஹ்ருத்ய யக்ஞதாநதப: க்ரியா:
ப்ரவர்த்தந்தே விதாநோக்தா: ஸததம் ப்ரம்ம வாதிநாம்.

தஸ்மாத் - ஆகையினால், ஓம் இதி - ஓம் என்று, உதாஹ்ருத்ய உச்சரித்து, ப்ரஹ்மவாதினாம் - வேதமறிந்தவர்களில்,

விதானஉக்தா:- யக்ஞதான தபக்கிரியையாம் - சாஸ்திரம் உரைக்கும் யக்ஞதான தபக்கிரியைகள், ஸததம் - எப்பொழுதும், ப்ரவர்த்தந்தே- தொடங்கு கின்றன. ஆகையால் வேதமறிந்தவர்கள் வேத விதிப்படி செய்யும் யக்ஞ, தான, தபக் கிரியைகள் எப்பொழுதும் ஓம் என்று உச்சரித்துத் தொடங்குகின்றன.

குறைபாடில்லாத கர்மமில்லை குறைபாட்டை முகாமையாகக் கொண்டு கர்மம் செய்யாமலிருக்க முடியாது. தேகமெடுத்தவன் கர்மம் செய்யாமலிருக்க முயற்சி பண்ணுவதும் பொருந்தாது. கருமத்தில் உள்ள அக்குறைபாட்டைப் போக்குவதற்கு கருமம் ஒவ்வொன்றும் ஓம் என்று உச்சரித்துக் கொண்டு துவக்கப் படுகிறது. அதாவது இயற்கையின் நடைமுறையின் ஒழுங்குப்பாடு ஒத்ததாக ஒவ்வொரு செயலும் இருக்க வேண்டும். இயற்கையின் நடைமுறையில் ஒழுங்குபாடு இருக்கிறது. ஜீவர்களின் முன்னேற்றத்திற்கு அந்த ஒழுங்குபாடு துணைபுரிகிறது. அருள் நிறைந்த அந்தத் திட்டத்தை உணர்ந்து அதற்கேற்ற படி வினையாற்ற வேண்டும் இச் செயல் நாளடைவில் விக்னேஸ்வர பூஜையாக வடிவெடுக்கலாயிற்று. விக்னேஸ்வரனே ஓம் கார வடிவினன் செய்கிறவினை ஒவ்வொன்றிலும் உள்ள் விக்கினத்தை நீக்குதற்கும் அதை வெற்றிகரமாக முடித்தற்கும் விநாயக வணக்கம் செய்யப்படுகிறது. ஓசையெல்லாம் ஓங்காரத்தில் ஒடுங்குவது போன்று தனித்த செயல்களெல்லாம் இயற்கைத் திட்டத்திற்கு ஒத்திருக்க வேண்டும். அப்பொழுது அது குறையின்றி நிறை வேறுகிறது. ஓம் என்று உச்சரித்து ஒவ்வொரு கருமத்தையும் துவக்குவதன் உட்கருத்து இதுவேயாம். (என்றவாறு)

ஓரெழுத்தை ஒழியாது ஊனதை விட்டிருந்து பிரணவ மந்திரத்தை உச்சரித்து சிவயோக முறைப்படி பிராண வாயுவை சஞ்சரிக்கச் செய்து ஓவியம் போல் அசைவற்றிருப்பர்.

ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லந்தம் அருள்வாயே. (திருப்புகழ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட கோவை, பிரதிஷ்டா கிரியா கலாபமணி
சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் அவர்களின்

பவள விழாவின்போது

# எமது வேண்டுதல்

பெருமதிப்புக் குரிய குருக்களையா அவர்களுக்குப் பவள விழா நடப்பது அறிந்ததும் மிக மகிழ்வுற்றோம்

மதிப்பு மிக்க பவள விழா மலரை அச்சிடும் பணி எமக்குக் கிடைத்திருப்பது நாம் செய்த பெரும் பாக்கியமாகும்.

குருக்களையா அவர்கள் எமது அச்சகத்துக்கு அடிக்கடி வருகை தருவதுண்டு. அவரிடமுள்ள பல பழுதுற்ற நூல்களைத் திரும்பக் கட்டமைப்புச் செய்து செம்மைப் படுத்துவதற்காக அவற்றை எம்மிடம் தருவார்கள். அவற்றில் வடமொழி, தமிழ் இரண்டிலும் பெறுமதி மிக்க பல நூல்கள் வரும். அவற்றைக் கண்டு வியந்திருக்கிறோம். இவை போன்ற இன்னும் பல நூற்றுக்கணக்கான நூல்கள் குருக்களையாவிடம் இருக்கும். இத்தனை நூல்களையும் கற்றுணர்ந்து விளங்கும் குருக்களையாவின் பேரறிவின் திறன், இன்று சைவ சமய மக்களுக்கெல்லாம் பெரும் பயன் செய்து வருகின்றது.

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான் குருக்களையாவின் முகத்தில் தெய்வீக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அவருடைய பெருமையை எடுத்துக் கூற வேறெதுவும் வேண்டுவதில்லை; அந்தத் தெய்வீக ஒளி ஒன்றே அவர் பெருமையை, காண்பவர்க்கெல்லாம் எடுத்துரைக்கும்.

ஆயிரம் பிறை கண்ட இந்த அந்தணப் பெருமகனார், சான்றோரால் வணங்கப்படும் பெரு மதிப்புக் குரியவர்.

அவர் இருக்கும் இடத்தில் துன்பம் நீங்கும், இன்பம் பெருகும், மங்கள நிகழ்ச்சிகள் நடக்கும்.
குருக்கள் அவர்கள் தமது தகுதிக்கேற்ப, எல்லாச் சிறப்புக்களையும் பெற்று இன்றுபோல் நீண்ட காலம் நீடூழி வாழ வேண்டுமென்று ஆதி பகவானை வேண்டி அமைகின்றோம்.

226, காங்கேசன்துறைச் சாலை
யாழ்ப்பாணம் — தொலை பேசி 2820

— ஆனந்தா அச்சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிஷ்டைகளில் யந்திரஸ்தாபனம்
# சில கருத்துக்கள்

**ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மா** B.A (Hons)

விரிவுரையாளர் சம்ஸ்கிருதத்துறை பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்.

உலகின் கண்தொன்றுதொட்டு பல்வேறு வகையான வழிபாட்டு முறைகள நிலவி வந்துள்ளன. இந்து சமய மக்கள் இறைவனை உருவமாகவும், அருவமாகவும், அருஉருவாகவும் வழிபட்டு வருகின்றனர். இவ்வகையான வழிபாடுகளில் மந்திரங்கள் மூலமாகவும், யந்திரங்களில் இறைவனை ஆவாஹனம் செய்தும் வழிபடும் முறைகளும் காணப்படுகின்றன. வைதிக மரபில் மந்திரங்கள் மூலம் இறைவனைக் கூவி அழைத்து அக்னியில் அவிசொரிந்தும் ஆகமமரபில் இறைவனைத் திரு உருவங்களில் பிரதிஷ்டை செய்தும் வழிபாடு நடாத்தப்படும். தந்திர சாஸ்திர மரபில் குறிபபிட்ட பீஜ மந்திரங்கள் மூலம் யந்திரத்திலே இறைவனை ஆவாகனம் செய்து உரிய முறைப்படி வழிபாடுகள் நிகழ்த்தப்படும். இன்றைய கிரியைகளின் செயன்முறையை நோக்கும்போது இம்மூவகையான வழிபாட்டு மரபுகளும் இணைந்த நிலையில் அமைந்துள்ளதனை நாம் நோக்கலாம்.

இருக்கும் வேதத்தில் பீஜாக்ஷரங்களும் கோணங்கள், வட்டம், ஆரை, சில்லு என்பன பற்றிய குறிப்புக்கள் பாடல்களும காணப்படுகின்றன. சுக்கில யசுர் வேதத்தில் "யந்த்ரீ" "யந்த்ரயசி" போன்ற பதங்களும், அதர்வ வேதத்தில் மந்திரங்கள் மூலம் நோயைக் குணப்படுத்துதல் தாயத்துக்கள் இரக்ஷை என்பன அணிதல் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. சுல்வ சூத்திரத்தில யாகவேதி, யாககுண்டம் என்பன வற்றின் அமைப்பு கோணங்கள் பற்றிய க்ஷேத்ரகணித முறையான விபரங்கள ஆகியவை காணப்படுகின்றன. பிருகதாரண்ய உபநிடதத்திலே யந்திரங்கள் பற்றிய ஆரம்பக்கருத்துக்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. சிந்துவெளி காலத்திலும் மக்கள் தாயத்துக்கள் அணிந்திருந்தமை பற்றிய அறிய முடிகின்றது. மொகஞ்சதாரோ நாகரிகத்தில் "சுவஸ்திக" போன்ற குறியீடுகள் பயன்படுத்தி இருந்தமை பற்றி அறிய முடிகின்றது. மேலும் சிந்துவெளியில் கிடைதத யோனிக்கற்கள், மௌரியர் சுங்கர் என்பவர்களுடைய காலத்தில் கிடைத்த யோனிக் கற்கள், வட்டத்தகடுகள் போன்றவையும் சாக்த வழிபாட்டு முறையில் இடம்பெறும் சக்ர-யந்திர வழிபாடடின் தொன்மைக்குச் சான்று பகர்வதாக பனேர்ஜி என்பவர் குறிப்பிடுகின்றார். கி.பி 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த கணித கௌமுதி என்ற நூலிலும வட்டங்கள், கோணங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. 17ம் நூற்றாண்டில் கடதாசியிலும் செப்புத்தகட்டிலும் வரையப்பட்டயந்திரங்கள் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18ம், 19ம் நூற்றாண்டுகளில் ராஜஸ்தானில் விஷ்ணு, சக்தி பற்றிய பல யந்திரங்கள் வழிபாடு செய்யப்பட்டுள்ளன. 16ம் நூற்றாண்டில் கணபதி காளி போன்ற தெய்வத்திற்குரிய யந்திரங்கள் கிரந்தலிபியிலும், தமிழிலும் பீஜாக்ஷரங்கள் எழுதப்பட்டவையாக தமிழ் நாட்டில் காணப்பட்டன. இவற்றை நோக்கும் போது யந்திரங்களின் மூலம் வழிபாடு இயற்றும் முறைமையானது தந்திரசாஸ்திரங்களினடிப்படையிலான கிரியைகள், பாவனையான் முத்திரைகள் என்பவற்றுடன் கூடியதாகஒரு நீண்ட காலப் பாரம்பரியத்தை உடையதாக விளங்குவதைக் காணலாம்.

யோகினி தந்திரத்தில்

''லிங்கஸ்தாம் பூஜயேத்தேவீம் புஸ்தகஸ்தாம் ததைவச
மண்டலஸ்தாம் மகாமாயாம் யந்திரதாம் ப்ரகிமாசுச
ஜலஸ்தாம் வா சிலாஸ்தாம் வா பூஜயேத் பரமேஸ்வரீம்''

என தேவியை வழிபடும் முறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. மேலும்

''அசிந்த்யஸ்யாப்ரமேயஸ்ய நிர்க்குணஸ்ய குணாத்மனக:
உபாஸகானாம் சித்யர்த்தம் ப்ரமமணோ ரூபகல்ப்பனா''

என வழிபடுபவர்களின் நன்மையின் பொருட்டு சிந்தனைக்கும் குணங்களுக்கும் அப்பாற்பட்ட மேலான பெருமையுடையவனை! குணங்களோடு கூடிய ரூபமாக ப்ரம்மா கல்பிதம் செய்தார் எனவும்.

''அஞ்ஞாம் சாக்ஷாத்பகவத் பூஜாயாகா கர்த்தும் அசக்யத்தே
ப்ரதிமாயாமேவ கர்த்தவ்யத்வாத்ததர்த்தம் ப்ரதிமா நிர்மிதவ்யா''

என உண்மையாக பகவானுடைய ஆராதனையை ஞானமில்லாதவர்கள் உருவ வழிபாட்டிலேயே மேற்கொள்ள முடியும். வேறு வழிகளில் அவர்கள் மேற்கொள்வதற்கு சக்தியற்றவர்கள், ஆகவே உருவ வழிபாட்டுமறை செய்யப்பட்டது, எனவும் தந்திரசார சங்கிரகம் கூறுவதனை நோக்கும் போது மந்திர- தந்திர யந்திர வழிபாட்டு முறைகளுக்கு பிற்பட்டதாகவே உருவ வழிபாட்டு மரபு ஆரம்பித்திருக்கலாம் என கருதப்படுகின்றது,

யந்திரங்கள் பிம்பத்திற்கு உயிர் ஆகக் கருதப்படுகின்றது. பிரதிஷ்டை நிகழ்விற்குரிய உத்தமமான காரியங்களில் ஒன்றாக யந்திரஸ்தாபனம் என்னும் கிரியை கூறப்படுகின்றது. பிம்பமாகிய சரீரத்திற்கு மந்திரம் சிவன் போன்றது. யந்திரம் பிராணனைப் போன்றது. இங்கு யந்திரத்தில் எழுதப்படும் எழுத்துக்களே மந்திரம் எனவும் கூறப்படுகின்றது. இறைவனை மந்திரவடிவினன் ''மந்த்ர ரூபீ மஹாதேவக்'' என சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இவவிதம் எழுத்துக்களால் அடைக்கப்படும் யந்திரம் – சக்காம் என அழைக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வர்ணாத்வ நக க்ரமேணேவ சாக்ஷராணி லிகேத் க்ரமாத்
ஏவம் ஷட் விம்சதங்கம் ஸ்யாத் விம்சத்த்ரயங்கம் நதக ஸ்ருணு''

என காமிகம் யந்த்ரோத்தாரண படலத்தில் கூறப்படுகின்றது. மேலும் பிராசாத ஷட்சுலோகி என்ற நூலிலும் கடவுளுக்கு அங்கங்களாக அமைந்தனவே எழுத்துக்கள் எனவும் கூறப்படுகின்றது. எனவே யந்திரங்கள் எழுத்துக்களோடு கூடியவையாக அமைதல் வேண்டும். இத்தகைய யந்திரங்களே தெய்வசாந்தித்தியத்தை நன்கு ஏற்படுத்த வலலனவாகும். மேலும் யந்திரங்கள் மந்திரமயமானவை, மந்திரங்கள் தெய்வங்களுக்கு ஆத்மாபோன்றது ஆத்மாவிற்கும் தேகத்திற்கும் இடையேயான தன்மை போன்றதே யந்திரங்களுக்கும் தெய்வத்திற்கும் இடையேயான தன்மையாகும் என பின்வருமாறு சப்தகல்ப்பத்ருமம் கூறுகின்றது.

''யந்த்ரம் யந்த்ரமயம் ப்ரோக்தம் மந்த்ராத்மா தேவதைவஹி
தேகாத்மநோ யதா பேதோ யந்த்ர தேவயோர்ஸ்ததா''

இயந்திரங்கள் தாபன யந்திரங்கள், ரக்ஷாயந்திரங்கள் என இரு வகையாகக் கூறப்படுகின்றன புள்ளி, வட்ட, தாமரை இதழ் இவற்றோடு கூடிய யந்திரங்கள் தாபன இயந்திரங்கள் எனவும். சதுரஸ்ரவகைகளையும் கோணங்களையுடையதுமான யந்திரங்கள் ரக்ஷாயந்திரங்கள் எனவும் அழைக்கப்படும். ரக்ஷா யந்திரங்கள் கிரகபீடைகள் மற்றும் கெடடநிமித்தம், சகுனம் என்பவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அணியப்படுவனவாகும் தாபன இயந்திரங்களே பிம்பத்திற்குக் கீழேயும் தர்சனத்திற்காகவும் வைக்கப்படுவன. இவ் இயந்திரங்கள் கோவில் அமைந்துள்ள கிராமத்திலேயே நிர்மாணிக்கப்பட வேண்டுமெனவும் இவை நாலுயவப்பிரமாணமுள்ள இருபத்திநான்கு அங்குல நீளமுள்ள தங்கம் அல்லது வெள்ளி அல்லது செப்புத் தகடுகளினால் அமைக்கப்பட வேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. தங்கத்தகட்டிலே யந்திரம் அமைப்பது உத்தமம் எனவும் மற்றவை மத்திமம், அதமம் என வகைப்படும் எனவும் கூறப்படுகின்றது. மேலும் விமானம், கோபுரம் சுயம்புலிங்கம் என்பவற்றிற்கு யந்திரஸ்தாபனம் அவசியமற்றதாகும். மந்திரங்களின்றிச் சிற்பியினால் செய்யப்பட்ட யந்திரத்தை வேதிகையில் யாகாரம்பத்தன்று கும்பத்தினடியில் வைத்து மூலமந்திரத்தினால் கோடிமுறை ஜபம் செய்து அதனளவு காற்பங்கு எண்ணிக்கை ஹோமமும் இசன் காற்பங்கு தர்ப்பணமும் இதன் காற்பங்கு பிராம்மணபோஜனமும் செய்து முறைப்படி பூசித்து அஷ்டபந்தன தினத்தில் பீடத்தில் ரத்னநியாசம் என்னும் கிரியை செய்து யந்திரத்தை இதற்கு மேல் வைத்தல் வேண்டும்.

இயந்திரங்களில் வரையப்படும் கோடுகள் பாதாளரேகை, ஆகாய ரேகை என இருவகையாக உள்ளன. பாதாளரேகை உள் அமர்ந்ததாகவும் ஆகாயரேகை மேல் பிதுர்ப்பு உள்ளதாகவும் காணப்படும். யந்திரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் அங்கங்கள் சாங்கம், உபரங்கம் பிரத்யங்கம் என மூவகையாகக் கூறப்படும் புள்ளி வட்டம் என்பன சாங்கம் எனவும் வெளிவிருத்தம உபாங்கம் எனவும் பூபுரம் பிரத்யங்கள எனவும் கூறப்படும். மேலும பிந்து-சிரசு, உள்விருத்தம்-இருதயம, வெளிவிருத்தம்-நாபி, தளங்கள்-பாதம் எனவும் யந்திரத்தின் அங்கங்கள் கூறப்படுகின்றன.

''யந்ராணம்கடனா நோக்தா குப்யர்த்தம் நாக்ஞாதவசாத்
தத்ர கேதுரயம் ஞேயோ வ்யக்தாநைதே பலப்ரதாகா''

யந்திரங்கள் இரகசியமானவை பாதுகாக்கப்பட வேண்டியவை அவை களில் குற்றங்கள் இருந்தால் மாறுபாடான பலனைகொடுக்கக் கூடியவை இவற்றின் நீள அகலங்கள் சமமாக இருத்தல் வேண்டும் இவை சமமின்றி இருப்பின் வியாதியுண்டாகும். பழுதடைந்திருப்பின் கெட்ட செயல்களும் மலினமடைந்திருப்பின் கார்யசித்திகளில் குறைவும், துவாரம் ஏற்பட்டிருப்பின் துன்பமும் உண்டாகும் என கூறப்படுகின்றது.

யந்திரங்கள் அர்சனயந்திரமாக வமைக்கப்பட்டு இறைவன் திருஉருவிற்கு முன்பு வைக்கப்படும் வழக்கமும் உண்டு இவற்றிற்கு திருஉருவத்திற்கு செய்யப்படுவது போன்று அபிஷேக ஆராதனைகளும் நிகழ்த்தப்படும் யந்திரங்களுக்கு எல்லாம் மேலானது ''யந்ரராஜ'' என சிறப்பாக அழைக்கப்படுவது ஸ்ரீசக்கரமாகும் இது தேவியின் திருஉருவை ஒத்தது. அருஉருவ வழிபாட்டிற்குரிய சாதனமாக அமைவது. தனிக்கோயிலில் ஸ்ரீசக்கரம் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாடுகளும் நடாத்தப்படுகின்றது.

இத்தகைய சிறப்பான தன்மைகளைக் கொண்ட தந்திரசாஸ்திரங்களினடிப்டையிலமைந்த யந்திர வழிபாடானது எமது வழிபாட்டு மரபில் இணைந்த ஒரு சிறப்புடையதாக விளங்கி வருகின்ற தன்மையை நாம் கண்டுணரக் கூடியதாக உள்ளது.

## உசாத்துணை நூல்கள்


1. கா. கைலாஸநாதக்குருக்கள் — வடமொழி இலக்கிய வரலாறு, நர்மதா பதிப்பகம் - சென்னை 1963
2. காமிகாகமம்
3. ஸ்ரீ. கிருஷ்ணானந்தசர்மா — ஸ்ரீவித்யா சபர்யாபத்ததி - ஓர் ஆய்வு 1995 சிறப்புக்கலைமாணிப் பட்டத்திற்கான பகுதித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சம்ஸ்கிருதத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை (பிரசுரிக்கப்படாதது.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்க தத்துவம்

"கான கதாவாரிதி" "மூத்தமிழருவி"
பிரம்மஸ்ரீ - சிவ. வை. நித்தியானந்தசர்மா.

''யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனார் தாம் வருவர்'' – சிவஞான சித்தியார்.

''உள்குவர் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்'' என்றும், சிவனைப் பாடினார் அப்பரடிகள். இந்துமதத்தில் சண்மதக் கோட்பாட்டின் விரிவும் விளக்கமும் பேசப்படுகிறது. சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம், என்பன தத்தம் கோட்பாட்டிற்கமைய மூர்த்திபேதங்களை வகுத்து வரையறை செய்து மக்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தியுள்ளன. எந்த மூர்த்தியை வழிபட்டாலும் அத்தெய்வமாக வெளிப்பட்டு நின்று அருள் புரிபவன் சிவன் என்று கூறுகின்றது சிவஞானசித்தியார்.

ஆலயங்களில் கோபுரவாசலில் காட்சியளிக்கின்ற வார பாலகர்களில் ஒருவர் ஆள்காட்டி விரலைக்காட்டி நிற்கிறார். இது ஆலயத்தினுள்ளே வழிபடச் செல்வோருக்கு கடவுள் ஒன்றே என்பதை அறிவுறுத்துகின்றது மற்றொரு துவார பாலகர் ஒருகையை விரித்துக்காட்டி நிற்கிறார். கடவுள் ஒன்றே ஒன்றுதான் அதைத்தவிர வேறொரு தெய்வமும் இல்லையென உணர்த்துகிறது.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதியில்லை நுஞ்சித் தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்துய் மினே" – திருமந்திரம்

மூர்த்தி பேதம் குறித்து மாறுபட்டு மலையாது நிலையான அன்பினால் சிவனைக் குறித்து வழிபட வேண்டும்.

வெப்பத்தின் நுண்மை சிவம். தட்பத்தின் நுன்மை சக்தி. சிவாலயகளில் வெந்த நீறும், தீர்த்தமும் பிரசாதமாக வழங்குகிறார்கள் சிவபிரசாதம் திருநீறு, சக்தி பிரசாதம் தீர்த்தம்.

''தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள் அறிவாரில்லை
சேயினும் நல்லன் அணியன் நல்லன்பர்க்கு
தாயினும் நல்லன் தாழ் சடையானே'' – திருமந்திரம்

தீயைக் காட்டிலும் மிகவும் வெப்பம் உள்ளவன் சிவன். இந்நிலை தனியாய் நிற்கும் கடந்த நிலை. புனலைவிடக் குளிர்ந்தவன். இந்நிலை அருளுடன் கூடி அனைத்து உயிரையும் இயக்கி அருளும் வழிநிலை அருள்நிலை (அருள்-சக்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுணர்வாலும் சிற்றுணர்வாலும் அறியப்படாத சேயனாயினும், நல்லவன் "பால் நினைந்தூட்டும் தாய்" என்கிறார் திருமூலர். "பால் நினைந்தூட்டும் தாய்" என்றார் மாணிக்கவாசகர். வெப்ப தட்பச் சமநிலை போல (அதீ தவியாபக நிலை) சக்தியின் அருள் நிலையும், சிவத்தின் கடந்த நிலையும், ஒன்று சேர்ந்திருப்பது சிவலிங்கம்.

சிவன் கோயில்களில் மூலஸ்தானம் எனப்படும் முக்கியமான இடத்திலுள்ளது சிவலிங்கம். சிவலிங்க வழிபாடு மிகப் பழமையானது. சிந்துவெளி நாகரிகத்தில் சிவலிங்கங்களும் காணப்பட்டமையால் அக்காலத்திற்கு முன்னிருந்தே சிவலிங்க வழிபாடு நடைபெற்று வந்துள்ளது தெரியவருகிறது.

மனிதன் காரணகாரிய முறையில் அறியமுடியாத இயற்கையின் மகாசக்தியைக் கண்டு அஞ்சி அதனைக் கடவுளாக வழிபடத் தொடங்கினான். சூரியன், சந்திரன், மின்னல், இடி, புயல், மழை முதலியவற்றில் கடவுளின் ஆற்றலை அனுபவத்தில் கண்டான். ஆதி மனிதனுடைய இந்த வழிபாட்டிலிருந்து சிவலிங்க வழிபாடு ஆரம்பித்திருக்கலாம்.

திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் என்னும் நூலில் அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், சிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம் முதலியவைகளின் விபரத்தைக் காணலாம். அளக்கலாகாத அனந்தசொரூபமாக பாதாளம் முதல் ஆகாசம் வரை பரந்து, விரிந்து நிறைந்திருப்பது அண்டலிங்கம் எனத் திருமூலர் விளக்கம் தருகிறார். சிவம் சக்தி, நாதம், விந்து முதலிய அருவத் திருமேனிகளையும், சதாசிவன், மகேஸ்வரன் உருத்திரன் முதலிய உருவத் திருமேனிகளையும் உடையது அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம்.

சிவலிங்கத் திருமேனியில் எல்லாத் தத்துவங்களும் அடங்கியிருப்பதை சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், என்னும் ஐந்து மூர்த்தங்களும் சிவலிங்கத்தில் அடங்கியிருப்பதால், சிவலிங்கத்தைப் பஞ்சப்பிரம்ம மூர்த்தம் என் ஆகமம் கூறுகின்றது. ஈசானம் வடகிழக்கை நோக்கியுள்ள உச்சிமுகம். தற்புருஷம் கிழக்கை நோக்கியுள்ள முகம். அகோரம் தென்முகமாகவுள்ளது. வாமதேவம் வடக்கு நோக்கியுள்ளது. சத்யோஜாதம் மேற்கு நோக்கியுள்ளது. இவ்வாறு பஞ்ச முகங்களையுடையது சதாசிவலிங்கம் என்று திருமந்திரம் கூறுகிறது. இவைகளையெல்லாம் தொகுத்து, "காணாத அருவினுக்கும் உருவினுக்கும், காரணமாய் நீர் நாகமணிந்தார்க்குதிகழ் குறியாம் சிவலிங்கம்" என்று சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறுகின்றார்.

அருவுருவத் திருமேனியாகி சிவலிங்கத்தில் அடங்கியுள்ள சிவதத்துவங்கள் யாவும், உருவத்திருமேனிகளாக சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பெற்று வழிபடப்படுகின்றன. அவை சோமாஸ்கந்தர், தெட்சணாமூர்த்தி, நடராஜர், பிட்சாடனர், சந்திரசேகரர் முதலிய உருவத் திருமேனிகளாகும். இவர்களை வழிபடுவதும், சிவ வழிபாடே. அன்றியும் ஆலயங்களில் அம்பிகை, விநாயகர், முருகன், திருமால் முதலிய உருவத்திருமேனிகளும் பிரதிஷ்டை செய்யப் பெற்று வழிபடப்படுகின்றன. இவர்களை வழிபடுவதும் சிவ வழிபாடே. "ஆதலின் நமது சக்தி ஆறுமுகன் அவனும் யாமும் பேதகமன்று; நம் போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்" என்ற கந்தபுராணக் கூற்று சிவம் வேறு, முருகன் வேறு அல்ல என்பதை உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் நிறைந்து எல்லாமாயிருப்பது சிவம் ''பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம் சிவம்'' அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாகி அருளோடு நிறைந்தது சிவம். வானாகி, மண்ணாகி, வளியாகி ஒளியாகி, ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் கோனாகி யான் எனது என்று அவரைக் கூத்தாட்டுவானாகி ''நிற்பது சிவம் சிவபெருமானென்று நான் அழைத்தேத்த தவபெருமானென்று தான் வந்து நிற்பது சிவம்'' தன்வயத்தனாதல், தூய உடம்பினாதல், முற்று முணர்தல் இயல்பாகவே பாசங்களில் நீங்குதல் முதலிய எண்குணங்களை உடையது சிவம். பிரபஞ்சம் முழுவதும் உள்ளும் வெளியும் நிறைந்த சைதன்ய சத்தியே சிவம்.

ஆலயங்களில் எழுந்தருளியுள்ள திருவுருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும் சிவனருள் பெற்றுய்ந்த சான்றோர்களாலும் பிரதிஷ்டை செய்யப்பெற்ற காரணத்தால் சாந்நித்தியமடைந்து சைதன்ய சக்தியை எங்கும் எப்பொழுதும் பிரபையாக வீசிக்கொண்டிருக்கின்றன. அந்த சிவசக்தியானது வழிபடுவோருடைய வல்வினைகளை அகற்றி, வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்து கொண்டிருக்கிறது. அந்தத் திருவருட்சக்தி விறகில் தீயும், பாலில் நெய்யும், கரந்திருப்பது போல், சிவத்திருவுருவத்தில் மறைந்திருப்பதாக அப்பரடிகள் கூறுகின்றார்.

''விறகில் தீயினன் பாலில் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்''

கட்டையில் கட்டையை வைத்து கடைந்தால் கனல் பிறக்கின்றது! கட்டையே கனலாக மாடுவிடுகிறது பாலைக் காய்ச்சித் தயிராக்கி அதில் மத்திட்டுக் கடைந்தால் நெய்பிறக்கின்றது.

உடம்பிலே உயிரும், உயிரிலே இறைவனும் தங்கியிருக்கின்றது. உடம்புக்கும் உயிருக்கும் உள்ள உறவையும், உயிருக்கும், இறைவனுக்கும் உள்ள உறவையும், உற்று உணர்ந்து உருகி ஊறி உள்கசிவாகிய உறவு கோல் நட்டு உணர்வாகிய கயிற்றால் கடைந்தால் திருவருள் சக்தியாகிய சைதன்யப் பேரானந்தத்தை அனுபவித்து உய்தியடையலாம்.

அன்புடன் ஆசார பூசை செய்து உயர்ந்திட வாணாள் வீணாள் படாது. என்கிறார் அருணகிரிநாதர். சிவ வழிபாடு செய்யாத சீவர்களுக்காக அப்பர் சுவாமிகள் கழிவிரக்கப் படுகிறார்

''நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரைதேடி ஆலமந்து
காக்கைக்கே இரையாகிக்கழிவரே''

பசுவின் உடப்பு முழுவதும் பால் பரவியிருப்பினும் மடியின் மூலமாக அதைப் பெறுதல் போல, எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருவருளை திருக்கோயில்களிலுள்ள சிவத் திருமேனிகளை வழிபட்டுப் பெறுதல் வேண்டும். புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு ''என்பது திருமந்திரம் பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பவன் சிவபெருமான். ஆதலால் நெக்கு நெக்குருகிப் பூவும், நீரும் கொண்டு சிவனை வழிபாடு செய்து பிறவிப்பயனை அடைவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தர கோவை

சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக்குருக்கள் அவர்களின்

பவள விழாச் சிறப்பு மலருக்கு

"கிரியாகலாப முக்தாமணி"

சிவஸ்ரீ. ஐ. மகேஸ்வரக்குருக்கள் அவர்கள்

ஆதீனகுரு - நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
பிரதமகுரு - சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
பரம்பரைக்குரு - புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசாமி கோவில்
தலைவர் இலங்கை இந்துக குருமார் ஒன்றியம்

வழங்கிய வழி வழி வந்த

# அறிமுகச் சிறப்புரை

நகுரோதிகம் தத்வம் நகுரோரதிகம் தப:
நகுரோரதிகம் ஜ்ஞானம் தஸ்மை ஸ்ரீ குரவே நம:
(குருகீதை 1:65)

எமது சமய மரபிலே இறைவன், தாய் தந்தையர் ஆகியோர்களுக்கு அடுத்த நிலையிலே போஷிக்கப் படுகின்றவர் "குரு" என்று சொல்லப் படுகின்ற ஆச்சார்யன். சமயாசார வைபவங்களிலே இறை வழிபாடுகள் முடிந்தவுடன் குருவழிபாடு இடம் பெற்று, அவருக்குரிய உபசாரங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதை நோக்கலாம். காரணம் குரு கடாக்ஷமில்லாமல் ஆத்மஞானம் உண்டாக மாட்டாது. ஆத்மஞானம் இல்லாமல் முக்தி லயிக்காது. குருவினால் சொல்லப் பட்ட வேதாந்த வாக்கியங்களின் நம்பிக்கை "சிரத்தை" எனப்படும்.

ஈழவள நாட்டிலே எமது சைவ சமய மரபிலே "சிவாச்சார்ய" பாரம் பரியம் முக்கிய இடத்தினைப் பெற்று சிறந்து வருகின்றது. இறைவன் மேலும், சமயத்தின் மேலும், சிவாச்சாரியரின் மேலும், ஆதீத நம்பிக்கை மக்கள் மத்தியிலே தொன்று தொட்டு நிலவி வருகின்றது. இவையனைத்தையும் ஏற்று, சிவாச்சாரியப் பாரம் பரியத்திலே ஊறித் திளைத்து வழிவழி வந்த சிவாச்சாரியர்களும் சிறந்து விளங்கி வருவதை தெளிவாக அறியலாம். இந்த வரிசையிலே வருகின்ற ஒரு சிவாச்சாரியப் பெருமகனார் தான், எம் அனைவரினதும் மதிப்புக்கும் வணக்கத்துக்குமுரிய சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக் குருக்கள் அவர்கள்.

எம்மத்தியில் மூத்த சிவாச்சாரியார்கள் வரிசையில் சிவஸ்ரீ. வை. மு பரமசாமிக் குருக்கள் அவர்களும் ஒருவர். மிகுந்த அனுபவமும், ஆற்றலும் நிரம்பப் பெற்றவர். சுமார் ஐந்து தசாப்தங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் மேலாக சிவாச்சார்யப் பணியை மேற்கொண்டு வருகின்றவர். கண்டிப்பான ஆசாரமும், தூய்மையும் கொண்டவர். நியமம் தவறாது சிவபூசை வழிபாடுகள், அனுஷ்டானங்கள் செய்பவர் எல்லோராலும் ''கோப்பாய் குருக்கள்'' எனவும் ''கோப்பாய் மாமா'' எனவும் அன்புடன் அழைக்கப்பட்டு வருகின்றவர்.

சிவஸ்ரீ குருக்கள் அவர்களை எமக்கு நன்கு தெரியும். சுமார் நாற்பது ஆண்டுகளாக என்னுடன் தொடர்பு கொண்டு பழகி வந்திருக்கின்றார். காரணம் அவரும், அவருடைய முதாதையர்களும் யாழ்ப்பாணப் பிரதேசம் மட்டுமன்றி, தீவுப் பகுதிகளிலும் சிவாசார்ய பணியை நன்கு மேற்கொண்டு வந்திருக்கின்றனர். குறிப்பாக தீவுப்பகுதிகளிலே நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களிலே அவருடன் சேர்ந்து ஆலயக் கைங்கரியங்களை மேற்கொள்ளும் வாய்ப்பும், சந்தர்ப்பமும் அவ்வப்போது கிடைக்கப் பெற்றன. அத்துடன் இவரின் முதாதையர்கள் இங்கு கட்டாயம் நினைக்கப்பட வேண்டியவர்கள்.

யாழ்ப்பாணம் – கோப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட சிவஸ்ரீ வைரவநாதக் குருக்கள் அந்தணகுல சிவாச்சார்ய பரம்பரையில் தோன்றி வேதம், ஆகமம், சாஸ்திரம், புராணம், சகல கலைகள், ஆசாரம், ஒழுக்கம், பக்தி, அன்பு என்பனவற்றில் நன்கு தேறி இவற்றுக்கு அணிகலமாக விளங்கியவர். யாழ்ப்பாணத்திலும், தீவுப்பகுதிகளிலும் உள்ள பல ஆலயங்களில் சிவாச்சார்யப் பணியைச் செய்து சைவமக்களின் விவாகம், சாந்தி, கிரகப் பிரவேசம் முதலான கிரியைகளையும் பக்தி சிரத்தையுடன் செய்து சைவ மக்களின் மனத்தில் பெரு மதிப்புடன் வாழ்ந்தவர். இவர் மகனார் முத்துக் குருக்களும் தந்தை வழியைப் பின்பற்றி நின்றார். முத்துக் குருக்களுக்கு நாற்குரவர்களாக நான்கு மகன் மார்களும் சிவாச்சார்யர்களாக விளங்கி வந்தனர், வருகின்றனர். அவர்கள் தான் சிவஸ்ரீ. மு. வைரவநாதக் குருக்கள், சிவஸ்ரீ. மு. குமாரசாமிக் குருக்கள் (சிவசாமிக் குருக்கள்) சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள், சிவஸ்ரீ மு. கார்த்திகேயக் குருக்கள் ஆகிய நான்கு பேரும் ஆவர். முன்னைய இருவரும் கார்த்திகேயக் குருக்களும் இறைபதம் அடைந்து விட்டனர்.

மேற்படி மூன்று சிவாச்சார்யார்களான சிவஸ்ரீ. மு. வைரவநாதக் குருக்கள், சிவஸ்ரீ. மு. குமாரசாமிக் குருக்கள், சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் ஆகியோர் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவிலில் சிவாச்சார்யப்பணி செய்கின்ற போது, அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இவர்களின் குருத்துவப் பணியும் குறிப்பிடத்தகுந்தன. குறிப்பாக முத்தசகோதரர் சிவஸ்ரீ. மு வைரவநாதக் குருக்கள் சிறந்த சிவாச்சாரியாராக விளங்கி சகல சிவாகமக் கிரியாபானுவாகவும், தன்னை மறந்து இறைவன் மேல் லயித்து கிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைகளைச் செய்து மக்களை இறைவன் பால் ஈடுபடுத்துகின்ற தன்மையும் வாய்ந்தவராகவும் விளங்கினர். இளைய சகோதரர் சிவஸ்ரீ. மு. குமாரசாமிக் குருக்களும் சிவசாமிக் குருக்களும்। சிறந்த சிவாச்சார்ய லக்ஷணம் பெற்று, கிரியைகளை மிகவும் ஒழுங்காகவும், அழகாகவும் செய்கின்ற வல்லமை பொருந்தியவர். இவரும் எமது குருநாதர் நயினை பிரதிஷ்டா பூஷணம் ஐ. கைலாச நாதக் குருக்களும் இணைந்து ஈழத்தில் யாழ்ப்பாணம் – சித்தங்கேணிப் பிள்ளையார் கோவிலில் உத்தமோத்தமமான மிக உயர்ந்த கும்பாபிஷேகத்தை செய்து நன்மதிப்பும் பெற்ற சிவாச்சாரியர்கள். தாய் நாட்டில் சேய நாட்டின் சிறப்பை புலப்படுத்தியவர்கள்.

எமது சிவஸ்ரீ. மு. பரமசாமிக்குருக்கள் அவர்களும் மிகவும் பக்தி சிரத்தையுடன் கிரியை முறைகளை விளக்கங்களுடன் செய்து கிரியா காலங்களில் பசி நோக்காது, கண் துஞ்சாது கருமமே கண்ணாய் இருப்பவர் ஓய்வு நேரங்களை நல்ல வழியில் பயன்படுத்தி பல நூல்களையும், பத்ததிகளையும் தொகுத்து எழுதும் ஆற்றலும், அறிவும் பெற்றவர் இலங்கையில் புகழ் பெற்ற ஆலயங்கள் பல வற்றிலும் உற்சவம், பிரதிஷ்டை, விஷேட விழாக்கள் போன்ற கிரியைகளை நன்கு செய்து நிறைந்த அனுபவமும், ஆற்றலும் பெற்று சிரேஷ்ட சிவாச்சாரியராக இருக்கின்றார்.

அத்துடன் எமது இந்துமத குருமார் ஒன்றியத்தின் வித்துவசபையில் குருக்கள் அவர்களும் சிரேஷ்ட உறுப்பினராக விளங்கி தேவையான சந்தர்ப்பங்களில் தகுந்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் தருவதோடு, எமக்கு பூரண ஒத்துழைப்பையும் நல்கி வருகின்றார்.

தாம் அனுபவத்தால் பெற்றவற்றையும், குருமுலமாக அறிந்தவற்றையும் மற்றவர்களும் பெற்று பயன் பெற வேண்டுமென்ற பெரு நோக்கில் பல நூல்களை அவ்வப்போது எழுதி வெளியிட்டு வரும் குருக்களின சிவத் தொண்டினையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இவர் எழுதி வெளியிட்ட ''சிவார்ச்சனா சந்திரிகா தீபிகை'' என்னும் நூலும், "அம்பிகை வழிபாடு'' எனும் நூலும் குறிப்பிடத் தகுந்தன. குருக்கள் அவர்களின் இத்தகைய கைங்கரியம் அனைவரது பாராட்டுதலுக்கும் உரியது

பவள விழாக் காணுகின்ற குருக்கள் தம்பதியர், சதாபிஷேகச் சிறப்பையும் பூரணமாகப் பெற வேண்டுமென இறைவியை வேண்டுவதோடு குருக்கள் தம்பதியரும் அவர் தம் பிள்ளைகளும் சுற்றத்தவர்களும் நீண்ட ஆயுளும், நோயற்ற வாழ்வும், நிறைந்த செல்வத்தையும் நல்க வேண்டுமென எல்லாம் வல்ல குல நாயகி அம்பிகையின் திருப்பாதங்களை நமஸ்கரித்து அமைகின்றேன்.

''ஸர்வே ஜநா: சுகிநோ பவந்து''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வள்ளலார் கண்ட அன்புநெறி

(சிவஸ்ரீ மு. பரமசாமிக்குரு குருநாதசர்மா)
உத்தரகோவை

உலகத்தில் பல நெறிகள் உண்டு. ஒவ்வொரு நெறியும் ஒவ்வொரு துறையில் சிறப்புடன் நிகழ்கின்றது. எல்லா நெறிகளிலும் விளங்குகின்ற சிறப்பு இயல்புகளை தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது 'வள்ளலார் கண்ட சமரசப் பெருநெறி. சமரச சன்மார்க்கம் ஒருதனி சமயமோ மதமோ அன்று. மக்கள் அனைவரும் பின்பற்றத்தக்க தூய நன்மார்க்கமாகும். அந்நன்மார்க்கத்தின் ஒரு சில சிறப்புகளை மட்டும் இங்கு ஆராய்வோம்.

## அன்பு நெறி

மனைவி, மக்கள், சுற்றத்தார் நண்பர் ஆகியோர் மாட்டு இயல்பாக உள்ளத்தில் எழுகின்ற பற்றே அன்பு எனப்படும். மன மலர்ச்சியின் முதல் நிலையே அன்பாகும். மக்கள் இயைந்து வாழவும் இணைந்து வாழவும் அன்பாகிய பிணைப்பு மிகவும் அவசியமாகும். (நெஞ்சில்) நெஞ்சத்தில் அன்பில்லாத மக்கள் இவ்வுலகில் இருந்தும் பயனில்லை. தண்ணீர் இல்லாத குளம் எத்துணைப் பேரியதாயினும் அது பிறர்க்குச் சிறிதேனும் பயன்படுதல் இல்லை. அது போலவே அன்பில்லாத மனிதன் மற்ற துறைகளில் எத்துணைப் பெரியவனாக இருப்பினும் அவனால் மக்கட்கு யாதொரு பயனும் இல்லை. ஈரம் மென்மையாக இருந்து இரண்டு பொருள்களை ஒட்ட எவ்வாறு துணை புரிகின்றதோ அது போல அன்பு மென்மையாக அமைந்து இரு உள்ளங்களை இணைக்கத் துணைபுரிகின்றது எனவே அன்பிற்கு ஈரம் என்றும் பெயர். அன்பில்லாதவனை நெஞ்சில் ஈரமில்லாதவன் என்கிறோம். இராமலிங்க சுவாமிகள் இறைவனை வேண்டும போது.

அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர் கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்.

என்று அன்பையே உள்ளன்புடன் வேண்டுகின்றார். என்று தமது உள்ளத்தில் விரிந்த மனப்பான்மையை உருகிப்பாடுகின்றார். பாரதியாரும் ஜாதி சடங்குகளுக்கெல்லாம் அப்பாற் பட்ட அன்புப்பெருக்கால் காக்கை குருவி எங்கள் ஜாதி என்று தமது உள்த்தின் விரிவை இசைக்கின்றார். பரந்த அன்பில் தன்னலம் நீங்கியபோது நல்ல முனைப்பில் சமரச நோக்கில் அருளன்பில் தோய்ந்து உள்ளம் விரியவேண்டும். எல்லோரும் வாழ வேண்டும் என்று நினைக்கும் உள்ளம் தான் உயர்ந்த பண்பட்ட உள்ளம். தான் மட்டும் வாழ நினைப்பது குறுகிய உள்ளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமலிங்க சுவாமிகள்

அன்பே சிவமென் றறைந்தன ரான்றோர் என்ற வாசகம் ஓதுக.

அன்பே சிவமென் றறைந்தன ரான்றோர் என்ற உபதேச மாலைக்குக் கடவுள் வணக்க அது நாம் ஓம் தத்சத் ஓம் என்ற உபதேச மாலைக்குக் கடவுள் வணக்க மாய் அமையும்படி வந்தது வசனநற்சிந்தனைப் பகுதி. நாம் அன்பேயுரு வாய் மாறுவதற்குப் பயிற்றும் சாதனையாயுள்ளது சமய சாதனைக ளெல்லாம் அடிக்கடி நினைந்து அதாவது பாவனை மேற்கொண்டு வரு வதால் அவ்வாறு எம்மை மாறி விடச்செய்வன. நாம் அன்பாய் மாறி னால் நாம் சிவமாகவே மாறிச் சகல சித்திகளும் பெறுவோம் என மேலும் வந்து நற்சிந்தனை தந்தது.

நாம் இறைவனைச் சிவனென வணங்கும் சைவ சமயிகள் சுவா மிகள் எங்களைச் சைவ சமயிகளாய் வாழ வழி காட்டி வந்தார்கள் சுவாமிகள் சிவனே சிவம் என்றேபர் உத்தம கொள்கையை எம் சித் தத்திற் பதிக்குமாறு பல நற் சிந்தனைகளில் உபதேசித்தார்கள். அது நாம் மந்திரமும் சிவனே சிவம் என்னும் மந்திரமும் கடவுள் நம்பிக் கையை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன.

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார். எல்லா உயிர்க ளிலும் கலந்து நிற்கிறார் எம்முள்ளங்களில் பல பல நம்பிக்கைகளாய்ப் பதிந்திருக்கிறார். அவர் அன்பால் அனைத்திலும் விளங்குகின்றார அவர் மனம் வாக்கு காயங்கட்கு அப்பாற்பட்டு ஆருமறியாப் பேரதிசய மாக விளங்குகிறார். இவ்வாறு திரு மூலர் திருமுறை சாற்றுகிறது. திரு மூலர் கூறிய பேருண்மையைச் சுவாமிகள் சுட்டிக்காட்டி அன்பே சிவமென்றறைந்தன ரான்றோர் என்றார்கள் போலும்.

(அறைதல் - கேட்போருள்ளத்தில் நன்கு பதியுமாறு உண்மையைக் கூறுதல்)

திரு மூலர் திருமந்திரம்

''அன்பும் சிவனும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவம் ஆவதாரும் அறிந்தாரின்
அன்பே சிவமாய் அமைந்திருந்தாரே''

சுவாமிகள் அன்பே சிவம் என்பதை விரித்துக்கூறி விளக்கி அருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## உத்தரகோவை சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள்

# வாழ்க்கை வரலாறு

அருள் நெறியாகிய சைவ நெறி, அறிவு நெறியாகிய வைதிக நெறியுடன் ஒன்றிணைந்து வைதிக சைவம் எனும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. இச் சைவநெறி வளர்ச்சியடைவதற்குரிய பணிகள் சைவப்பிரசங்கம் செய்தல், தமிழ் சமஸ்கிருதம் எனும் இரு மொழிகளிலும் உள்ள பழைய நூல்களை அழிந்து விடாமற் பாதுகாத்தல் புதிய நூல்களை வெளியிடல் எனப் பல்வகைப்பட்டன.

சிவாச்சாரிய திலகமாகிய உத்தரகோவை சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் அவர்கள் சைவப்பிரசங்கம் செய்தல், பழைய நூல்களைப் பாதுகாத்தல், புதிய நூல்களைஉருவாக்குதல் முதலிய மேலான சிவபுண்ணியச் செயல்களில் தம்மை ஈடுபடுததி வருவதோடு மட்டுமல்லாது, முப்போதும் திருமேனி தீண்டுவதன் பெருமையின் பயனையும், கிரியைகளில் தமது காலம் முழுவதையும் பயன்படுத்தி தூய வாழ்க்கை நடாத்தி வருகின்ற பெரியாராவர்.

### தாய் தந்தையர்

சிவஸ்ரீ குருக்கள் அவர்களின் தந்தையர், யாழ்ப்பாணத்து கோப்பாய் எனும் ஊரில், ஆதிசைவ அந்தண குலத்தில் ஆர்ஷேய, பாரகஸ்பத்ய பாரத்வாஜ எனும் மூன்று ரிஷிகளும் கூடியப்ரவரங்களுடன் ஆபஸ்தம்ப சூத்திரத்தினை அனுசரிப்பவராக் பாரத்வாஜ கோத்திரத்திற் பிறந்த வைரவநாதக் குருக்களின் புத்திரர் முத்துக்குருக்கள் என்பவர். இம் முத்துக்குருக்கள் தமது பாரம்பரியமாகவே நல்லூர் கந்தசுவாமி கோவில், பருத்தித்துறையிலுள்ள ஆலயங்கள், நயினாதீவு, அனலைதீவு, பொன் கொடுதீவு, வேலணை ஆகிய இடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் ஆகிய கிரியைகளை செய்து வந்து சிவானுபூதி பெற்ற சிவநெறியாளர். சிவபூஜையினைக் கிரமம் தவறாது புரிபவர். தமது குருத்துவத்தை பரம்பரையாகத் தாமும் சிரத்தையுடன் செய்து கொண்டு நல்வாழ்வு நடத்தியவர். இவரின் மனைவி பாலாம்பிகை அம்மா ஆவர்.

## ஜனனம்

இவ் விருவருக்கும் புத்திரராக சௌத்திரி வருடம் ஆனி மாதம் பதினெட்டாம் திகதி ( 18 - 06 - 1920 ) வெள்ளிக்கிழமை புனர்பூச நக்ஷத்திரத்தில் சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்களவர்கள் ஜனனமாகினர். குருக்கள் அவர்கட்கு மூத்த சகோதரர்களாக புவனேஸ்வரி, வைரவ நாதக் குருக்கள், குமாரசாமிக் குருக்கள் ஆகியோரும், இளைய சகோதரராக கார்த்திகேயக் குருக்களும் விளங்கினர்.

## கல்வி பயிலல்

வித்யாரம்பம் உபநயனம் செய்யப் பெற்ற இவர், தமது கிராமத்திலேயே கல்விபயின்று வந்தனர். பின் இவருடைய தந்தையார், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து கோப்பாய்ப் பதியில் வசித்து யாழ்ப்பாணத்திலும் வேதவித்தினை ஊன்றுவதற்கென தன்னை அர்ப்பணித்த பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவர்களிடம் கற்குமாறு இவரை ஒப்படைத்தார். இவர் தமது வீட்டிலிருந்தே கிரமம் தவறாது வேத அத்யயனம் செய்து வந்தனர். அத்தோடு அவரின் தந்தையாரின் வழிகாட்டலின் படியே, சிவாச்சார்ய சமூகத்திற்கு புத்துயிர் ஊட்டிய பெருந்தகையாகும். 'சிவாகம ஞானபானு' என பாரத தேசத்தில் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டவரும், சிவநெறிச் செல்வரும், சிவாகம விற்பனருமான அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமார சுவாமிக் குருக்களவர்களிடத்து சிவாகமப் புலமையினையும் பெற்று அவர்களிடத்து உடன் சென்றும் தமது ஐயங்களினைக் கண்டும் கேட்டும் தெளிந்தனர்.

அறிய வேண்டும் எனும் இயல்பான ஆர்வமுடைய குருக்கள் அவர்கள், ஆசிரியர்களிடம் கற்ற அளவின்மையான இரு மொழி நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் தாமே மீட்டு மீட்டுப் படித்து, புராணபடனத்திற் பயன் சொல்லல் போன்ற சிவகைங்கர்யங்களிலும் ஈடுபட்டு தமது அறிவை மேலும் விருத்தி செய்து கொண்டனர்.

## திருமணமும் புத்திரப் பேறும்

சிறந்த அறிஞராக விளங்கிய இவருக்கு ஊரெழு பாலசுந்தரக் குருக்கள் மீனாம்பிகை அம்மா ஆகியோரது மூத்த புதல்வி இராஜேஸ்வரி அம்மாளைப் பெற்றோர் திருமணஞ் செய்து வைத்தனர். இவருக்குப் பிள்ளைகள் 1. ஜெகதாம்பிகை அம்மா, 2. பாலாம்பிகை அம்மா 3. முத்துக் குமாரசாமிக் குருக்கள், 4. இராஜகோபாலசர்மா, 5. சண்முகராஜக் குருக்கள், 6. பாலசுப்பிரமணியக் குருக்கள், 7. குருநாதசர்மா ஆகியோராவர். இவருக்குப் பேரப்பிள்ளைகளுமுண்டு.

## ஆச்சாரியாபிஷேகம் பெற்றமை

குருக்களவர்கள் 1960 ம் வருடத்திலே மிக முக்கியமான சமய, விசேஷ, நிர்வாண தீட்சைகள் அடங்கிய அசத்யோ நிர்வாண தீட்சை பெற்று ஆசார்யாபிடேகம் பெற்றுக்கொண்டார். இவருடைய தீக்ஷா நாமம் ஈசான சிவாச்சாரியம்.

## பத்ததி மரபினைப் பேணுதல்

சிவாகமப் பிரமாணங்களினை எடுத்தாளும் ஆளுமையும், அறிவும் அமையப்பெற்ற குருக்களவர்கள் தமது பாரம் பரியத்தில் பேணப்பட்டு வருகின்ற பத்ததி மரபினைச் சிறிதளவேனும் பிறழவிடாதவர். சத்யோஜாத சிவாச்சாரியர் பத்ததி அகோர சிவச்சாரியர் பத்ததி, ஈசான சிவாச்சாரியர் பத்ததி எனும் தனி மரபினைப் பேணுவதில் ஆர்வம் கொண்டவராகத் திகழ்வதோடு தமது மூதாதையர் பேணிப் போற்றி வருகின்ற பத்ததிமரபினைச் சிரமேற் கொண்டு பேணிப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாது, அதே மரபினையும் பின்பற்றும் சிறப்புப் பெற்றவர். தமது பத்ததிமரபிற்கு உரைகல்லாக விளங்கும் கிரியைகளுக்குரியவைகளாக, தமக்கு ஓய்வு கிடைக்கும் முழு நேரத்தினையும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்ததிகளைப் பிரமாணங்களுடனும், சந்தேக நிவர்த்தியுடனும் பிரதி பண்ணி வளர்ந்துவரும் தனது பாரம்பரியத்தின் ஆணிவேராகத் திகழ்கின்றனர்.

## நூல்களியற்றல்

சிவஸ்ரீ குருக்களவர்கள், சிவானுபூதிமான்கள் படித்துப் பயன்பெறும் உயர்நோக்கத்துடன் வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலு முள்ள தகுந்த பிரமாணங்களைத் தொடுத்து விநாயக பரத்துவம் (1985), சிவார்ச்சனா சந்திரிகா (1989), அம்பிகை வழிபாடு (1997), எனும் நூல்களைத் தமிழில் வெளியிட்டு வைத்தார்கள்.

குருக்களவர்கள் மேலும் பல நூல்களினைத் தொகுத்தும், விரித்தும் வைத்துள்ளார்கள். அவைகளுள் சிரார்த்ததீபிகை அண்மையில் வெளியிடப்பட்டது.

குருக்களவர்களுடைய நூல்கள் யாவற்றினையும் பதிப்பித்து வெளியிட்டவர், அவருடைய பாரம்பரியத்தைப் பேணி வருகின்றவரும் சாஹித்ய சிரோமணியும், சிவாச்சாரிய திலகமும் இவருடைய குமாரருமாகிய சிவஸ்ரீ முத்துக்குமாரசாமிக் குருக்கள் ஆவர்.

குருக்களவர்கள் சிவாகமங்கள், நிபந்தக் கிரந்தங்கள், ஸ்மிருதி நூல்கள், பத்ததிகள் ஆகியனவற்றினைத் தேடிச் சென்று அவற்றில் காணப்படும் உயர்குணம், பிழைகள் என்பனவற்றை தகைமையாளரிடம் காட்டி விளக்கம் பெற்று, அதன் பின்னர் பிரதி செய்து அழியாமல் பாதுகாத்து வரும் பெரும்பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

குருக்களவர்களின் ஆக்கத்திறன்களினை வெளிக்கொணர்வதற்கு சைவ உலகம் தம்மாலான பொருளுதவிகளினைச் செய்து மேலும் ஊக்கப்படுத்தி வருகின்றது. இதற்கு இவருடைய அம்பிகை வழிபாடு எனும் நூல் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

குருக்களவர்களின் புத்திரர், சாஹித்ய சிரோமணி சிவஸ்ரீ முத்துக் குமாரசாமிக் குருக்கள் கல்வியறிவு, ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்தவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய சகோதரர்களுக்கு வழிகாட்டியாக இருந்து தந்தை செய்து வரும் பணிகள் அனைத்திற்கும் உதவியாக இருந்து வருகின்றார்.

குருக்களவர்கள் தனி நூல்களாக இயற்றியதைவிட கட்டுரைகளாகவும் தமது பரந்த அறிவினை இந்து சமுதாயம் பெறவேண்டும் எனும் நோக்கத்துடன் புராணங்கள், திருமுறைகள் என்பனவற்றில் இடம்பெறும் சிறந்த பிரமாணங்களை எடுத்துக்காட்டி விளக்கமளித்து வருகின்றார்கள்.

## அந்தண சமூகமேம்பாடு

அந்தண சமுதாயத்தில் சிவாச்சார்ய மரபினரை மேம்படுத்தி வருகின்ற நிறுவனமாகிய இந்துமத குருமார் ஒன்றியத்தின் உறுப்பினராக விளங்கும் குருக்கள் அவர்களின் தகுதியையுணர்ந்து; இவரை இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபால கிருஷ்ணஐயர் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிவரும் மேற்படி ஒன்றியத்தின் வித்வத்சபை உறுப்பினராகவும் திகழச்செய்தார்கள். இதனூடே குறிப்பாக யாழ்ப்பாணத்துக் கோயில்களில் இடம் பெறும் கட்டடம், சிற்பம் தொடர்பான சிவாகமத்திற்கு முரண்பாடான வழிகளை விலக்கி சமூகத்தினை வழிநடத்தும் சிறந்த அறிவாளராகவும் திகழ்கின்றார்கள்.

குருக்களவர்கள் எழுபதுகளில் தென்னிந்திய யாத்திரையினை மேற்கொண்டனர். அங்கு பல சிவாலயங்களையும் தேவி, விஷ்ணு முதலிய தெய்வங்களின் ஆலயங்களையும் தரிசித்து வந்தார்கள். அவர்கள் தரிசித்த சிவாலயங்களுள் கோயில் எனச் சிறப்பிக்கப்படும் சிதம்பரம் கோவிலின் பூஜை முறைகள் அவரின் கவனத்தை நன்கு கவர்ந்து கொண்டது. ஷ்டி பூஜைமுறையை தனது மரபோடு இணைத்து தனது பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்லும் செயல்களில் உயர் விருப்புடையவராகத் திகழ்கிறார்கள்.

## பெரியோர்களுடனான தொடர்பு

குருக்கள் அவர்கள் சமூகத்தின் வழிகாட்டியாகத் திகழ்கிறார்கள் இவர்கள் கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியார்களின் தொடர்புகளினால் தனது அறிவினையும், சமுதாயத்தின் தேவைகளையும் அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மாலான பணிகளை மேற் கொண்டு வருகின்றார்கள். குருக்கள வர்கள் தமது ஆசிரியர்களான பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் ஆகியோருடைய தொடர்பும் பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ சிதம்பரசாஸ்திரி கள், சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ சு. து. ஷண்முக நாதக் குருக்கள், சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள், பிரம்மஸ்ரீ ச. பஞ்சாக்ஷரசர்மா, பேராசிரியர் கலாநிதி சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ கா. இரத்தின கைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ வேதக்குட்டிக் குருக்கள், பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணியசாஸ்திரிகள். சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள், சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள், பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர், சிவஸ்ரீ பா. வைத்திய நாதக் குருக்கள் முதலான அந்தணப் பெரியார்களுடனான தொடர் பினையும், பண்டிதர் த. சுப்பிரமணியம் அறிஞர் விசாகப் பெருமாள் முதலியோர்களின் தொடர்புகளினால் மேன்மை பெற்றவராகத் திகழ் கின்றார்கள்.

## வைரவர் கோவில் ஜீர்ணோத்தாரணம்

புராதனமான ஆலயங்களைப் புதுப்பிப்பது மிகச் சிறந்த சிவபுண் ணியம். தமது பரம்பரையினரின் பரிபாலனத்திலுள்ளதும் தாமே பரிபாலனகர்த்தராகத் திகழ்ந்து பூஜைகள் ஆற்றிவரும் ஸ்ரீ வைரவ சுவாமி கோவில் அண்மையில் ஏற்பட்ட போர்க்கால சூழ்நிலையால் பூஜைகள் தடைப்பெற்றிருந்த நிலையினை அகற்றி பாலஸ்தாபனம் செய்யப் பெற்றிருந்த கோயிலில் மீண்டும் பாலஸ்தாபனம் செய்து மூலாலயத்தினை அஸ்திவாரம் முதல் மண்டப மீறாகத் தமது செல விலேயே ஜீரணோத்தாரணம் செய்து வருகின்றார்கள்.

## கிரியைகள் செய்தல்

சிவஸ்ரீ குருக்களவர்கள் கிரியைக் கர்மங்களை முற்று முணர்ந்து மந்திரம், கிரியை, பாவனை மூன்றும் ஒன்று சேர தரிசிப்போரை பரவச மடையச் செய்பவர். கோயிற் கிரியைகளோடு மட்டுமல்லாது சைவ ஸ்மார்த்தக் கிரியைகளையும் செய்து வைப்பதில் ஈடிணையற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களவர்கள் கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் எனும் கோயிற் கிரியைகளினைச் செய்வதில் பிரசித்தி பெற்றவர். சைவ உலகம் இவர்கள் கிரியை செய்து 'வைப்பதைப் பெறுதற்கரிய பேறாகக் கருதுகின்றது. இதனை நீண்ட காலமாக அனுபவிக்கும் பேறு பெற்றவர்கள் நயினாதீவு மக்கள். இதனால் பெருமை பெற்றவர்கள் கோப்பாய் ஊர்மக்கள். ஆலய பரிபாலகர்கள், ஆலய அபிமானிகள் ஆகியோரால் அழைக்கப் பெற்று இவர்களால் செய்து வைக்கப்பட்ட கும்பாபிஷேகங்கள், உற்சவங்கள் பலப்பல. கிரியையை நிகழ்த்தும் போது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒன்று சேர்த்து நேரத்தையும், உணவையும் கூட பொருட்படுத்தாது உரிய நியதிப்படி நிகழ்த்தி வைப்பார்கள். அவர்கள் பொருள் வருவாயைப் பொருட்படுத்துவதில்லை.

'கிரியையென மருவுமவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' எனும் சித்தியார் கூற்றுக்கு ஏற்ப; குருக்கள் அவர்கள் நிகழ்த்தும் கிரியைகளுக்குரிய விளக்கங்களினையும் பக்தர்களிடத்தில் ஞானம் கிடைத்தற்குரிய நிமித்த காரணத்தையும் விளக்கிக் கூறத்தவறுவதில்லை. இவை குரு எனும் நிலையால் அவரது ஞானப் பாதையினைச் சுட்டி நிற்றல் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

குருக்களவர்கள் சிற்பசாஸ்த்திரத்திலும் வல்லவராகத் திகழ்கின்றார்கள். ஆலய அமைப்பு, விக்ரஹ அமைப்பு, ஆலயப்பிரகாரங்களின் ஸ்தானங்கள், முதலான விடயங்களில் எழும் சந்தேகங்களினை நிவர்த்தி செய்து வருகின்றார்கள். இவருடன் இராமகிருஷ்ணஸ்தபதி, பாஸ்கரன் ஆச்சாரி போன்றோரும்; தேர், வாகனங்கள் முதலியவற்றைச் செய்கின்ற ஆச்சாரிகளும் தமது சந்தேகங்களினை நிவர்த்தி செய்வதற்காகத் தொடர்பு கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அருள், அறிவு, ஒழுக்கம், உதார குணம் முதலியன நிறையப் பெற்ற குருக்களவர்கள் தமிழ், சம்ஸ்கிருதம் இரண்டினையும் இரு கண்ணெனப் போற்றுபவர்கள். ஆகம மரபு அழியாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்பதனைத் தமது இலட்சியமாகக் கொண்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டங்களின் மூலம் கௌரவம் பெறல்

சிவஸ்ரீ குருக்கள் அவர்களின் இறையர்ப்பணம் மிக்க சிவத் தொண்டினைக் கௌரவிக்கும் திறத்திலே அவர்களைப் பலரும் பாராட்டி பட்டங்களை வழங்கி தாமும் கௌரவமடைந்துள்ளனர். 'பிரதிஷ்டா பூஷண சிரோமணி' எனும் பட்டத்தினை 21-04-1980ல் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானத்தின் கும்பாபிஷேக வைபவத்தை ஒட்டி வழங்கினர். 'பிரதிஷ்டா கிரியா கலாபமணி' எனும் பட்டத்தினை 1981ல் புங்குடுதீவு தல்லையப் பற்று ஸ்ரீ சங் கர மூர்த்தி முருக மூர்த்தி ஆலய கும்பாபிஷேக வைபவத்தின் பொழுது வழங்கினர். 'சிவாகம வாசஸ்பதி' எனும் பட்டத்தினை 28-08-1983ல் நயினை நாகபூசணி அம்பாள் தேவஸ்தான கும்பாபி ஷேக வைபவத்தை முன்னிட்டு வழங்கினார்கள். இவைகளினூடே குருக்கள் அவர்களின் சிறப்பையுணர்ந்து புங்குடுதீவு வாழ் மக்கள் பாணாவிடை சிவன் தேவஸ்தானத்தில் 12 - 04 - 1990ல் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் நடாத்திய பாராட்டு விழா விலே 'சிவாகம கலாநிதி' எனும் பட்டத்தினை வழங்கினர்.

இலங்கை முழுவதுமாக நாடளாவிய ரீதியில் இந்து கலாச்சார இராஜாங்க அலுவல்கள் அமைச்சு 11-06-1994ல் நடாத்திய பக்திப் பெருவிழாவில் 'வேதாகம மாமணி' எனும் பட்டத்தினை வழங்கி அரச அங்கீகாரத்தினையும் அளித்தது. இவை கிராம மக்களையும் கவர்ந்த விடயமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் 1998 04-01ல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 'வேத சிவாகமப் பிரதிஷ்டா சரஸ்வதி' எனும் பட்டம் வழங்கப்பட்டது. அண்மையில் நயினை பெருங்குளம் மீனாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெற்ற மகாகும்பாபிஷேக வைபவத்தினை ஒட்டி 'வேதாகம ஞான சிரேஷ்ட தத்துவநிதி' எனும் பட்டத்தினையும் வழங்கி கௌரவித்தது.

இவ்வாறாக குருக்கள் அவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்ட தால் அவருடைய ஊர் மக்களும் மேம்படைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமூகத்தில் சிறப்பிடம் பெறல்

தம்முடையதும் தன்னைச் சார்ந்தவர்களுமான சைவ சமூகத்தவர்களிடையே சிறப்பிடம் பெற்ற சிவஸ்ரீ குருக்கள் அவர்களினையே தமது குருவாக வரித்து தமது இல்லங்களில் நூதன கிரகப் பிரவேசம், புதிய கடைகள் திறத்தலுக்கான சாந்திகளைச் செய்தல், திருமணக் கிரியைகளை நடாத்துதல், அடிக்கல் நாட்டுதல், சிவபூசைகள் செய்வித்தல் போன்ற சிறந்த சிவப்பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டனர். அதே போன்று அந்தியேட்டிக் கிரியைகள், வீட்டுக் கிருத்தியக் கிரியைகளையும் செய்விப்பதனால் பூரண பயனையும் திருப்தியையும் அடைந்தனர்.

இவ்வாறாக சிவப்பணிகளுக்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்து வருகின்ற சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறு பல்வேறு வழிகளிலும் பரப்படைந்து செல்கின்றது. அதனைப் பாராட்டும் முகமாகவே கோப்பாய் வாழ் மக்கள் இணைந்து அவரது பவளவிழாவை எடுத்துப் பாராட்டித் தாமும் கௌரவம் பெற்றவர்களாகின்றனர்.

## உத்தர கோவை

### சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் அவர்களால் பாலஸ்தாபனம், கும்பாபிஷேகம் முதலியன

# செய்யப் பெற்ற ஆலயங்கள்

| | | | |
|---|---|---|---|
| பிள்ளையார் கோயில், | கொல்லங்கலட்டி, | நுணாவில் | 1971 |
| பிள்ளையார் கோயில், | தேரம்பிள்ளை, | புத்தூர் | 1973 |
| ,, ,, | இலுப்பையடி, | கோப்பாய் | 1973 |
| ,, ,, | கலட்டி | புங்குடுதீவு | 1973 |
| ,, ,, | கிராஞ்சியம்பதி | | 1977 |
| முருகன் ,, | | | 1980 |
| ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் | | வண்ணை யாழ் | 1980 |
| சிவன் கோயில் | பாணாவிடை | புங்குடுதீவு | 1981 |
| முருகன் ,, | ஊரதீவு | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கண்ணகை அம்மன் | கோயில் | வற்றாப்பளை முல்லைத்தீவு | 1981 |
| பிள்ளையார் | கோயில் | ஊற்றங்கரை முல்லைத்தீவு | 1981 |
| பிள்ளையார் | கோயில் | சம்பாவெளி | 1983 |
| பிள்ளையார் | கோயில் | செம்மணத்தம்புலம் நயினாதீவு | 1983 |
| நாகபூஷணி அம்மன் | கோயில் | நயினாதீவு | 1983 |
| பிள்ளையர் | கோயில் | பத்தமேனி, அச்சுவேலி | 1983 |
| அம்மன் | கோயில் | கேலம், மந்துவில் | 1988 |
| அம்மன் | கோயில் | விழுபழை | 1989 |
| வைரவர் | கோயில் | பஸ்நிலையம்,யாழ்ப்பாணம் | 1992 |
| மீனாட்சி அம்மன் | கோயில் | அச்சுவேலி | 1992 |
| முருகன் | கோயில் | இரட்டைக்காளி, நயினாதீவு | 1994 |
| அம்மன் | கோயில் | ஆவரங்கால் | 1995 |
| சிவன் | கோயில் | பருத்தித்துறை | 1996 |
| முருகன் | கோயில் | இணவல்லை, பருத்தித்துறை | 1997 |
| நாகபூஷணி அம்மன் | கோயில் | நயினாதீவு | 1998 |
| பிள்ளையார் | கோயில் | பத்தமேனி, அச்சுவேலி | 1998 |
| வைரவர் | கோயில் | கோப்பாய் வடக்கு | 1999 |
| மீனாட்சி அம்மன் | கோயில் | (மதுரை) நயினாதீவு | 1999 |
| மீனாட்சி அம்மன் | கோயில் | ஆவரங்கால் | 1999 |

உத்தரகோவை

## சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் அவர்களால் நடாத்தப்பட்டவையும், நடாத்தப்பட்டு வருபவையுமான மஹோற்சவங்கள்

1. ஸ்ரீ கந்தசுவாமி கோயில், கிராஞ்சியம்பதி புங்குடுதீவு
2. ஸ்ரீ பிள்ளையார் கோயில், கலட்டி புங்குடுதீவு
3. ஸ்ரீ சிவன் கோயில், பாணாவிடை புங்குடுதீவு
4. ஸ்ரீ கண்ணகைஅம்மன் கோயில், கோப்பாய்
5. ஸ்ரீ பிள்ளையார் கோயில், சம்பாவெளி
6. ஸ்ரீ பிள்ளையார் கோயில், கொல்லங்கலட்டி நுணாவில்
7. ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில் செம்மணத்தம்புலம்நயினாதீவு
8. ஸ்ரீ நாகபூஷணிஅம்மன் கோயில், நயினாதீவு
9. ஸ்ரீ பிள்ளையார் கோயில், பெருங்குளம் வேலணை
10. ஸ்ரீ முருகன் கோயில், நெடுந்தீவு
11. ஸ்ரீ கந்தசுவாமி கோயில், வேரற்கேணி மட்டுவில்
12. ஸ்ரீ பிள்ளையார் கோயில், பெருங்குளம் சாவகச்சேரி
13. ஸ்ரீ சிவன் கோயில், சாவகச்சேரி
14. ஸ்ரீ முருகமூர்த்தி கோயில், தள்ளையம்பற்று புங்குடுதீவு
15. ஸ்ரீ சிவன் கோயில், புலோலி, பருத்தித்துறை
16. ஸ்ரீ அம்மன் கோயில், விழுபழை எழுதுமட்டுவாள்
17. ஸ்ரீ முருகன் கோயில், கந்தவனக்கடவை, பொலிகண்டி

187281
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

நாகபூஷணி அம்மன் கோயில் விசேட குருக்களும்
வேதாகம **கிரியா** விநோதனும் ஆகிய
**பிரதிஷ்டா கிரியா கலாப மணி**
**சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள்**
பவள விழாக் காணும் போது குருக்கள் அவர்களின் கனிஷ்ட புத்திரி

**செல்வி பாலாம்பிகை அவர்களின்**
*(பிரதி அதிபர், சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி, மட்டக்களப்பு)*

# வாழ்த்துச் செய்தி

முத்துக் குளிக்கும் முதுமைப் புகழ் கடலின்
நித்திலமாம் ஈழம் நினைத்து மகிழ்வெய்தும்
கோப்பாய் வடக்கில் குலாசாரம் மேற்கொண்டு
காப்பாகி எம்மையெலாம் காப்பாற்றும் வித்தகராய்
எதிர்காலம் ஏற்றமுற எம்மையெலாம் ஆளாக்கி
சதுர்வேதம் ஓதுகின்ற தகவோரை உருவாக்கி
எதிர்யா ருமின்றி இன்றுவரை நற்பணிகள்
விதிமுறைகள் மாறாது மேன்மையுடன் ஆற்றிவரும்
முத்துக் குருக்களுக்கு முத்தாய் அவதரித்த
பரமசாமிக் குருக்கள் பண்பதனை நாடறியும்
சந்திரிகா தீபிகையும் சாமி கணேச
தத்துவமும் அம்பிகையின் வழிபாடும் ஆனபல
நூல்கள் இயற்றி நுண்ணறிவை ஊட்டிவரும்
சால்புணர்ந்து நூலறிந்து தக்கோர் சமுகமதில்
வேதாகம கிரியை விநோதன் எனும்பட்டமதை
அளித்துக் கவுரவித்தார் அறிவுச் சுடரொளியாய்
இருள் போக்கும் ஜோதியினை எல்லோர்க்கும் முன்பாக
நானறிவேன் ஏனெனிலோ நாதஇசை சங்கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன கலையில் அடியேனை ஊக்குவித்து
பட்டதாரி யாக்கிப் படிஉயர்த்தி விட்டதுடன்
என்னரிய தந்தையென இருக்கின்ற காரணத்தால்
நாகர் பழங்குடிகள் நம்நாட்டில் வாழ்ந்தகதை
கோடிட்டுக் காட்டிவரும் கோயிலென ஊர்புகழும்
நாகபூஷணி அம்மன் நல்லடிகள் பூஜைசெய்யும்
பாக்கியத்தைப் பெற்றிருக்கும் பண்பான தந்தையரே
பவளவிழாக் காணும் பருவத்தே உம்அருகில்
இல்லையென்ப தொன்றே இருக்கும் குறைஎனக்கு
கண்மணிபோல் எம்மையெலாம் காப்பாற்றும் தெய்வீக
நன்மணியே தந்தையே நான்உங்கள் பாதமலர்
என்சிரசால் தொட்டு இதயத்தால் வணங்குகிறேன்
கண் காணும் தெய்வம் கருணை அறிவெல்லாம்
மண்ணுள்ள மட்டும் மறையாது எம்மாதா
ராஜேஸ்வரி சகிதம் பிறை ஆயிரம் கண்டு
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழியவே

UNIVERSITY OF JAFFNA LIBRARY





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்களின் குடும்பத்தினரின்

# நன்றியுரை

எமது தந்தையார் பிரதிஷ்டா கிரியா கலாபமணி சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் அவர்களின் 28 . 02 . 1999 அன்று நடைபெற்ற பவள விழாவை ஒட்டி இம் மலர் வெளிவருகிறது.

இச் சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்கிய சிவஸ்ரீ சோ. சுப்பிர மணியக் குருக்கள், மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாத குருக்கள் ( மாவை ஆதீனம் ) அவர்களுக்கும், அருளுரைச் செய்தியை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகளுக்கும் வாழ்த்துரைகள் வழங்கிய எமது மதிப்புக் குரிய பண்டிதை சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களுக்கும் மற்றும் அந்தணப் பெருந்தகைகள், சிவாச்சாரி யர்கள் மற்றும் ஆலய அறங்காவலர் சபையினர்கள், பரிபாலனசபை யினருக்கு முதற் கண் நன்றிகள்.

இம் மலரை வெளியிட்டு வைக்கும் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் எமது அன்புக்குரிய பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கட்கும், இம்மலர் தொகுப் பாசிரியராக உதவிய யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத துறை விரிவுரை யாளர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்தசர்மா அவர்கட்கும் எமது நன்றிகள்.

இம்மலரின் மேல் அட்டைப் படங்களை அழகாக அச்சுப்பதித்து உதவிய ஊரெழு சிவஸ்ரீ. வைத்திய நாதக் குருக்கள் சபேச சர்மா அவர் கட்கும் நன்றிகள்.

எமது தந்தையாருக்கு இப்பெரும் விழாவை ஏற்பாடு செய்து நடாத்திய கோப்பாய் வாழ் மக்களுக்கும் விழாவை தலைமை வகித்து நெறிப்படுத்திய பவள விழா சபைத் தலைவர் கோப்பாய் கிறிஸ் தவ கல்லூரி அதிபர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கட்கும், அவர் தம் தலைமையிலான பவள விழா சபையினருக்கும் எமது நன்றிகள்.

பவள விழாவுக்கு பண உதவிகள், சரீர உதவிகள் மற்றும் ஆலோசனை வழங்கிய நண்பர்கட்கும், இலங்கை இந்து குருமார் ஒன் றிய செயலாளர் பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகர சர்மா அவர்கட்கும் மற்றும் இம் மலரை அச்சுப் பதிவு செய்துதவிய ஆனந்தா அச்சகத்துக் கும், விழா தொடர்பான பிரசுரங்களை அச்சுப் பதிவு செய்த மீனாட்சி அச்சகத்தாருக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

—குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

பிரதிஷ்டா கிரியா கலாபமணி உத்தர கோவை சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் ஐயா அவர்களின் 28. 2. 99 இன்று நடைபெற்ற பவள விழாவை யொட்டி இம்மலர் வெளிவருகிறது.

இம் மலருக்கு எமது அன்பான வேண்டுகோளுக் கிணங்கி ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய பெரியோர்களுக்கு எமது நன்றிகள். பெரும்பாலானவர்களின் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் முழுமையாக இல்லாமல் குருக்கள் ஐயாவுடன் தொடர்புடைய விடயங்களை மட்டும் சுருக்கி பிரசுரித்துள்ளோம். அதற்காக எம்மை மன்னித்து எமது இடர்களைப் புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றோம்.

இம் மலரை வெளியிட்டு வைக்கும் எமது அன்புக்குரிய இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ. ப. கோபால கிருஷ்ண ஐயர் அவர்கட்கும்; இம் மலர் தொகுப்பாசிரியராக உதவிய யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மா அவர்கட்கும் எமது நன்றிகள்.

இம்மலரின் படங்களை அச்சிட்டுத் தந்த ஊரெழு சிவஸ்ரீ வைத்திய நாதக் குருக்கள் சபேசசர்மா அவர்களுக்கும், அழகாக அச்சுப் பதித்து உதவிய ஆனந்தா அச்சகத்தினர்க்கும், பல வழிகளில் உதவிகள் புரிந்த ஏனையோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

ந. சிவகடாட்சம்
தலைவர்
பவள விழாச் சபை

கோப்பாய்
28. 2. 1999



UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA
ARCHIVES
University of Jaffna
187281
Library

அச்சுப்பதிப்பு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
★ LIBRARY ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org